உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 27 ஞாயிற்றுக்கிழமை (12.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 290

# அமைச்சுகளைக் கண்காணிக்க

# ஜனாதிபதியின் இரகசியக் குழு!

## அமைச்சர்களின் செயல்திறனைக் கண்டறிவதற்கு

கொழும்பு,செப்ரெம்பர்12

அமைச்சுக்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, அமைச்சர்களின் செயறல்திறனை மதிப்பிட்டு, ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கவென விசேட புலனாய்வு இரகசியக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தமது இரண்டாவது பதவிக் காலத்துக்காக சத்தியப் பிரமாணம் செய்யும்போது, புதிய அமைச்சரவை உருவாக்கப்படும். அதற்கு முன்னதாக, அமைச்சர்கள் நியமனத்தின்போது விசேட புலனாய்வு இரகசியக் குழுவின் அறிக்கை கவனத்தில் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(27ஆம் பக்கம் பார்க்க)

## சாந்தபுரத்தில் நேற்று மீள்குடியேற்றம்

தருமபுரம்,செப்.12

வவுனியா மெனிக்முகாமில் இருந்து அழைத்துவரப்பட்டு சாந்தபுரத்தில் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நேற்று சனிக்கிழமை தமது சொந்த வாழ்விடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

(27ஆம் பக்கம் பார்க்க)

## அதிருப்திக் குழுவின் கோரிக்கை ரணிலால் நேற்று நிராகரிப்பு

கொழும்பு,செப்.12

ஐ.தே.கட்சியின் மறு சீரமைப்புக் கூட்டத்தை நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நடத்த வேண்டும் என்ற கட்சியின் 25 நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நேற்று தலைமைப் பீடத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் கூட்டத்தை செவ்வாய்க்கிழமை கூட்ட வேண்டும். இல்லாவிட்டால் சுயேச்சைக் குழுவாக இயங்கப் போவதாக 25 நாடாளுமன்ற உறுப்பினர்களின் சார்பில், தயாசிறி ஜயசேகர அறிவித்திருந்தார்.

(27ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டின் அபிவிருத்தி தொடர்பான அரச கூட்டங்களில் கூட்டமைப்பு பங்கு பற்றும்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

குடாநாட்டின் அபிவிருத்தி மற்றும் மீள்குடியமர்வு தொடர்பான விவகாரங்கள் குறித்து அரசாங்கம் நடத்தும் கூட்டங்களில் பங்கேற்பது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி இன்று யாழ்.செயலகத்தில் நடத்தவுள்ள அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கூட்டத்தில் பங்குபற்றுமாறு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அந்த அழைப்பை ஏற்று இன்றைய கூட்டத்தில் தாம் கலந்துகொள்ளவிருப்பதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

(27ஆம் பக்கம் பார்க்க)

## அசத்தியது இளவாலை சென்.ஹென்றிஸ் தேசிய மட்ட உடற்பயிற்சியில் முதலிடம்!

### ஊர்காவற்றுறை அன்ரனிஸ் 2 ஆம் இடம்

யாழ்ப்பாணம், பெப். 13

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. இரண்டாம் இடத்தை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி தட்டிக்கொண்டது.



ஹென்றியரசர் கல்லூரி அணி

அகில இலங்கைப் பாடசாலைகள் பங்கு கொண்ட தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டி நேற்று நீர்கொழும்பு மரியஸ் ரெலா வித்தியாலய மைதானத்தில்

(27ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வரும் அமைச்சர் பௌசி இன்று செயலக நிகழ்வுகளில் பங்கேற்கிறார்

### அவசர செயற்பாட்டு நிலையமும் திறந்து வைக்கப்படும்

யாழ்ப்பாணம்,செப்.12

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம் பௌஸி இன்று உத்தியோகபூர்வ விஜயமாக யாழ்ப்பாணம் வருகிறார். யாழ். மாவட்ட செயலகத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ள அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடலில் அமைச்சர் பங்கேற்கவுள்ளார்.

தொடர்ந்து செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ அவசர செயலக மாநாட்டு மண்டபத்தையும் திறந்து வைக்கிறார்.

யாழ்.செயலகக் கலந்துரையாடலில் அமைச்சர் பௌஸி மற்றும் அமைச்சின்

(27ஆம் பக்கம் பார்க்க)

## 'பல்டி' அடித்த எம்.பிக்களுக்கு சுக்கிரதிசை; அவர்களில் 6 பேருக்கு அமைச்சர் பதவிகள்!

கொழும்பு,செப்.12

அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய எதிர்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் அறுவருக்கு அமைச்சர் பதவிகளும் ஏனைய 11 பேருக்கு உயர் அந்தஸ்துடன் கூடிய பதவிகளும் வழங்கப்படவுள்ளன. அதற்கு வசதியாக அமைச்சரவை விஸ்தரிக்கப்பட உள்ளதாக அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

அரசமைப்புக்கான 18ஆவது திருத்தத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(27ஆம் பக்கம் பார்க்க)

இறக்குமதி வரி நீக்கம்..

சிங்கர்®

பொருட்களின் விலை குறைப்பு..

(011) 5 400 400 www.singersl.com




SL-SF40RCN

முன்னர் ரூ. 8999/-

இப்பொழுது ரூ. 7999/-

குறைந்த விலையில் மேலும் பல பொருட்கள்

SINGERPlus

Metro Travels இன் புதிய கிளை இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்...

Our Services :
- Air Tickets for all Countries
- Group Packages
- Visa Arrangements
- Travels Insurance
- Hotel Reservations
- Pilgrimage Tours
- Indian Railway Booking

IATA

With 15 Years Experience



62/33, Stanley Link Road. JAFFNA.

Tel : 021 567 3555, 021 5673666
Fax : 021 222 0404

Metro Travels & Tours (Pvt) Ltd

Branch Office : No 345, Galle Road Bambalapitiya, Colombo - 04.
Tel: 2 553 440, 2 553 441, 5 736 715, 5 736 716
Fax: 2 553 800 , E-mail : info@metrotravels.lk

Head Office: 403 1/2, Galle Rd, Colombo - 06
Tel: 0112 362766, 0112 361937, 0112 363626, 0115736713, 14. Fax: 0112 361888.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உதயன் வெள்ளிவிழாவையொட்டி மாணவர் திறனறியும் போட்டிகள்

மாணவர்களே!

★ உங்களின் பொது அறிவு, பொது உளச் சார்ந்த திறனை நிரூபிக்க ஒரு பொன்னான வாய்ப்பு!

★ 25ஆவது அகவையைப் பூர்த்தி செய்யும் உதயனின் வெள்ளி விழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான திறனறியும் விசேட போட்டி

★ தவறாது பங்குபற்றி உங்கள் திறமையை வெளிப்படுத்தி பரிசுகளையும் சான்றிதழ்களையும் வென்றிடுங்கள்

கோட்டம், வலயம், மாகாணம் ஆகிய நிலைகளில் மூன்று பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்படும்.

பிரிவு I - தரம் 6, 7, 8 மாணவர்கள்
பிரிவு II - தரம் 9, 10, 11 மாணவர்கள்
பிரிவு III - தரம் 12, 13 மாணவர்கள்

பதிவுகள் பற்றிய விவரமும் மேலதிக தகவல்களும் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உதயன்

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் கல்விக் கண்காட்சியும் சாகச நிகழ்வுகளும் - 2010

### மாணவர் மகிழ்களம்

* பாடரீதியான புத்தாக்க படைப்புகளும் முன்வைப்புகளும்.
* கல்வி, தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும்.
* சாகச நிகழ்வுகள்: ரயிலில் பயணம், பாதாளக் கிணற்றில் கார் மற்றும் சைக்கிள் ஓட்டம், வட்டக் கூட்டினுள் ஓடும் மோட்டார் சைக்கிள், மெரிக்கோ ரவுண்ட், பலூன் துள்ளல், மந்திர வித்தைகள்.

இடம்: யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

காலம்: 16 தொடக்கம் 19 செப்ரெம்பர் 2010 வரை கல்விக்கண்காட்சியும்
16 தொடக்கம் 21 செப்ரெம்பர் 2010 வரை சாகச நிகழ்வுகளும்.

கல்விக் கண்காட்சி: இலவசம் (காலை 8 மணி - மாலை 4 மணி வரை)

சாகச நிகழ்வுகள்:
நுழைவுச்சீட்டு மாணவர்களுக்கு 30/=, ஏனையோருக்கு - 50/= (காலை 8 மணி - இரவு 10 மணி வரை மாணவர்களும், பொதுமக்களும் பார்வையிடலாம்.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊடக அனுசரணை
உதயன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் கதிரவன் ஹாட்வெயர் முகாமையாளர்
**யதுகுலசிங்கம் வைகுந்தன்**
அவர்கள் 09.09.2010 அன்று அகால மரணமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தனங்களப்பு வீதி,
சாவகச்சேரி. (சி-5/0530) **ஜெகா எலக்ரிக்கல்ஸ்.**

## கண்ணீர் அஞ்சலி



இராசரத்தினம் செந்தில்பிரகாஷ்
(சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற அலுவலர்)
சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற அலுவலராகிய **இ.செந்தில்பிரகாஷ்** அவர்கள் அகாலமரணமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரமடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-570849) **நீதிமன்ற அலுவலர்கள்.**

## நிழல் அல்ல நிஜம் !

ஒரே வாரத்திலே;
கரும்புள்ளிகள், சுருக்கங்கள், கருமைநிறம் நீங்கி அழகிய நிறம் !
முடி உதிர்வு, உதடு கருமை, உடற்பருமன் கூட்டுதல்/குறைத்தல் மற்றும் முகப்பருக்களுக்கான சிகிச்சைகள்.
பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்.

SANEYA BEAUTY PALACE,
132, Kachcheri Nallur Road, Jaffna.
(சிட்டு பூங்கா அருகில்) We Care Always.
அழையுங்கள் - 0774011129

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் டிப்போக்கு அருகில் பலாலி வீதியில் கடை கட்டடம் கட்டுவதற்கு உகந்த காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : T.P. No - 0776916169

## கார் விற்பனைக்கு

ஒஸ்டின் A 40 பரீனா 3 சிறி உடன் விற்பனைக்குண்டு.
021 222 8174, 0776675080

## அறைகள் வாடகைக்குண்டு

V.T.S. வீதி, உரும்பிராய் தெற்கில் சகல அடிப்படை வசதிகளையும் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. அரச ஆசிரியர்கள், மாணவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: அ.நல்லதம்பி, மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். T.P. 021 222 4011

## வீடுகள் விற்பனைக்குண்டு

சுண்டுக்குளிப் பகுதியில் 2 வீடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772492268, 004531313529

## தேவை

பகல் நேரத்தில் பெண் ஒருவருக்குப் பாதுகாப்பாக இருக்கக் கூடிய பெண் ஒருவர் தேவை. வேறு எவ்வித வேலைகளும் வழங்கப்படமாட்டாது. நகரப் பகுதியில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.
0777630215 (பிற்பகல் மட்டும் தொடர்பு கொள்க)

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

கொழும்பில் வசிக்கும் யாழ். தம்பதியினருக்கு 2 சிறு பெண்குழந்தைகளை அன்புடன் பராமரிப்பதற்கும், வீட்டு வேலையில் உதவி புரியவும் 18 - 30 வயதில் நற்குணமுள்ள பெண்ணொருவர் தேவை.
தொடர்பு: 0773819855, 0773456779

## விற்பனைக்கு

நல்ல இன 54 நாள்கள் வயதுடைய பெண் கொக்கர் ஸ்பனியல் கறுப்பு நாய்க்குட்டிகளும், பெரிய ஆண் 2 வருடங்களுடைய கொக்கர் ஸ்பெனியல் வெள்ளையும் மண்ணிறமுடையதும் விற்பனைக்குண்டு.
26, பாரதி வீதி, நாயன்மார்கட்டு. தொடர்பு: 0776721687

## விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் கணனி ஒவ்செற் அச்சகம் ஒன்று விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0777165589

## VAN விற்பனைக்கு

52xxxx தொடர் இலக்கமுடைய liTE ACE வான் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0771171872

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், பட்டதாரி, அரச சேவையில் பணிபுரியும் 1967 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரம், இளமைத் தோற்றமுள்ள மணமகளுக்கு பொருத்தமான நற்குணமுள்ள மணமகன் தேவை.
தொடர்பு: 077 6367051

## வீடு வாடகைக்கு

யாழ்.புகையிரத நிலையத்துக்குச் சமீபமாக 3 அறைகள், சமையல் அறை, குளியல் அறை, வாகனத்தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 021 490 1637

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை. **விஜயகுமார்.**

## கட்டடம்/வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரில் கடந்த ஆறு வருட காலமாக சேவையாற்றிவரும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.நகரை அண்மியதாக, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, பிரவுண் வீதி, கே.கே.எஸ்.றோட், பலாலி வீதி அல்லது நகர்ப் பகுதியில் குறைந்தது 1500 சதுர அடி விஸ்தீரணமுள்ள கட்டடம் / வீடு வாடகைக்குத் தேவை. (குறைந்தது 3 வருட வாடகைக்கு) தொடர்பு: 0779120686

## கண்ணீர் அஞ்சலி



**யதுகுலசிங்கம் வைகுந்தன்**
அவர்களின் மறைவு அறிந்து கவலையடைகின்றோம். அதேநேரம் அன்னாரின் மரணத்தால் கவலையுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சிறி சிவராம் றேடர்ஸ்.** 322/C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (10326)



## இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு...!

சர்வதேச இணைய வானொலி வாரணம் FM இன்
ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சிநெறி
யாழ்ப்பாணத்தில் விசேட பிரிவு ஆரம்பம்!

### ஒலிபரப்பாளர், இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறியில் இணைவதற்கு...

1. G.C.E. O/L பரீட்சையில் தமிழ் திறமைச் சித்தியுடன் A/L பல்கலைக்கழக அனுமதிக்கான பெறுபேறு (இம்முறை A/L பரீட்சையில் தோற்றியோர் தமிழ் விசேட சித்தி)
2. கணினித்துறை, கலைத்துறையில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ்கள்.

இவற்றுடன் கூடிய சுயவிபரக்கோவையை 25.09.2010 க்கு முன் எமது யாழ். அலுவலக முகவரிக்கு அனுப்புங்கள்.

:: இப்பயிற்சிநெறியில் இணைவோருக்கு ::

* சர்வதேச புகழ்பூத்த மூத்த ஒலிபரப்பாளர்கள் சிரேஷ்ட ஊடகமுன்னோடிகளால் விரிவுரைகள்.
* ஊடகங்களில் உள்ளகப்பயிற்சி, நேரடி கலையகப்பயிற்சி, வாரணம் எவ்.எம்.இல் பகுதிநேர ஒலிபரப்பாளர், களப்பயிற்சியும் கல்விச் சுற்றுலாவும்.
* இலங்கையின் பிரபல வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு.
* பூர்த்திசெய்யும் தகுதியானோருக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

பல்கலைக்கழக அனுமதிக்கான பெறுபேறு உள்ளோருக்கான விசேட பிரிவும் ஆரம்பம்.
இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியை தபால் மூலம் கற்பதாயின் விண்ணப்பத்தின் இடது மேல் மூலையில் "தபால் மூல இதழியல்" என குறிப்பிடவும்.

**வாரணம் FM**
www.varanamfm.com
No.58, Joseph Dias Mawatha, Modara, Colombo-15. T.P No: 0112521281 E-mail: varanamfm@yahoo.com
Jaffna Office: Managing Director, No.20, Kannathiddy Road, Jaffna.

## வெற்றிடங்கள்

யாழ்.நகரில் புதிதாக திறந்துள்ள பல்தேசிய கம்பனி ஒன்றிற்கு கீழ் காணப்படும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

Marketing Executive (Male / Female)
Training Marketing Executive (Male / Female)
Office Assistant - அலுவலக உதவியாளர்

**கல்வித் தகைமை:** க.பொ.த. சாதாரண சித்தி
க.பொ.த. உயர்தர சித்தி

**வயது:** 25 ற்கு உட்பட்டவர்கள்

Salary + Commision

மேற்காணப்படும் விண்ணப்பங்களுக்குரிய தகைமையுடையோர் தங்கள் தகைமைகள் அடங்கலாக சுயவிவரக் கோவை ஒன்றினை கீழ் காணப்படும் முகவரிக்கு 17.09.2010 ற்கு முன் அனுப்பி வைக்கவும்.

Education Technology,
No.186, Kasthuriyar Road,Jaffna.

மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய தொ.பே. இலக்கம்:
(103185) 077 3434823, 021 567 1130, 021 567 9568

## சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியின் ஆசிகள்

ஸ்ரீ ஆனந்த நடராஜ சுவாமியின் திருவருளால் இன்றைய நன்னாளில் சிதம்பரம் ஸ்ரீ சிவ பரமேஸ்வர தீஷிதர் ஐயாவின் இல்லத்தில் தில்லைவாழ் அந்தண பெரியோர்கள் ஆசி கூறி வாழ்த்த உபநயன பிரம்மோபதேசம் பெறும் சி.கீதப்பிரிய சர்மா அவர்கள் மென்மேலும் சிவாச்சார்ய பாரம்பரிய கடமைகளை சிறப்புடன் ஆற்றவும், கல்வியில் சிறப்புத் தகைமைகள் பெறவும், "கோப்பாய் சிவம்" என அன்போடு அழைக்கப்படும் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா அவர்கள் பணியை புதல்வன் கீதப்பிரிய சர்மா அவர்களும் தொடர ஆசிகள் கூறி வாழ்த்துகிறேன்.

(103150) **ப.மனோகரக் குருக்கள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தேசிய உயர் கல்வி அமைச்சினால் 2009ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 'தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது' என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் 2ஆம் இடம்பெற்ற அல்வையூர் கவிஞர் உயர்திரு K.P.திருத்துவராஜா அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
எ.எட்வின் (ரகு)
T.V.S.மோட்டோர்ஸ் வேக், பருத்தித்துறை.
ப.வசந்தன் (அன்ரூஸ்)
(101963) சி.விஜயதாஸ்.


DHL WORLDWIDE EXPRESS

## திருமுருகன் கொம் ரெக்

உலக நாடுகளுக்கு ஆகாய கடல் வழி மார்க்க பொதிகள் சேவை

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் ஆவணங்கள் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

DHL விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை DHL

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

நாட வேண்டிய முகவரி
259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06

46. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
[illegible] வீதி, நெல்லியடி
திருநகர் வீதி, கிளிநொச்சி
44, மில் றோட், வவுனியா

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம் பெறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தபுரம் மக்களின் மீள்குடியமர்வு நாள் பதிவுகள்



மீள்குடியேறிய மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துரையாடும்போது...



அரச அதிகாரிகளிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் விவரம் கோரி கலந்துரையாடும்போது....



சாந்தபுரம் கிராமத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு இந்திய அரசு அன்பளிப்புச் செய்த தறப்பாள்களை கரைச்சி பதில் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

'இந்திய மக்களின் அன்பளிப்பு' என்ற லேபலுடன் அவை கையளிக்கப்பட்டன. வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கும் இந்திய அரசின் அன்பளிப் புப் பொருள்கள் நாளைமறுதினம் வழங்கப்படவுள் ளன.



இந்திய அரசு வழங்கிய உதவிப் பொருள்களுடன் மீளக்குடியமரும் ஒருவர்....



சாந்தபுரம் மக்கள் மீள்குடியேறிய பின்னர் தமது கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்வதற்காக நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் அன் பளிப்புச் செய்துள்ளார்.

அந்தக் கிராம மக்கள் நேற்று மீள்குடியேறிய போது அவரின் சார்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மற் றொரு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அந்த இயந்திரத்தை மீள்குடியேறியவர்களிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம்.



சாந்தபுரம் கிராமத்தில் நேற்று மீள்குடியேறிய மக் களுக்குத் தேவையான குடிதண்ணீரை சேமித்து வைப் பதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், அவர்களுக்கு பிளாஸ்ரிக் வாளிகளை வழங்குவதைப் படத்தில் காணலாம்.



வழங்கப்பட்ட வாளிகளுடன் பயனாளிகள்..

## மோ.சைக்கிளில் பயணித்த நீதிமன்ற ஊழியர் மரத்துடன் மோதி சம்பவ இடத்திலேயே பலி

தென்மராட்சி, செப்.12

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியோர மரத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி அந்த இடத்திலேயே உயிரிழக்க நேரிட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10.20 மணிக்கு நுணாவில்குளம் கண்ணகை அம்மன் கோயில் சந்தியில் இடம்பெற்றது.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இராசரத்தினம் செந்தில்பிரகாஷ் (வயது 29) என்ற சாவகச்சேரி நீதிமன்ற ஊழியரே சம்பவத்தில் உயிரிழந்தவர் ஆவார்.

இவரது சடலம் சாவகச்சேரி பொலிஸாரால் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப் பிள்ளை சடலத்தைப் பார்வையிட்டு சாவகச்சேரி வைத் தியசாலை பொறுப்பதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்திய பின்னர் உறவினரிடம் சடலத்தைக் கையளிக்கு மாறு உத்தரவிட்டார்.

வைத்திய கலாநிதி க.தயாளன் பிரேத பரிசோதனை நடத்தினார்.

(ஒ-207-131)

## நீர்வேலி முருகையா ஆலய கும்பாபிஷேகம் இன்று

யாழ்ப்பாணம்,செப்.12

நீர்வேலி தெற்கு முருகையா ஆலய கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.10 மணிதொடக்கம் 8.30 மணி வரையுள்ள சுபநேரத்தல் நடைபெறவுள்ளது. காலை 6 மணிக்கு யாகபூசை, கும்பம் வீதியுலா, பிரதட்சினம் 7 மணிக்கு தூபி அபி ஷேகம் என்பன நடைபெற்று தொடர்ந்து கும்பாபிஷேகம் இடம்பெறும். (204) (சிறப்பிதழ் 21ஆம் பக்கத்தில்)

## மீளக்குடியேறிய வடமராட்சி கிழக்கு மக்களுக்கு உதவிப் பொருள்கள்

### நாளைமறுதினம் விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.12

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியே றிய மக்களுக்கான உதவிப் பொருள்கள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்களில் 353 குடும்பங்களைச் சேர்ந்த 1072 பேர் கடந்த 9ஆம் திகதி மீள்குடியேற்றுவதற்காக அழைத்துச்செல்லப்பட்டு தற்காலிகமாக ஐந்து பொது இடங்களில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

நாளைமறுதினம் பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மற்றும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த உத்தியோகத் தர்கள் ஆகியோர் மக்களை நேரில் சென்று சந்தித்து பொருள்களைக் கையளிக்க உள்ளனர்.

அதன்போது சிமெந்துபைகள், தகரம், விவசாய உபகரணங்கள், 5ஆயிரம் ரூபா பணம் என்பனவே வழங்கப்படவுள்ளன. அன்றைய தினம் பொதுமக்கள் தமது சொந் தக் காணிகளுக்குச் சென்று துப்புரவு செய்ய அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை மீளக்குடியேறிய மக்க ளுக்கான அடிப்படை வசதிகள் அனைத் தும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-15)



பிரபல சிங்கள எழுத்தாளர் ஜானகி சூரியராய்ச்சி யாழ்.மாநர சபை மண்டபத்தில் வைத்து உதவி மேயர் இளங்கோவிடம் பொது நூலகத்திற்கென ஒரு தொகுதி நூல்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:லக்ஸ்மன்)

## கிளிநொச்சியில் ஆடைத் தொழிற்சாலை; நாமல் நாளை அடிக்கல் நடுவார்

யாழ்ப்பாணம்,செப்.12

கிளிநொச்சி அறிவியல் நகரில் நிறு வப்படவிருக்கும் பிரமாண்டமான ஆடைத் தொழிற்சாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை இடம்பெற வுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பியுமான நாமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இந்தத் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை நட்டு வைப்பார்.

ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கக் கூடியதாக நிறுவப்படவிருக்கும் இந்த ஆடைத் தொழிற்சாலைக்கான அடிக்கல் நடும் விழாவில் கிளிநொச்சி மாவட் அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உள்ளிட்டோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள் ளனர். (ஒ-14)

## சாவகச்சேரியில் இன்று கிரிக்கெட் போட்டி

தென்மராட்சி,செப்.12

சாவகச்சேரி சிவன்கோயிலடி மாரி விளை யாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் 20 ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டி இன்று சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக கட்டளைத் தளபதியும் சிறப்பு விருந்தினர் களாக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், வர்த்தகப் பிரமுகர் வை. சிவராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிய மயில் 2010



"நாட்டிய மயில்" - நடனப் போட்டி 2010ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

2004,2005 ஆகிய ஆண்டுகளில் வெற்றிகரமாக நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான நாட்டிய மயிலுக்கான போட்டி இவ்வருடமும் நடைபெற உள்ளது

**இப்போட்டியில் வெற்றிபெறும் நாட்டியமயிலுக்கு கிரீடமும் பெறுமதிவாய்ந்த பரிசில்களும் வழங்கப்படும்.**

**வெற்றிபெறும் நாட்டியமயிலுக்கான ஆசிரியரை கௌரவித்து சான்றிதழ்களும் வழங்கப்படும்.**

விண்ணப்பதாரிகளுக்கான தகுதிகள்:

- வயது - பலரின் வேண்டுகோளுக்கிணங்க வயதெல்லை 15 தொடக்கம் 25 வரையாக நீடிக்கப்பட்டுள்ளது.
- விடயம் - பதவர்ணம் (தமிழில் அமைதல் வேண்டும்)
- நேரம் - 25 நிமிடங்கள் மட்டும்
- போட்டியாளர் பக்கவாத்தியம் அல்லது ஒலிநாடாவை உபயோகிக்கலாம்

விண்ணப்பதாரிகள் தங்களுடைய முழுப்பெயர், பிறந்த திகதி, பால், வதிவிட முகவரி, அடையாள அட்டை இல, வதியும் மாவட்டம், தற்போதைய தொழில் (மாணவர்கள் என்றால் குறிப்பிடவும்), தொலைபேசி இல, நடன ஆசிரியர் அனுமதிக்கடிதம், நாட்டிய துறையில்லுள்ள அனுபவம், தகைமை என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

முக்கிய குறிப்பு :
இது ஒரு போட்டி நிகழ்ச்சி ஆகையால் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
விண்ணப்பதாரிகளிடம் எந்தவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது

**விண்ணப்ப முடிவுத்திகதி - 20.09.2010**

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய இடங்கள்:

இல: 07, குளுதாகொட வீதி,கல்கிசை.
தொலைபேசி இல: 0113 088961
தொலைநகல்: 0112 722125

இல: 29, பழம் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 2227542

## திருமண சேவை

15 வருட திருமண சேவை நிறைவினை முன்னிட்டு வேல் அமுதன் பாரிய சேவைக் கட்டணக் குறைப்பு! விவரங்களை "சுயதெரிவு முறை முன்னோடி" சர்வதேச, மூத்த திருமண ஆற்றுப் படுத்துநர் வேல் அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி, மாலையிலோ சனி, ஞாயிறு நண்பகலிலோ தொடர்புகொண்டு விசாரித்தறிக!
தொலைபேசி: 0112360488,0112360694, 0114873929

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் பஸ் நிலையத்துக்கு சமீபத்தில் நான்கு அறைகளுடன் வாகனத் தரிப்பிட வசதியுடைய வீடு வாடகைக்கு உள்ளது. வர்த்தக மற்றும் ஏனைய நிறுவனங்களின் செயற்பாட்டுக்குப் பொருத்தமானது.

தேவைப்படுவோர், தொ.பே.இல. 0773187949 மூலம் இன்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 முதல் மாலை 4 மணிவரை தொடர்பு கொள்ளவும். தரகர்கள் வேண்டாம்.

வாடகை பேசித் தீர்க்கலாம்.

## கல்வி

Well-designed, Learner-centred
PRACTICAL ENGLISH COURSES
For : Professionals / Postgraduate Students / Medical Students / University Students / Accountancy Students / Teacher Trainees / Nursing Students / Employed Adults / Ladies / School Leavers / A' Level - O' Level Students.
மேலதிக விவரங்களுக்கு :
T.P. 0773212711. Courses commencing soon.
உங்கள் விண்ணப்பங்களை சுயவிவரங்களுடன் தபாலில் அனுப்பவும்.
EDUCATION DEVELOPMENT CENTRE,
528, பலாலி வீதி, திருநெல்வேலி.

# Vacancies at

Kandy
Colombo

Reception / Course Councillor
**Lecturers or Instructors**
Web / Graphic Designing
AutoCAD
Computer Hardware & Networking
Computerized Accounting
English

**Salary :** Negotiable
Call for **Immediate** Appointment

**iCM**
10, Ramakrishna Rd,
Wellawatta.
Tel : 0772 469 469

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்

**(நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, தாவடி இந்துக் கல்லூரி, நைஜீரியா-கானோவில் உயர்கல்வி கற்பித்த இளைப்பாறிய கணித ஆசிரியர்)**



மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் 08.09.2010 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் லீலாவின் அன்புக் கணவரும் நித்திலா, குலேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாஸ்கரன், மதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் அஷ்வின், ஐஸ்வர்யா, கோகிலன், கிறிஷாந் ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் கமலா பிரதாபனின் இளைய சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 4164, Sheppard Ave. East இல் அமைந்துள்ள Ogden Funeral Home இல் 11.09.2010 சனிக்கிழமை மாலை 5 - 9 மணிவரையும் பார்வைக்கு வைக்கப்பட்டதுடன், இன்று (12.09.2010) ஞாயிற்றுக் கிழமை காலை 9 - 11 மணிவரையும் அதே மண்டபத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 11.30 மணியளவில் Bowmanville மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு :**
**416-431-2691**

(வி/570911)

## சுற்றுலா பயணி காயமுற்றார்

தென்மராட்சி, செப். 12

நாவல் பழத்துக்கு எறிந்த கல் சுற்றுலாப் பயணியின் தலையைத் தாக்கிக் காயப்படுத்தியது. நேற்று முன்தினம் பளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரம்புக்வெலவைச் சேர்ந்த மகிந்த (வயது-19) என்பவர் தலையில் காயமடைந்தார். அவர் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். (ஒ-207)

## BRITISH COUNCIL IELTS

**அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையம்**

யாழ் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்...!

இப்பொழுது **BBS** ஆனது **British Council** இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது

Academic, General
IELTS பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் யாழ்குடாநாட்டு மாணவர்கள்,
BBS நல்லூர் வளாகத்திற்கு நேரில் வருகை தந்து, பரீட்சைக்கட்டணத்தைக்கட்டி பதிவு செய்யலாம்..

### BBS இல் ஆங்கில வகுப்புக்கள்

- Certificate in English
- Diploma in English
- Advanced Diploma in English
- IELTS

- O/L, A/L கற்ற மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்.
- தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்.
- வசதிக்கேற்ப நேர அட்டவணை.
- பரீட்சைக்குப் பதிவு செய்பவர்களுக்கு இலவச கையேடுகள்.
- ஒலிக்கருவி பேச்சுத்திறன் பயிற்சிகள்.
- பரீட்சை வழிநடத்தல் வகுப்புக்கள்.
- வாரஇறுதிநாட்கள் மற்றும் வார நாட்களில் வகுப்புக்கள்.
- இலக்கண வகுப்புக்கள்
- பேச்சுத்திறன் பயிற்சிகள்.
- தமிழ் மொழியில் விளக்கங்கள்.
- விசேட செயற்திறன் பயிற்சிகள்.

## பாலர் பாடசாலை

British Business School — Where Students Come First

சர்வதேச தரத்தில், ஆங்கிலத்துடன் தமிழிலும்

8th Anniversary

| Play Group 2-3 Years | Montessori 3 - 4 Years | Pre-School 4 - 5 Years |
|---|---|---|

விசேட நிகழ்ச்சிகள்:
English Concert, ...

அச்சுவேலியில், அரசினர் வைத்தியசாலை அருகே புதிய வளாகம் நல்லூர் தேர் (07.09.2010) அன்று ஆரம்பம்.

எல்லா வளாகங்களிலும் புதிய தவணைக்கு அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

### BBS இன் 9 வளாகங்கள்

- நல்லூர்: 140, கோவில் வீதி, நல்லூர்.
- கோப்பாய்: பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி.
- நீர்வேலி: 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி.
- சாவகச்சேரி: சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை.
- மானிப்பாய்-1: 252, ஆலடி சந்தி, யாழ் வீதி மானிப்பாய்.
- மானிப்பாய்-2: சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
- மல்லாகம்: Lakshmi Cottage (புதிய நீதிமன்ற அருகாமை) கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.
- புலோலி: ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை.
- அச்சுவேலி: அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை.

# BRITISH BUSINESS SCHOOL

140, கோவில் வீதி, நல்லூர்.
Contact: 021 222 5796, 0773627055, 0776646357.

Where Students Come First

## கலாலயா பயிற்சியகம்

- A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
- வெளிநாடு செல்ல விருக்கும் மங்கையரே!
- உள்ளூரில் தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
- இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

**இதோ உங்களுக்கான 3மாத பயன்மிகு பயிற்சிகள்**

**கிழமைநாள் பயிற்சிகள் ஆரம்பம்: 22-09-2010**

- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்
- கூந்தல் அலங்காரம்
- பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- கைவேலை
- பூவேலை

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் 15 நாள் Facial, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure, முடிஅயன்செய்தல், Perming, நிறமூட்டுதல், முடிவெட்டுதல் பயிற்சிகளும் நடைபெறும்.

தையல் அறிவு அற்றவர்களுக்கான **6மாத உடை தயாரித்தல் பயிற்சிகள்**
தையல் தெரிந்தவர்களுக்கான 15 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேற்குறிப்பிட்ட தையல் பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறவுள்ளன.
ஆரம்பம்: 19-09-2010 (ஞாயிறு)

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

25 வது ஆண்டில்
**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

# IELTS அவசியமில்லை STUDY IN UK

யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில்...



லண்டனில் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு
★ கல்விக் காலத்திலேயே குடும்பத்தினரை U.K.க்கு அழைக்கும் வாய்ப்புகள்

★ Admission within 3 days
★ 100% Visa உத்தரவாதம் - ஆவணங்கள் சரியாக இருப்பது முக்கியம்
★ ஆகக் குறைந்த கல்வித் தகைமை(O/L)
★ விசா நிராகரிக்கப்படுமானால் பணத்தைத் திரும்பப் பெறும் வசதிகள்
★ விரைவான பயண ஏற்பாடுகள்
★ ... Sponsor வசதிகள்

இறுதிச் சந்தர்ப்பத்துக்கு முந்திக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு: 0770871616

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாதைகளை மூடியிருக்கும் பற்றைகளுக்குள் இன்னமும் மறைந்திருக்கும் பயங்கரங்கள்

சனங்களின் காலடித் தடங்களுக்காகக் காத்திருந்த நிலங்களுக்கு இப்போதுதான் நிம்மதி. சூனியப் பிரதேசங்களாக - எந்த வித அரவமுமற்று - மயானபூமிபோல ஒரு சில வருடங்களாக காட்சியளித்த இடங்களில் மீண்டும் வசந்தத்தின் துளிர் வெளிக்கிளம்பியுள்ளது. மீள்குடியேற்றங்களும், அதன் மூலம் மக்களுக்குத் திரும்பக் கிடைத்துள்ள சொந்த நிலத்தின் மீதான வாழ்வும் நாட்டில் இயல்பு நிலை தோன்றியுள்ளதை நிரூபணமாக்கி வருகின்றன. ஏதிலிகளாக, அகதிகளாக அலைந்த மக்களுக்கு மீண்டும் வளமான வாழ்வு நோக்கிய ஆரம்பப் புள்ளியை மீள் குடியேற்றங்கள் ஏற்படுத்தியுள்ளன. அரச அதிகாரிகளும், படைத்தரப்பும், அரசும் மக்களின் மீள்குடியமர்வு விடயத்தில் காட்டி வரும் அக்கறை




அனைவராலும் வரவேற்கப்படக்கூடிய விடயமாகவே இருந்து வருகின்றது.

ஆயினும் ஏற்கனவே மீள்குடியமர்ந்த மக்களின் கதைகளை கேட்க முனைகின்றபோது அவற்றில் வசந்தத்தின் வாசனைக்குப் பதிலாக இன்னமும் அவர்களின் குரல்களில் அச்சமும் வேதனையுமே அதிகமாக வெளிப்படுகின்றன. புதிய புதிய பிரச்சினைகள், வெவ்வேறு வடிவங்களில் மீள்குடியமர்ந்த இடங்களில் தலைதூக்கியுள்ளன. முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்தபோது ''எங்கட இடத்துக்கு விட்டால் காணும். பச்சைத்தண்ணிய குடிச்சாவது எங்கட

நிறையவே இருந்தன. நீண்டகாலம் மக்கள் அப்பகுதியில் வசிக்காததால் அடிப்படைத் தேவைகளுக்குரிய கட்டமைப்புகள் அனைத்துமே மீளமைக்கப்படவேண்டி இருந்தன. மின்சாரவசதி, வீதிப்புனரமைப்பு என்பன இவர்களது உடனடித் தேவைகளாக இருந்தன. ஏற்கனவே பாதைகள் சீரற்ற தன்மையோடு இருந்த மணியந்தோட்டத்தில் நீண்டகால இடைவெளியால் மனிதர்கள் போக்குவரத்தையே செய்ய முடியாத அளவுக்கு மாறியிருந்தன. யுத்தகாலத்தில் இரு தரப்பாலும் மாறி மாறி பிரயோகிக்கப்பட்டிருந்த ஆயுதங்களின் பாதிப்பால் பாதைகளில் பாரிய பள்ளங்களும் - கிணறுகள்போல - உருவாகியிருந்தன. இது தவிர ஆள் அளவு உயரத்துக்கு ஓங்கி வளர்ந்திருந்த பற்றைகள் பல பாதைகளை மூடியிருந்தன. மணியந்தோட்டப் பகுதியில் சில பாதைகளில் நீங்கள் பயணித்தால் பற்றை எது? பாதை எது? என்று கண்டு பிடிக்க நிறையவே கஷ்டப்பட வேண்டியிருக்கும். இந்த லட்சணத்தில் நடந்து கூடச் செல்ல முடியாத அளவுக்கே அந்தப் பகுதியில் பெரும்பாலான வீதிகளின் நிலை இருந்தது. குறித்த வீதிகளை செப்பனிடுவதற்கோ ஆகக் குறைந்தது வீதிகளில் காணப்படும் பாரிய பள்ளங்களை நிரப்புவதற்கோ கூட இதுவரை எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளார்கள். வீதிகள் பயணிக்கவே முடியாத அளவுக்கு படுமோசமாக இருக்கும்போது அவர்களின் மீள்குடியேற்றத்தால் உண்டாகின்ற பலாபலன்களும் தாமதமடையவே செய்கின்றன.

யுத்தம் இந்தப் பகுதியை நெருங்குவதற்கு முன்பாக யாழ்ப்பாணத்தின் ஏனைய பிரதேசங்களைப் போலவே மணியந்தோட்டமும் மின்னொளியில் பிரகாசித்த பகுதிதான். ஆனாலும் யுத்தம் இந்த ஊரின் மகிழ்ச்சியைத் தின்றதுபோலவே மின்சார இணைப்புகளையும், மின் கம்பங்களையும் விழுங்கிவிட்டது. அதன் பிடியிலிருந்து தப்பித்திருந்தவற்றை திருடர்கள் விட்டு வைக்கவில்லை. மின்விநியோகத்திற்கான எந்தவொரு அடிப்படைக் கட்டமைப்பும் இல்லாத நிலையில், மணியந்தோட்டப் பகுதி மக்கள் மீள் குடியமர்ந்து இரு மாதங்களுக்கு மேலாகியும் இன்னமும் இருளிலேயே இருக்க வேண்டியுள்ளது. மின் விநியோகம்

மணியந்தோட்டப் பகுதியில் உள்ள பெரும்பாலான கிணறுகளின் மேற்தளக் கட்டுகள் இடிந்தும் அவற்றின் அருகே புதர்கள் படர்ந்தும் இருப்பதால் இவற்றினுள்ளும் சிறுவர்கள் தவறி விழுந்து விடுவார்களோ என்றும் இப்பகுதி மக்கள் பயங் கொண்டுள்ளனர். இவற்றின் காரணத்தால் சிறுவர்களின் நடமாடும் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு சிறு வயதில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சந்தோஷமும் சிறையிலடைக்கப்பட்டுள்ளது. பல தடவைகள் பற்றைகளுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்ட வெடிபொருள்கள் மக்களின் பயத்தை இன்னும் அதிகரித்திருக்கின்றன. (இவ்வாறு இனங்காணப்பட்ட வெடி பொருள்கள் பற்றி இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டு அவை அகற்றப்பட்டு விட்டன) இந்தப் பற்றைகளுக்குள்


இதற்குப் பெயர்தான் வீடாம்!

வெடிபொருள்களோடு இன்னொரு பயங்கரமும் கூடவே இருப்பதாகக் கூறப்படுகின்றது. அவைதான் படைகளையே நடுங்கச் செய்யும் பாம்புகள். அண்மைக் காலமாக இப்பகுதியில் பாம்பினால் கடியுறுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்திருக்கிறது. பற்றைகளின் மிதமிஞ்சிய பெருக்கம் பாம்புகள் வசிப்பதற்கு ஏதுவான சூழலை உண்டாக்கி விட்டது. ஆனால் எந்தப் பற்றைக்குள் எந்த வெடிபொருள் இருக்குமோ என்ற பயத்தில் பற்றைகளையும் எவரும் வெட்டத் துணியவில்லை. எனினும் இன்னும் இன்னும் வளர்ந்து கொண்டே வருகின்ற பற்றைகள் கூடவே மக்களின் பயத்தையும் வளர்த்துச் செல்கின்றன.

# கொழும்புத்துறை மணியந்தோட்ட மக்களின் பரிதாபநிலை

சீவியத்தை போக்காட்டுவம்'' என்பதே எல்லா மக்களினதும் அங்கலாய்ப்பாக இருந்தது. அவர்களுக்கு அப்போது இருந்த ஒரே பிரச்சினை சொந்த இடங்களுக்குச் செல்லாமல் முகாம்களுக்குள் அடைபட்டுக் கிடப்பதுதான். எப்போதுமே விலகல் ஒரு பொருள் மீதான அதீத ஈர்ப்பை உண்டு பண்ணுவது வழமை. இது தமது நிலத்தைப் பிரிந்து முகாம்களில் தவம் கிடந்த மக்களுக்கும் பொருந்தும். ஆனாலும் சொந்த இடங்களுக்கு குடியேற அனுமதி கிடைத்தபின் தான் அவர்களுக்கு மீள் குடியேற்றத்தில் எழுகின்ற உண்மையான பிரச்சினைகள் தெரிய வருகின்றன. அப்படித்தான் தமது சொந்த இடங்களுக்கு நீண்ட காலத்தின் பின்னர் திரும்பி வந்த கொழும்புத்துறை மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த மக்களின் நிலையும் இருக்கிறது.

கடந்த கால யுத்த சூழலால் கொழும்புத்துறை மணியந்தோட்டப் பகுதி மக்கள் தமது இருப்பினை நகர்த்த வேண்டிய அவசியம் எழுந்தது. இடம்பெயர்ந்தவர்கள் ஒவ்வொரு திக்குகளாக சிதறிப் போனார்கள். இவர்கள் எந்தவொரு நலன்புரி நிலையத்திலும் தங்கியிராது தமது உறவினர் வீடுகளிலேயே தஞ்சம் புகுந்ததால் ஆளுக்கொரு திசையில் பிரிந்து வாழ நேரிட்டது. ஆனாலும் எத்தனை நாளைக்குத்தான் 'பிறத்தியாரின்' வீட்டில் வாழ முடியும்? சொந்த மண் மீதான ஏக்கம் இந்த மக்களையும் வாட்டியெடுத்தது. இவர்களின் ஏக்கத்தைத் தீர்ப்பதுபோல மணியந்தோட்டப் பகுதியில் மீளக்குடியமர்வதற்கான அனுமதி இந்தவருடம் ஜூன் மாதத்தில் வழங்கப்பட்டது.

மீளக்குடியேறுவதற்கான அனுமதி கிடைத்தவுடனேயே தமது வீடுகளையும், காணிகளையும் மீண்டும் தரிசிப்பதற்காக ஓடிச்சென்ற மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது. மொட்டையடித்தது போல அவர்களது வளவுகளில் உள்ள வளங்கள் எல்லாமே சுரண்டப்பட்டு வெறுமையாகவே இருந்தன. வீடுகளும் தலைகளில்லாமல் - கூரைகளின் மரங்கள், ஓடுகள், 'சீற்றுகள்' எல்லாமே களவாடப்பட்டு - முண்டங்களாக மாறியிருந்தன. மக்களுக்கு முன்னரேயே தமது கைவரிசையை மணியந்தோட்டத்தில் சில விஷமிகள் காட்டியதன் பலாபலனே இத்தகைய ஏமாற்றத்தை மக்களுக்கு அளித்துள்ளது. 'சரி! போனது போகட்டும். இனியாவது இருப்பதைக் கொண்டு நமது வாழ்வை வளமாக்குவோம்' என்ற வைராக்கியத்தோடு தமது வாழ்வை கட்டியெழுப்ப மணியந்தோட்டப் பகுதி மக்கள் முடிவெடுத்தனர்.

ஒரு சில தொண்டு நிறுவனங்களின் உதவியோடும், தமது சொந்தப் பணத்தைக் கொண்டும் இருப்பிடங்களை தற்காலிகமாக வசிப்பதற்குரிய வசதிகள் கொண்டதாகவும் மாற்றியமைத்தனர். ஆனாலும் பிரச்சினைகளும் தேவைகளும் அவர்களுக்கு

நடைபெறுவதற்கான எந்தவொரு சிறு எத்தனம் கூட இடம்பெறாதிருப்பதால் 'நாங்கள் இந்த ஜென்மத்தில் மின்சார வெளிச்சத்தையே காண மாட்டோமோ?' என்ற சந்தேகம் இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டிருப்பதையும் தவறாகக் கொள்ள முடியாது. உரியவர்கள் இனியாவது உடன் நடவடிக்கை எடுத்து இத்தனை நாளும் இருண்டு கிடந்த இந்த மக்களின் வாழ்வில் ஒளியேற்ற முன்வர வேண்டும்.


கட்டு உடைந்து, வாய்பிளந்து நிற்கும் கிணறுகள்

இதைவிட இன்னொரு பயங்கரத்துக்கும் முகம்கொடுத்தபடி 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்ற நிலையில் பரிதவிக்கிறார்கள் மணியந்தோட்ட மக்கள். மக்கள் குடியிருக்காத காணிகளிலும், குடியிருப்பை அண்டியுள்ள வளவுகளிலும், பயன்பாடு குறைவான பாதைகளிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பற்றைகளுக்குள் போரின் மிச்ச சொச்சங்களாக எஞ்சியிருக்கும் வெடிபொருள்கள் ஒளிந்திருக்கின்றன. யுத்தத்தின்போது இரு தரப்பாலும் ஏவப்பட்ட எறிகணைகள், துப்பாக்கி ரவைகள், மிதிவெடிகள், ஏனைய வெடிபொருள்கள் என்பன கருமை படர்ந்த இந்தப் பற்றைகளுக்குள் ஒளிந்திருந்து மனித உயிர்களைக் காவு கொள்வதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உரிய முறையில் வெடிபொருள்களை அகற்றாமையாலேயே எந்த நேரமும் நெஞ்சு பதற, வாழ்க்கையை நகர்த்த வேண்டியிருப்பதாக மக்களில் பலரும் கருத்துத் தெரிவித்தனர். குறிப்பாக இப்பகுதிகளிலுள்ள குழந்தைகள், சிறுவர்கள் வெளியே நடமாட அனுமதி கொடுப்பதற்கு பெற்றோர்கள் தயங்குகின்றனர். ஏனென்றால் அவர்கள் வெளியே விளையாடும்போது தவறுதலாக இந்தப் பற்றைகளிலுள்ள வெடிபொருள்களால் பாதிப்படைந்து விடுவார்களோ என்ற அச்சமே இதற்குக் காரணம். இது தவிர

மணியந்தோட்டத்து மக்கள் படுகின்ற இந்தத் துன்பங்கள் போதாதென்று மணல் அகழ்வுக்காரர்களும் இவர்களின் இருப்புக்கு ஆப்பு வைக்கும் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆள்களற்ற காணிகளில் இரவு நேரங்களில் உழவு இயந்திரங்களோடு படையெடுப்பவர்கள் அந்தக் காணிகளிலுள்ள மணலை சட்ட விரோதமான முறையில் அகழ்ந்தெடுத்துச் செல்கிறார்கள். இவ்வாறு தமது மண்ணின் வளம் கண்முன்னே பறிபோவதைக் கண்டும் கையாலாகாதவர்கள்போல நிற்பதைத் தவிர தம்மால் வேறொன்றும் செய்ய முடியாதிருப்பதாக இந்தப் பகுதி மக்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

மீள்குடியமர்ந்தோருக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுத்தல், தொழில் உபகரணங்களை வழங்குதல், வாழ்வாதார அடிப்படைப் பொருள்களை வழங்குதல் என்பன போன்ற செயற்பாடுகளை நிகழ்த்தி மக்களின் வாழ்வை மேம்படுத்த தொண்டு நிறுவனங்கள் தம்மாலான பணியைச் செய்து வருவதையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். எனினும் மீள்குடியமர்ந்தோருக்கான அரை நிரந்தர வீட்டுத் திட்டம் 50 பேருக்கு பதிவு செய்யப்பட்ட போதும் 30 பேருக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ளவர்களுக்கும் இத்திட்டம் கிடைக்க வழி செய்வது உரியவர்களின் கடமையாகிறது.

உண்மையில் மீள்குடியேற்றம் என்பதன் அர்த்தம் அவரவர் சொந்த இடங்களில் வாழ அனுமதிக்கப்படுதல் மட்டுமே என்றுதான் இங்கு கொள்ளப்படுகிறது. ஆனாலும் உண்மையில் மீள்குடியேற்றத்தின் பொருள் அதுவல்ல. தமது பழைய வாழ்வினை அவர்கள்

ஓளண்யன்
தட்சிகா

அடைவதற்கான சகல வழிகளையும் உருவாக்கிக் கொடுப்பதன் மூலம் தொலைந்துபோன தமது சந்தோஷங்களை மக்கள் திரும்பவும் மீட்டெடுப்பதே மீள்குடியேற்றம் என்பதற்கு முழு அர்த்தத்தைக் கொடுக்கின்றது. ஆனால் அது இங்கு பின்பற்றப்படுகிறதா என்பது கேள்விக்குறியே. அவரவர் இடங்களில் - அதுவும் நீண்டகாலம் மனித வாடை இல்லாமல், வாழ்வாதார கட்டமைப்புக்கள் சிதைந்துபோன பகுதியில் - வாகனங்களில் மக்களைக் கொண்டு சென்று இறக்கிவிட்டு வருவதை மட்டுமே மீள்குடியேற்றம் என்று அடையாளப்படுத்திக் கொள்ளாமல் இனிவருங் காலங்களிலாவது மக்களின் வாழ்வில் பூரண ஒளியை உண்டுபண்ணக் கூடிய, அவர்களின் வாழ்வு எந்தவித இடையூறுகளிலும் சிக்கி தடம் மாறிப் போகாத வண்ணம், எல்லா மக்களையும் போலவே அவர்களும் வாழ்வதற்கான நிலையை, ஏற்படுத்திக் கொடுக்கும் உண்மையான மீள்குடியேற்றத்திற்காக அனைவரும் பாடுபட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

## VACANCY – Senior Medic

The HALO Trust is a British based Non Governmental Organisation undertaking humanitarian mine action across the world. The HALO Trust is operational in Sri Lanka to contribute to safe social and economic development at the national, regional and local level within Sri Lanka by reducing the risk presented by remnants of conflict.

**Senior Medic for The HALO Trust**

The ideal candidate should meet the following criteria:

- ★ Experience in work as a senior medic staff of minimum 3 years
- ★ Knowledge of English language
- ★ Driving licence
- ★ Readiness to work long hours and travel to distant locations across North Sri Lanka
- ★ Readiness to work to other locations on request

All the interested candidates should submit their CV and relevant documents (copies) not later than 13th September 2010 to the following addresses:

**The HALO Trust**
**12 Nallur Cross Road**
**Nallur , Jaffna**

Email: mail@halosrilanka.org

**Please note that only short listed candidates will be contacted and invited for the interview and practical test. This post is on a renewable contracts basis, subject to donor funding. The HALO Trust believes in equal opportunities and both sexes are encouraged to apply.**

## வீடு வாடகைக்கு/குத்தகைக்கு

23,கச்சேரி நல்லூர் வீதியில் யாழ். செயலகம், தபாலகம், பஸ் நிலையம், பிரபல பாடசாலைகளுக்கு அருகில் 6 அறைகள், Hall, சாப்பாட்டறை, சமயலறை, விறாந்தை, garage 3 கழிவறை, 2 குளியலறை, தொலைபேசியுடன் புனரமைக்கப்பட்ட விசாலமான அழகிய வீடு உடன் வாடகைக்கு/ குத்தகைக்குண்டு. NGO கம்பனிகள், கல்வி நிறுவனங்கள், வியாபார ஸ்தாபனங்களுக்கு மிகவும் ஏற்றது.

Lodgeக்கு கொடுக்கப்பட மாட்டாது.

021 222 3867, 0777713366

### சமூகப் பராமரிப்புக் குறித்த பயிற்சிப் பட்டறை

சமூக சேவைகள் அமைச்சின் சமூக பராமரிப்புச் செயற்றிட்டம் தொடர்பான 5 நாள் வதிவிடப் பயிற்சியொன்று எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 18ஆம் திகதி வரை நுவரெலியாவில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலிருந்தும் இப் பயிற்சிநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

இப்பயிற்சிநெறியின் முதலாம் கட்டம் சென்றமாதம் முதல் வாரத்தில் கொழும்பில் 6 நாள்களாக அப்பயிற்சி நடைபெற்றது.

(த-121)

## சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை

LiSVin

லிஸ்வின் இன்வெஸ்ட் மன்ற் லிமிடெட்
56/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் பதியப்பட்டது.

யாழ்.நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு எமது சேவைகளை விரிவுபடுத்துவதற்கு 30 வயதிற்கு உட்பட்ட சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:- **Sarangan@lisvin.com**
0777997998 0772152156

Purview of JOBSNET
**Ministry of Labour Relations and Productivity Promotion**

20 வருட அனுபவம் | - தபால் மூலம் - தமிழ் மொழி மூலம் | ஆறு மாத கால டிப்ளோமா Course Length - Six Month Sep 2010 to Feb 2011

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம் மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2010**

# STUDY IN LONDON

INTAKE Sep/Nov/Feb

**ALL PAYMENTS AFTER VISA** | **INDIA UKRAINE SINGAPORE** | **VIST VISA EUROPE** | **IELTS** Individual Class WITH BOARDING

HND,BBA,B.com,BBM,BA,MA, BEng,LLB,MBBS, MA,MSc,MBA,PhD

O/L, A/L சித்தி உள்ள மாணவர்களுக்கு IELTS இல்லாமல் UK செல்ல ஓர் அரிய சந்தர்ப்பம். O/L மாத்திரம் உள்ளவர்களுக்கு 100% வெற்றிகரமாக Individual IELTS Class, தங்குமிட வசதியும் ஒழுங்கு செய்து தரப்படும்.



**INTERNATIONAL CITY COLLEGE**

No: 07,W.A Silva Mawatha Wellawatte, Colombo - 06 , Sri Lanka Tel : 0114 594 104
தமிழ் மொழிமூல அழைப்புகளுக்கு - 0771250789 - 0772 955 977

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 . 03 . 1940 | உதிர்வு 12 . 09 . 2005



அமரர்
## ஆசீர்வாதம் தோமஸ்

அறிவுப் புதையலொன்று ஆழப் புதைந்ததுவோ
பொய்யறியோம் பிள்ளைகள் மனம் பொசுங்கிப் பேதலித்ததுவோ
நல்லறிவுப் பொக்கிசமே நடை ஓய்ந்து நலிந்த தென்ன
எத்துறையில் பேசுவதற்கும் என்றும் நீ சளைத்ததில்லை
புத்துழுக் கவிதைமறை வித்தகனாய் நீ திகழ்ந்தாய்
எத்தடையும் இல்லாமல் சட்டவிதி நீ உரைப்பாய்
பாசத்தின் திருவுருவே நீ பறந்து போனதெங்கே?
உலகமெனும் அரங்கினிலே உன்பாகம் முடிந்ததுவோ
அலையோசைச் சிரிப்பொலியை ஐயா நாம் கேட்பதெப்போ
நிலையாத புவி வாழ்வில் நிலையானாய்எம் மனதில்

மெலிஞ்சிமுனை, கரம்பன்,
ஊர்காவற்றுறை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவமயம்
Om Sri Ram Jai Ram Jai Jai Ram

# வன்னியில் காணி தேவை

அநாதைக் குழந்தைகள்- விதவைகள் வாழ்வு மேம்பாட்டுக்காக வன்னிப் பகுதியில் காணிநிலம் தேவை.

கிளிநொச்சிக்கு அண்மித்ததாக, மின்சாரம், நீர்வளம் உள்ள பிரதேசத்தில் 50 ஏக்கருக்கு மேற்பட்டதாக நிலம் தேவைப்படுகின்றது. இந்நிலத்தில் அநாதைக் குழந்தைகள், விதவைகள் நல்வாழ்வுக்காக எமது இந்து அமைப்பினால் ஜாதி, மதவேறுபாடற்ற, சமத்துவ, மனித மாண்புகளின் அடிப்படையில் விரைவான செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட குருவருள், திருவருள் பாலித்துள்ளது.

**காணி உரிமையாளர்கள் மாத்திரம் விலை மற்றும் பூரண காணி விவரங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.**

முகவரி

**V.P.Paramalingam**
'Anandasagara'
42,Shrubbery gardens,
Colombo 04.
e.mail: param@choithram.com
Mobile: 0097150552035l

**V.P.Balasingham**
B2.Inner Harbour Road,
Trincomalee.
e.mail: avpbala@yahoo.com
Mobile: 0773403027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வின்றித் தொடரும் மின்வெட்டு

யாழ். மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக அமுலில் இருந்து வந்த மின்வெட்டு ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை முடிந்த கையோடு ஓரளவு சீரடைந்துள்ளது. இது குறித்துக் கல்வியியலாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். யாழ். மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைக் குழப்புவதற்காகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதொன்றா எனவும் சிலர் கேள்வியெழுப்புகின்றனர். அவ்வாறான சாத்தியக் கூறுகள் இல்லை எனக் கொள்ளப்பட்டாலும் மிக முக்கியமான பரீட்சையான உயர்தரப் பரீட்சை நடைபெற்ற வேளையில் இது இடம்பெற்றமை பலரையும் விசனத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

பரீட்சை ஆரம்பிப்பதற்கு முதல் நாள் ஆரம்பமாகிய மின்வெட்டு உயர்தரப் பரீட்சை முடிவடைந்த அடுத்த நாள் மீண்டும் சீர்செய்யப்படுவதாக அறிவிக்கப் பட்டுத் தற்போது ஓரளவு சீரடைந்துள்ளது. இதனாலேயே பலருக்கும் மேற்குறிப்பிட்ட கேள்விகள் எழுந் திருக்கும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.


கடந்த சில வருடங்களாகப் பரீட்சைகள் நெருங்கும் வேளைகளில் இந்த மின்வெட்டுகள் இடம்பெற்று வந்தமை அனைவருக்கும் தெரிந்த - அறிந்த விடயம் தான். அப்பொழுது கடும் யுத்த சூழ்நிலை. குடாநாட்டில் மக்களுக்கான அத்தியாவசியப் பொருள் களைக் கூடப் பெற முடியாத கஷ்டநிலை. பலத்த எரி பொருள் தட்டுப்பாடு. குடாநாட்டுக்கும் வெளியிடங் களுக்குமான போக்குவரத்து வசதிகள் ஒழுங்காக இருக்கவில்லை. இப்படிப் பல்வேறு நெருக்கடியான சூழ்நிலை அப்போது இருந்தது.

அந்த வேளையில் கிடைக்கும் வளத்தில் திருப்தி காணவேண்டிய தேவை அனைவருக்கும் இருந்தது. அந்த வேளையில் மின்சார சபையின் யாழ். அலு வலகம் தன்னால் இயன்றளவு முயற்சி செய்து குடா நாட்டு மக்களுக்கான மின்சாரத்தை வழங்கி வந்ததை யாரும் மறுக்க முடியாது. அந்த நேரத்தில் கிடைத்த மின்சாரத்தால் குடாநாட்டு மக்களும் பெரிதும் பயனடைந்தனர் என்பதையும் மறுப்பதற்கில்லை.

## ஒப்பந்த நிறுவனங்கள் உரிய அளவு மின்சாரத்தை வழங்கமுடியாமைக்கான பின்னணி என்ன?

யுத்த சூழ்நிலை தீவிரமடைந்த அந்தக் காலப் பகுதியில் குடாநாட்டுக்கு மின் வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனங்களும் தமது ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்ட அளவு மின்சாரத்தை ஒப்பந்த காலத்தின் ஒரு சில நாள்களாவது வழங்கவில்லை என்பதும் அப்பட்டமான உண்மை. அவ்வாறு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட அளவு மின்சாரத்தை வழங்கும் நிலையில் ஒப்பந்த நிறுவனங்களால் கொண்டு வரப்பட்ட மின்பிறப்பாக்கிகள் இல்லை. அந்தளவு வலுவுடையனவாக மின் பிறப் பாக்கிகளின் செயற்திறன் இருக்கவில்லை. காரணம் அவை புத்தம் புதிய மின் பிறப்பாக்கிகள் அல்ல. எங்கேயோ ஓடுமட்டும் ஓடிக் கழித்து விடப்பட்டவை தான். ஒன்றுக்கும் உதவாதவை அந்த மின் பிறப்பாக்கிகள். அதற்கு இந்த மின்சாரசபை அதிகாரிகள் என்ன செய்ய முடியும். அரசினால் வழங்கப்படு வதைத் தானே அவர்கள் பொது மக்களுக்குக் கொடுக்க முடியும். இல்லாத ஒன்றைக் கொண்டு வா என்றால் அவர்கள் தான் எங்கே போவது? பாவம் அவர்கள். பொதுமக்களின் விமர்சனங்கள் எல்லாம் இந்த அதிகாரிகளின் தலைகளில் தான். இதன் பின்னணியில் பல பெருச்சாளிகள் உள்ளார்கள் என்பதை அவர்களால் எப்படிப் பொது மக்களுக்குக் கூறமுடியும். அப் படி வாய் திறந்தால் அடுத்த நாள் அந்த அதிகாரி தனது கதிரையில் இருக்க முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதனால் இருக்குமட்டும் இருந்து செய்ய முடிந்ததைச் செய்துவிட்டுப் போவோம் என்ற நிலையிலேயே யுத்த காலத்தில் பணியாற்றிய பல அரச அதிகாரிகள் இருந்தனர் என்பதும் தெரிந்த விடயம்.

யுத்த காலத்தில் குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்குவதற்கென மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பின்னணியில் பலத்த அரசியல் தலையீடுகள் இருந்தன என்பது பொதுமக்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தப் பின்னணி யில் இருந்த அரசியல் தலைகளால் பல மில்லியன் ரூபா பணம் 'கொமி ஷனா'கப் பெறப்பட்டே ஒப்பந்தங்களும் செய்யப்பட்டன. அந்த ஒப்பந்தங்களின் பயனாகக் கிடைத்தவை தான் அந்தப் பழைய மின் பிறப்பாக்கிகள். அவை வேறு நாடு ஒன்றில் நன்றாகப் பாவிக்கப்பட்டு கடைசி வரை பிழிந்தெடுக்கப் பட்டவை. இனிமேல் பாவிக்க இயலாதெனக் கழித்து விடப்பட்டவை. அவற்றைப் புதிய மின் பிறப் பாக்கிகள் எனக் கதை புனைந்து ஒப்பந் தம் செய்து அதில் தாமும் 'கொமிஷன்' அடித்துக் கொண்டு யாழ்ப்பாணத் துக்குக் கொண்டு வந்த பெருமை இதன் பின்னணியில் இருந்தவர்களையே சாரும்.



இவ்வாறு கொண்டு வரப்பட்ட பட்டையடித்த மின்பிறப் பாக்கிகளை ஒருவாறு திருத்தி ஒரு சீருக்குக் கொண்டு வந்து அதிலிருந்து மின்சாரம் பெறுவதற்கு யாழ். மின்சாரசபை பட்டபாடு பெரும்பாடு என்று தான் சொல்லவேண்டும். ஆலையில்லா ஊருக்கு இலுப்பம் பூ சர்க்கரை என்பதைப்போல அன்றைய நிலையில் அந்தள வுக்காவது மின்சாரத்தை வழங்கிய மைக்காக மின்சார சபையின் யாழ். அலுவலகத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆயினும் அந்த நிலைமை இப்போதும் தொடர் வதை ஏற்றுக் கொள்ள முடியாதல்லவா?

முன்னர் குடாநாட்டுக்கு மின் வழங்குவதற்கு ஒப்பந் தம் செய்யப்பட்ட 'கூல் எயார்', 'அக்றிக்கோ' நிறுவனங் கள் தமது ஒப்பந்த காலத்தில் எவ்வாறு செயற்பட்டனவோ அவ்வாறே தான் இப்போது ஒப்பந்தம் செய்யப்பட்டு மின் வழங்கும் பணியில் ஈடுபட்டுவரும் 'நொதேர்ன் பவர்' நிறுவனமும் செயற்பட்டு வருகின்றமையை இங்கே சுட்டிக் காட்டியாக வேண்டும். மின்சார சபை 'நொதேர்ன் பவர்' நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தபோது யாழ். குடா நாட்டு மக்களின் தேவைக்குப் போதுமான மின்சாரத்தை அந்த நிறுவனம் தாராளமாக வழங்கும் என்றே கூறப் பட்டது. எனினும் நிலைமை அவ்வாறு இல்லை. அவ் வாறு மின்வெட்டு இல்லாமல் முழுமை யான மின்சாரத்தை வழங்கும் நிலையில் 'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் மின் பிறப்பாக்கிகளும் இல்லை என்பது இப்போது வெளிச்சம். மின்வெட்டு இந்த வாரம் சீராகும். அடுத்தவாரம் முதல் 24 மணி நேர மின்விநியோகம் என அதிகாரிகள் பொது மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக அறிக்கை விட்டுக் கொண்டிருந் தாலும் அது நடைமுறையில் அவர்களின் கையாலாகாத் தனமாகவே இருந்து வருகின்றது. எனவே குடாநாட்டுக்கு இப்போதைக்கு மின்வெட்டு இல்லாத மின் விநியோகம் சாத்தியம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

**-அதிரன், நேசன்**

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து விட்டது. குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான போக்குவரத்தில் இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. எந்த நேரத்திலும் எங்கும் போய்வரலாம். பொருளாதாரத் தடை இல்லை. எரி பொருள் தட்டுப்பாடு இல்லை. எல்லாம் வேண் டிய அளவில் யாழ்ப்பாணத்திலேயே பெறக் கூடிய நிலைமை உள்ளது.

அத்துடன் யாழ். குடாநாட்டில் பல்வேறு துறைகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளும் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அபிவிருத்தி நடவடிக்கை களுக்காகப் பெரும் தொகைப் பணம் கோடி கோடியாகக் கொட்டப்படுகின்றது. வடக்கின் வசந்தம் என்ற பெயரில் பல்வேறு புனரமைப்புப் பணிகள், கட்டட நிர்மாணங்கள், வீதி அகலிப்புக்கள் எனத் தடல்புடலாக எல்லாம் வேகமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களின் மனங்களை வென்று விடவேண்டும் என்பதற்காக அரசும் அபிவிருத்தி என்ற பெயரை ஆயுதமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. எனினும் குடாநாட்டுக்கான இந்தச் சீரற்ற மின் விநியோகத் தில் மட்டும் எவரும் அக்கறை காட் டியதோ கவனம் செலுத்தியதோ இல்லை. அமைச்சர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள், திணைக்களங்களின் உயரதிகாரிகள் என அனைவரும் இப்போது யாழ்ப்பாணத் துக்கு வந்து போகிறார்கள். இவர்களுக்கும் இங்கு அமுலில் உள்ள மின்வெட்டு கண்ணுக்குத் தெரியவில்லையா? எனப் பொதுமக்கள் பலரும் கேள்வி எழுப் பியுள்ளனர். தற்போது போதிய வசதிகள், வாய்ப்புக் கள் உள்ளபோதும் தொடர்ந்தும் மின்வெட்டு இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தொடர்ந்தும் அரையும் குறையுமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் 'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் மின் பிறப்பாக்கிகள் மூலம் சீரான மின் விநியோகத்தைப் பெற முடியுமா என்பது கேள்விக்குறியே தற்போது குடாநாட் டின் முழுமையான மின் விநியோ கத்துக்கு 34 மெகா வாட்ஸ் மின்சாரம் தேவை. எனினும் தற் போது 15 மெகா வாட்ஸ் மின்சாரத்தையே 'நொதேர்ன் பவர்' நிறுவனத்தினால் வழங்கக் கூடியதாக உள்ளது. மிகுதியான மின்சாரம் மின்சார சபையிடம் ஏற்கனவே உள்ள மின் பிறப்பாக்கிகள் மூலம் பெறப் பட்டு ஒருவாறு குடாநாட்டு மக்களின் மின்தேவை சமாளிக்கப்படுகின்றது. அண்மையில் வலிகாமம் மேற்கில் இடம் பெற்ற பிரதே ச செயலகம் ஒன்றின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றிலும் இந்த மின் வெட்டு விடயம் கடுமையாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அத்துடன் சில வேளைகளில் உரிய அறிவிப்புக்கள் எதுவும் இல்லாமல் திடீர் திடீரென மின்சாரம் தடைப் படுகின்றது. இதனால் மின் உபகரணங்கள் பழுதடை வதுடன் பல்வேறு பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. பரீட்சை காலங்களில் அதிக நேரம் மின் வெட்டப் படுவதால் மாணவர்களும் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் அவதிப்படுகின்றார்கள்.

எனவே ஒட்டுமொத்தத்தில் குடாநாட்டில் தொடரும் இந்த மின்வெட்டு உரிய தீர்வு காணப்பட வேண்டிய தேவையும், அவசியமும் இப்போது எழுந்துள்ளது என்பதை அனைவரும் இலகுவாக உணர்ந்து கொள்வார்கள். தொடர்ந்து தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு பணத்தை வீணாக்கு வதை விட 'லக்ஸ்பான' மின்சாரத்தை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வது பயனளிக்கும் என பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். எது எவ்வாறாயி னும் யாழ்ப்பாணத் தின் மின் விநியோகத்தைச் சீர் செய்ய வேண்டிய பொறுப்பு மின் சார சபைக்கு உண்டு என்பதை அவர் கள் உணர்ந்து அதனைச் செயலில் காட்டினால் அது வரவேற்புக்குரிய விடயமே. அதனை அவர்கள் செய்வார் களா? ✱✱✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணநாள் வாழ்த்து

இன்று (12.09.2010) மணநாளில் இணையும் வல்லைச் சிவன் தேவஸ்தான பிரதமகுரு பரமேஸ்வர மனோகர குருக்களின் புதல்வன் **சிரஞ்சீவி ம.பிரதாப சர்மா** மற்றும் **சௌபாக்கியவதி பிரியங்கா** தம்பதியினரைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி நிற்கும்.

சிவஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சார்யர்,
சர்வதேச இந்துமத குருபீட
யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர்
(சிவானந்த பவனம்-சங்கானை).

தலைமைச் செயலகம்,
கொழும்பு.

## வீடு விற்பனைக்கு

பலாலி றோட், கோண்டாவில் கிழக்கில் (மேற்குப் பக்கம் வரும் றோட்டில்) கனகசபை லேனில் உள்ள லொறிச் சங்கத்திலிருந்து மூன்றாவது வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: பொ.சண்முகலிங்கம், கோண்டாவில் கிழக்கு.

## காணி விற்பனை

கொக்குவிலில் கே.கே.எஸ். வீதியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0789113645

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் கதிரவன் ஹாட்வெயர் முகாமையாளர்

**அமரர் யதகுலசிங்கம் வைகுந்தன்**

அவர்கள் 09.09.2010 ஆம் திகதி அகாலமரணம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07 ★ 02 ★ 1945

மறைவு
21 ★ 08 ★ 2008

### அமரர் கனகரத்தினம் நாகம்மா

(திதி - பஞ்சமி)

எங்கள் இல்லத்தின் ஒளி விளக்காய்
இன் முகத்தின் புது விளக்காய்
எங்கள் வாழ்வின் விடிவிளக்காய் திகழ்ந்து
எமது வாழ்வுக்கு நல்வழி காட்டிய
அன்னையின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

குடும்பத்தினர்.

(103240)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02-04-1927

மறைவு
04-09-2008



### தம்பையா நடராஜா

திதி - வளர்பிறை பஞ்சமி

அன்புத் தெய்வமே!
எங்கள் நல்வாழ்வுக்காய்
உமையுருக்கி ஒளிதந்தீர் ஐயா!
எங்கள் உயர்வுக்கு உம் சிந்தனையை
உரமாக்கி விருட்சமாகி நின்றீர் ஐயா!
வறுமையிலும் செம்மை வழி நின்று
பெருமையுடன் எமை வளர்த்தீர் ஐயா!
பொறுமை என்னும் வழி நின்று
என்றும் எம் வாழ்வில் பசுமை நினைவுகளில்
வற்றாத ஜீவநதியாக வாழ்ந்திடுவீர் ஐயா!

171/6, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.

(103248)




LG

## கண்ணையும் மனதையும் கவரும் LG தொலைக்காட்சிப்பெட்டி




மொடல் - 21FU4BG
விசேட அம்சங்கள்
- 21" தட்டையான திரை
- அல்ட்ரா ஸ்லிம் உருவமைப்பு
- AV ஸ்ரீரியோ ஒலியமைப்பு = (5Wx2)
- AVL
- குழந்தைகள் கையாள இயலாத பாதுகாப்பு பொறிமுறை
- நேரக்கணிப்பில் தானாக நின்றுவிடும் ஸ்லிப் பொறிமுறை

இலவசம்

ரூபா 33,990/- மட்டுமே

உங்கள் தொலைபேசி கட்டணங்களை செலுத்துதல் கடனட்டைமூலம் கட்டணச் சிட்டைகளைச் செலுத்துதல் மற்றும் கைத்தொலைபேசி பண நிரப்பல் இலங்கையிலுள்ள எந்தவொரு அபான்ஸ், அபான்ஸ் எலைற், JVC/Haier மற்றும் A-Z இலத்திரனியல் காட்சியறைகளில்

Dialog Airtel tigo HSBC Western Union

அபான்ஸ்


## மரண அறிவித்தல்

### கந்தராசா பத்மராணி



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தராசா பத்மராணி (09.09.2010) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பாக்கியம் தம்பதியினரின் புதல்வியும், கந்தராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், பிரகாஷ் (கனடா), பிரசாத் ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணி, தேவராசா, பத்மதேவி, செல்வராசா, மகிழராணி, நேசராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் லோகநாதன், சத்தியா, கார்த்திகேசு, பிரியா, பாஸ்கரன், வசந்தா, செல்வராஜா- இராதாதேவி, சிவானந்தராஜா -றாஜினி, ஜெகதீஸ்வரி - ஜீவரட்ணம், சிவபாலராஜா -யமுனா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.88,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

தகவல்:
கந்தராசா (கணவர்),
பிரசாத் (மகன்).
தொ.பே.0776472719

(103242)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இயக்கம் தோன்றியதற்கான காரணங்களை நீக்கினால் மட்டுமே அது அழிவது சாத்தியம்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டு அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாத அரசியல் சூழலில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட பேராசிரியர் ரட்ணஜீவன் ஃகூல் அவர்களுடன் 'தேசம்' இணையத்தளம் மேற்கொண்ட நேர்காணலின் மூன்றாவதும் கடைசியுமான பகுதி இங்கு பிரசுரமாகிறது. அவரது உரையாடல் மொழியிலேயே பதில்கள் தரப்படுகின்றன.**

கே: 2006இல் நீங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு உபவேந்தராக நியமிக்கப்பட்ட போது உங்கள் உணர்வு எப்படி இருந்தது? நீங்கள் அப் பதவியைத் தொடர்ந்தால் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் உயிராபத்து விளையும் என்ற நிலை யேற்றப்பட்ட போது உங்கள் மனநிலைஎவ்வாறு இருந்தது?

ப: என்னத்தைச் சொல்வது மனம் மிகத் தளர்ந்திருந்தேன். அமெரிக்காவில் இருந்து கூட்டி வந்த எனது பிள்ளைகள் ''அப்பா இதுவா உங்கள் யாழ்ப்பாணம்'' என்று கேட்டனர். ஒரு சில தமிழரை வைத்து எல்லாத் தமிழரையும் மறியலில் அடைக்கக் கூடாதென்று வாதாடும் நாம், ஒரு சில தமிழரின் செயலை வைத்து முழு சமுதாயத்தையும் குறைத்துப் பேசக் கூடாது என்றேன்.

துரோகி என்றும் சைவக் கோயில் உள்ள பல்கலைக் கழகத்தில் எப்படி என்னை நடமாடவிடமுடியும் என்றும் பத்திரிகையில் சிலர் கட்டுரை எழுதினார்கள். இதற்கும் நான் என் பிள்ளைகளுக்கு நினைவூட்டுவது 25 பேர் கொண்ட பேரவையில் 15 பேர் எனக்கு வாக்களித்தார்கள். மீதிப் பத்துப் பேரில் பலர் மதம் சாராக் காரணங்களுக்காக தம் வாக்கை அளியாமல் விட்டிருப்பர். ஆகவே மத்வெறி கொண்ட வர்கள் ஒரு மிகச் சிறுபான்மையானவரென்றே நாம் கருத வேண்டும் என்றேன்.

என்னை அந்த நேரம் பேணிய மாணவர், MPமார், குருமார், பொதுமக்களை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். மேலும் நான் தமிழருக்கு, குறிப்பாக வடமாகாணத் தாருக்கு செய்த காரியங்களில் சிலவற்றை (என் செயல்களை நானே எடுத்துச் சொல்வது அழகற்றதாக இருந்தாலும்) இந்தக் கேள்வியின் பட்சத்தில் கூறுவதற்கு கடமைப் பட்டுள்ளேன்.

01. 1977 -1980 காலத்தில் சுமார் 600 உபாத்தியாயர் நியமனக் கடிதங்களை நைஜீரியாவில் இலவசமாக தமிழருக்கு எடுத்துக் கொடுத்தேன். இவற்றில் பல யாழ். பல்கலைக் கழகத்தின் புதுப் பட்டதாரிகளுக்கும் கிடைத்தது.

02. இலங்கையில் கஷ்டத்துக்குள்ளாகியோர் பலரை என் பட்டதாரி மாணவராய் அமெரிக்காவுக்கு எடுத்து இன்று பெரிய உத்தியோகங்களில் வாழ வைத்துள்ளேன். சிலரை நான் என் பரீட்சைக் கூடத்திலேயே பட்டப்படிப்பு முடித்தும் உத்தியோகஸ்தராக்கி Green card எடுத்துக் கொடுத்துள்ளேன். மேலும் என் எழுத்துக்கள் காரணத்தால் அமெரிக்க மத்திய அரசின் உள் குடியேற்ற நீதிமன்றம் என்னை இலங்கையைப் பற்றிய வல்லுநர் என்று ஏற்றதன் நிமித்தம் பலர் சார்பில் இலவசமாகச் சாட்சியமளித்து தஞ்சம் எடுக்க உதவியுள்ளேன்.

03. மானியங்கள் ஆணைக்குழுவில் நான் சேர்ந்த சமயம் யாழ்ப்பாணத்தில் ஒரு வருடத்துக்கு ஒரு மாணவனுக்கு 44,000 ரூபாயும் ஏனைய பல்கலைக்கழகங்களில் சுமார் 80,000 ரூபாயும் (2004ஆம் ஆண்டுக் கணக்கு) ஒதுக்கி வந்தது. நான் இது பெரும் தவறு என்று சுட்டிக்காட்டியதும் 2005ஆம் ஆண்டு யாழ். மாணவர்களுக்கும் ரூபாய் 90,000 ஒதுக்கப்பட்டது. நான் எழுதிய முன்மொழிவின் படி வவுனியா வளாகத்திற்கு 200 மில்லியன் ரூபா கட்டட நிதி ஒதுக்கப்பட்டு கணனித் தொழில்நுட்பபீடம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருக்கும் கணனித்துறை பெருப்பிக்கப்பட்டது. திருகோணமலை வளாகத்தை கந்தளாய்க்கு மாற்றும் திட்டம் நான் எதிர்த்த தும் கைவிடப்பட்டது. இப்படியே நான் எழுதிக் கொண்டே போகாலம். ஆனால் நான் சொல்ல வருவது என்ன? ஏன் இதைச் செய்கிறேன்? சைவ மக்கள் மேல் பகையென்றால் ஏன் இவற்றைச் செய்தேன்? நான் சைவ மக்களின் பகைவன் என்று கூறுபவர்கள் சைவ மக்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள்?

கே: உங்கள் பதவியை ஏற்கவிடாமல் நீங்கள் நாட்டைவிட்டு வெளியேற யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் இப்போ முற்றாக இல்லை. வன்னி யுத்தம் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

ப: நீங்கள் சொல்வது போல ஒரு நாளும் ஒரு இயக்கத்தை முற்றாக அழிக்க முடியாது. அவ்வியக்கத்தை எழுப்பிய காரணங்கள் நீங்கினால் மட்டுமே அவ்வியக்கம் அழியும். புலிகளின் ஆதரவாளர் பலர் மிஞ்சவில்லை என்பது முட்டாள்தனம். மேலும் புலிகளினால் அழிக்கப்பட்டவர்களின் சொந்தக்காரர், அப்படிக் கொன்று, தமிழர் மத்தியில் புலிகள் ஏற்படுத்திய பகை என்ப வையே பல தமிழரை இராணுவத்துடன் இயங்க வைத்தது. புலிகளின் அழிவுக்கான காரணங்களில் ஒன்றானது. இன்று இராணுவத்தின் கையில் இறந்தவர்களின் சொந்தங்கள் அதே போல் சந்தர்ப்பம் கிடைத்தால் இராணுவத்திற்கெதிராக இயங்குவார்கள் என்பது எதிர் பார்க்க வேண்டியது. என்னைப் பொறுத்தவரை இந்தக் கொலை - மீள்கொலை வட்டம் நிறுத்தப்பட வேண்டும். அதைச் செய்வதற்கான ஞானம் அரசாங்கத்திற்கு வரவேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

யாருடைய மரணத்தையும் வைத்து நாம் மகிழ முடியாது. குறிப்பாக வன்முறையினால் கட்டாயப்படுத்தப்பட்டு ஆயுதம் தாங்கிய பிள்ளைகளை நாம் தீவிரவாதிகளென்று சொல்வது பெரிய தவறு. அரசாங்கம் இப்பிள்ளைகளைச் சீர்திருத்தும் முயற்சியில் வெற்றிபெற வேண்டும்.

கே: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36 ஆண்டு கால வரலாறு தமிழீழ விடுதலைப் போராட்டத்துடனும் பின்னிப் பிணைந்ததாகவே உள்ளது. நடந்து முடிந்துள்ள மூன்று தசாப்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது?

ப: ஆராய்ச்சியளராகிய நாம் உண்மைக்கு மட்டுமே அடிபணியக் கடமைப்பட்டுள்ளோம். இதுவே 'பிளேற்றோ' கூறியபடி பல்கலைக்கழகங்கள் - நாட்டு ஆளுமைக்கு ஆதாரம் என்ற நோக்குடன் கல்வியில் ஈடுபட வேண்டும். அரசியலுக்கோ எம் மார்க்கத்துக்கோ காரணம் வைத்து எம் ஆராய்ச்சிப் பணியைச் செய்ய முடியாது. இந்த உண்மையை மறந்ததால் தான் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு இந்த 30 வருடங்களாகக் கவலைக்கிடமான பல தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

சிங்களவரும் அப்படிச் செய்கின்றனர். ஏன் நாமும் அப்படிச் செய்யக்கூடாது என்று கேக்கிறவர்கள் சிலர். அதற்கு என்பதில் அவர்களுடைய மாதிரிப் பல்கலைக் கழகமா எங்களுக்கு வேண்டும்? அல்லது உதாரணமாக புதிய பொறியியல் பீடத்தை அரசியல் காரணங்களுக்கு கிளிநொச்சியில் போட வேண்டும் என்கிறார்கள் பலர். அப்படி நடப்பின் ரஜரட்டை பல்கலைக் கழகம் போல் இளம் பிள்ளைகளை உடைய விரிவுரையா ளர் (அதாவது அநேகர்) யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து திங்கள் பின்நேரம் அல்லது செவ்வாய் வேலைக்கு வந்து வியாழன் அல்லது வெள்ளி காலை யாழ்ப்பாணம் செல் வார்கள். செனட் பேரவை கூடும் நாள்களில் ஒரு அதிகா ரியும் வளாகத்தில் இருக்க மாட்டார். இது எமது சமூகத்தின் போலித்தனத்தை மீண்டும் காட்டுகிறது. யாழ்ப்பாணத்தில் வசதியாய் வாழும் நாம், எம் வாலிப விரிவுரையாளர்கள் தமிழ் சமூகத்திற்காக தங்கள் குடும்பங்களுடன் கிளிநொச் சியில் வாழவேண்டும் என்கிறோம். ஆனால் சரித்திரத்தில் அப்படி நடப்பதில்லை. ஒருவர் தன் குடும்பத்திற்கு முதலிடம் கொடுப்பதே இயற்கை; வழக்கம்.

# பல்கலைக்கழகத்தை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்த முயலும் சக்திகளை எதிர்க்கும் பலம் நிர்வாகிகளுக்குத் தேவை

அறிவைப் பேணி அரசியல் நோக்கங்களுக்கு பல்கலைக் கழகத்தை அடிமையாக்க முன்வரும் சக்திகளை எதிர்க்கும் பலம் பல்கலைக் கழக நிர்வாகிகளுக்கு வேண்டும். இப்பலம் இல்லாமல் இருந்ததே கடந்த 30 வருடங்களின் குறை.

கே: யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தின் உபவேந்தராக உங்களை நியமிக்கப் பல்வேறு தரப்பினராலும் அழுத்தங்கள் வழங்கப்பட்டு வருவதை 'தேசம்நெற் அறிகிறது.' யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தராகப் பணியாற்றுவதற்கான வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தால் தற்போது அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் உள்ள பதவிகளைத் துறந்து யாழ். செல்வீர்களா? அதற்கான தயாரிப்பில் நீங்கள் உள்ளீர்களா?

ப: அந்த அழுத்தங் கள் ஜனநாயக முறையில் வந்தால் அவற்றை நாம் வரவேற்க வேண்டும். நான் செல்வேனா என்பது இப்போது ஒரு கேள்வியாக அமையாது. ஏனெனில் நான் அமெரிக்காவில் என் பதவியை ஏற்கனவே ராஜினாமாச் செய்து ஓகஸ்டில் நாடு திரும்புகிறேன்.

**நேர்காணல்:- க.ஜெயபாலன்**

பேராசியர் துரைராஜா 1989இல் என்னை மின் பொறியியல் துறைக்குத் தலைவராக வரவேண்டும் என்று கேட்ட போது என் மனைவியின் Ph.D பட்டப்படிப்பு முடிந்ததும் என் 7ஆம் வருட விடுமுறையை எடுத்துக் கொண்டு 1993இல் வருவேன் என்று வாக்களித்திருந்தேன். யுத்த காரணத்தால் அவரது பொறியியல் பீடத் திட்டங்கள் பலிக்கவில்லை. 1995 இல் என் நீண்ட காலத்தி திட்டங்களுக்கமைய ஊர் சென்றேன். ஆனால் யாழ்ப்பாணத்தில் உத்தியோகம் கிடைக்கவில்லை. நான் பொறியியல் பீடத்தை அமைக்க உதவுவேன் என்று சொல்லியும் சிவில் பொறியியல் பதவியையே விளம்பரப்படுத் தினர். தகுந்த விண்ணப்பதாரி இல்லையென்று தெரிந்தும் மீண்டும் சிவிலையே விளம்பரப்படுத்தினர். மின் துறையைச் சேர்ந்த நான் விண்ணப்பிக்க முடியவில்லை. சரி கணனித் துறைக்குச் செல்வோம் என்று வெளிக்கிட் டதும் நடந்தது தெரிந்ததே. சரி மனைவி, பிள்ளை களை ஆகிலும் அனுப்புவோ மென்று அவர்கள் இரசாயனப் பதவியை விளம்பரப்படுத்திய போது என் மனைவி விண்ணப்பம் அனுப்பினார். பல மாதங்களின் பின் அதையே நாம் மறுத்த கட்டத்தில் அடுத்த நாள் நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணம் வருமாறு கொழும்பில் இருந்த அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் உடனடியாகத் தொலை பேசியில் விரும்பினாலும் வரமுடியாதென்று முறையிடப் பட்ட போது ''பரவாயில்லை அடுத்த முறை விளம்பரம் வரும் போது விண்ணப்பியுங்கள்''



**பேராசிரியர் ரட்ணஜீவன் ஃகூல்**

என்றார்கள். மானியங் கள் ஆணைக்குழுவிற்கு முறையிட்ட போது, அவர் விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் மீண்டும் தெரிவுக் குழுவைக் கூட்டக் கட்டளையிட்ட னர். அதற்கிணங்க தெரிவுக்குழு கூடி, ''வெற்றிடம் இல்லை'' என்று முடி வெடுத்தது. உடனடியாக வழக்கு வைத்தோம். ஆனால் நாட்டை விட்டு வெளியேறியதால் வழக்கைத் தொடர முடயவில்லை.

**பல்கலையின் சுயாதீனம்**

நான் 1993 இல் இருந்து யாழ். வளாகத்துள் செல்லத் திட்டமிட்டும் ஓரிருவரால் தடுக்கப்பட்டுள்ளேன். எம் கடிதங்களுக்கு பதிலே வருவதில்லை. வழக்குத் தொடர்ந்தால் ஒரு வருடமென்றாலும் எடுக்கும். இங்கே (அமெரிக்காவில்) இருந்தால் அங்கு போவது ஒருபோதும் நடவாதென்ற முடிவில்தான் என் பதவியை ராஜினாமாச் செய்தேன். கிடைத்தால் உபவேந்தர் பதவியை ஏற்பேன்.

கே: பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களின் நியமனங்கள் அரசியல் நியமனங்களாக அமைந்து விடுவது பல்கலைக்கழகத்தின் சுயாதீனத்தை மட்டுப்படுத்துகின்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. இக்குற்றச்சாட்டுப் பற்றியும் உபவேந்தர்களின் நியமனம் பற்றியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழப் பேரவை பற்றியும் சற்று கூறமுடியுமா?

ப: இந்தக் குற்றச்சாட்டு தவறானது. பல்கலைக்கழகங்கள் யாவும் பல்கலைக்கழக 1987ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. அந்தச் சட்டம் மிகக் கவனமாக எழுதப்பட்டது. ஆளும் பேரவையில் துணைவேந்தர், பீடத் தலைவர் போன்ற பலர் தம் பதவி நிமித்தம் அங்கத்தவர்கள். இவர்களை மட்டுமே தீர்மானங்கள் எடுக்கவிடுவது நல்லதல்ல என்ற காரணத்தால் கூடவே சுற்றிய சமூகத்தில் இருந்து உள் அங்கத்தவர் எண்ணிக்கை மற்றும் ஒரு வெளிப்பெரியார் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவர். இதற்கமைய யாழ். பேரவையில் 12 உள்ளங்கத்தவரும் 13 வெளியங்கத் தாரும் 2006இல் இருந்தனர். இவர்களில் அதிபர்மார், கணக்காளர், GAமார், குருமார், இளைப்பாறிய பேராசி ரியர்மார் போன்ற சமூகப் பெரியோர்களும் உள்ளனர். இப்படியிருந்தும் உள் அங்கத்தவரே அதிகாரம் கூடியவர்கள். ஏனெனில் வெளி அங்கத்தவர் வழமையில் ஒரு பெரிய தப்பைக் கண்டாலே ஒழிய தலையிடுவ தில்லை. இந்தப் பேரவை மாதாந்தம் கூடுவதாலும் அடிக்கடி தெரிவுக்குழு, நாணயக்குழு போன்றவற்றில் சந்திப்பதாலும் அவர்களுக்குள் நட்புகள் ஏற்பட்டு பீடத் தலைவர் அல்லது தொடர விரும்பும் துணை வேந்தர் பேரவையின் வாக்கை துணைவேந்தர் பதவித் தேர்தலில் கேட்கும் போது ஒரு வெளியாள் வருவது மிகவும் கஷ்டம். சட்டத்தை எழுதியவர்கள் இப்படி ஒரு நெருங்கிய பேரவையில் திறமை நட்புக்கு இலக்காகும் என்பதை யும் மனதில் கொண்டு பேரவையின் பொறுப்பு 3 பேரைத் தேர்ந்து ஜனாதிபதியிடம் அனுப்புவது மட்டும் என்றும், இறுதித் தெரிவு மானியக்குழுவின் ஆலோசனையோடு ஜனாதிபதியுடையதென்றும் அமைந்தது. எனக்குத் தெரிந்த அளவு நானும் துரைராஜாவும் மட்டுமே வெளியாள்களாகப் பேரவையால் தெரிவு செய்யப்பட்டுள்ளோம். இந்த அமைப்பில் பிழை காண லாம். ஆனால் இது பொதுவாக வேலை செய்கிறது. பேரவையில் பெரும்பான்மை வெளி அங்கத்தவர்கள் இருந்தாலும். நட்பு இளைப்பாறிய பேராசியர்மாரால் உள் அங்கத்தவரி டமே அதிகாரம் உள்ளது. அவர்கள் தெரிவு செய்யாத ஒருவரை ஜனாதிபதி நியமிக்க முடியாது. தாம் ஏற்கத் தக்க 3 பேரை ஜனாதிபதியிடம் அனுப்புவது பேரவையின் கடமை. அனுப்பிய பின் தாம் விரும்பாதவர் நியமிக்கப்பட்டார் என்பது பொறுப்பற்ற நடத்தையே.*** (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொறி விற்பனைக்கு

போர்ட்லொறி - 28 சிறி தொடர் 18 அடி நீளம் கொண்ட பலமான அலுமினியம் பொடியுடன் கூடியது. அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்

கண்டி பிளாஸ்ரிக் தனியார் நிறுவனம்
தொழிற்பேட்டை பல்லகெலை, குண்டசாலை
தொ.பே.: குமா
**0812420260, 0773260955**



# JAFFNA COLLEGE VADDUKODDAI

ADMISSION - 2011
FOR GRADE I & GRADE 6

**மாணவர் அனுமதி - 2011**
**தரம் 1 - & தரம் - 6**

1. (அ) விண்ணப்பப் படிவங்களை 15.09.2010 முதல் 30.10.2010 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   (ஆ) எக்காரணம் கொண்டும் 21.10.2010 இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.
   (இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
   (ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 30.10.2010 சனிக்கிழமை அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படமாட்டா.
2. பிழையாக நிரப்பப்பட்டவையும் பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3. தரம் 1 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photo Copy) இணைக்கப்படல் வேண்டும்.
4. விண்ணபப்படிவங்கள் ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000-
6. வயதெல்லைகள்:
   (அ) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2005 இற்கும் 31.01.2006 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   (ஆ) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.2000 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
7. பிரவேச நேர்முகப் பரீட்சை
   (அ) தரம் 1 இற்கான நேர்முகப் பரீட்சை 13.11.2010 காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்
   (ஆ) தரம் 6 இற்கான தேர்வுப் பரீட்சை 13.11.2010 காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

மிகச் சிறந்த கல்விப் பெறுபேறுகள் பெற்றுக்கொண்ட மாணவ மாணவிகளுக்கு அனைத்து வசதிவாய்ப்புகளுடன் கூடிய விடுதி, நூலகப் பாவனை மற்றும் விளையாட்டுத் துறையில் சிறந்த பயிற்சி எம்மால் வழங்கப்படும்.

-அதிபர்

(சி-570800)


# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

பிறப்பு
22-09-1947

இறப்பு
03-08-2010



## அமரர் பொன்னன் நல்லையா

கடந்த 03.08.2010 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறி அனுதாபங்களைத் தெரிவித்தும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த இலங்கை வாழ் உறவினருக்கும் ஜேர்மனி வாழ் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மற்றும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மைத்துனர்,
அ.ஜெயராஜகுலேந்திரன்
(இளைப்பாறிய அதிபர்)
பிறின்ஸ் அகம்
உடுவில், சுன்னாகம்.

தகவல்:
ந.ஜனார்த்தனன்(மகன்)
NAHESTR 1
RUSSELSHEIM
GERMANY

(103032)


# காணி விற்பனைக்கு

சுன்னாகம் கே.கே.எஸ் வீதிக்கு சமீபமாக தில்லகட்டி ஒழுங்கையில் 7 பரப்புக் காணியும் ஜெற் மோட்டோஸ் ஒழுங்கையில் 1½ பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 4449172

# மணமகன் தேவை

1983ஆம் ஆண்டு மிருகசீரிட நட்சத்திரம் செவ்வாய்க் குற்றம் அற்ற, கிரகபாவம் குறைந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகளுக்கு வெளிநாட்டு பிரஜாவுரிமை உள்ள மணமகன் தேவை.

தொடர்பு: 0213219840 (103188)

# Italy Work Permit

ஆலோசனைகளுக்கும் விசாவிற்கும்
தொடர்பு: 075 4518650 (103115)

# காணி விற்பனைக்கு

K.K.S. Road, யாழ். மாநகர சபை எல்லைக் குட்பட்ட சிறந்த ஸ்தானத்திலமைந்த, கடைத் தொகுதி மற்றும் வீடு கட்டுவதற்கு உகந்த சதுரக் காணி உடன் விற்பனைக்குண்டு.

பரப்பு 36 லட்சம் No Brokers please
தொடர்புகளுக்கு: 0716933034

# வேலைவாய்ப்பு

கணனியில் தமிழ் தட்டச்சு வேலை செய்வதற்கு முழுநேர, பகுதிநேர வேலையாள்கள் தேவை.

இடம்: யாழ்ப்பாணம், வவுனியா
தொடர்பு:
gatherpage@gmail.com

# காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, Courts Road இல் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய 6 பரப்பு 6 குழி காணி விற்பனைக்குண்டு.
காணி பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு:-0112360220

# குத்தகைக்கு காணி தேவை

யாழ்.நகர சுற்றுவட்டாரத்தில் பிரதான வீதிக்கு அண்மையாக களஞ்சியசாலைக்கு உகந்த வகையில் 1-2 ஏக்கர் காணி தேவைப்படுகிறது.

தொடர்பு:-0112475542
(வேலை நேரத்தில்),
0773940458

# மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த சொந்தமாக தொழில் நடத்தும் விவாகரத்துப் பெற்ற 50 வயதுடையவருக்கு 45 வயதிற்கு உட்பட்ட விவாகரத்துப் பெற்ற அல்லது கணவனை இழந்த மணமகள் தேவை. கிறிஸ்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இல: 4068 C/O உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# கோழிக்கூடு விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள, பலமாகத் தயாரிக்கப்பெற்ற 41 அடி நீளம் 21 அடி அகலம் கொண்ட கோழிக் கூடும், கோழி வளர்ப்பைத் தொடர்வதற்கான சகல உபகரணங்களும், "றொபின்" நீர் இறைக்கும் இயந்திரமும் விற்பனைக்குண்டு.

தொடர்பு 021 222 3206
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

# உடன் விற்பனைக்கு

புதிதாக மீளமைக்கப்பட்ட சிவப்பு நிற HDNDA CD 200 (Road Master) வகை மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0777261946, விலை பேசித் தீர்மானிக்கப்படும்

# உடன் விற்பனைக்கு

53-தொடரிலக்க ரொயோட்டா லைற் ஏஸ் High Roof FW-பவர் ஸ்ரேறிங்க் வான் - நல்ல நிலையில் உள்ளது- உடன் விற்பனைக்குள்ளது. விலை: 10 லீட்சம்.

தொடர்பு: 0718609271 (மானிப்பாய்)

# நாய்க்குட்டிகள் விற்பனை

இரண்டு வயது நிரம்பிய (Doberman) டொபர்மன் நாய்க்குட்டிகள் (ஆண்) விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம்.

தொடர்பு: 160, மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 3264

# காணி விற்பனை

சங்கத்தானையில் வட்டு மத்திய கல்லூரிக்கு அருகில் 5½ [illegible] விற்பனைக்குண்டு. தொடர்பு: 0787837864



# கொழும்பு - யாழ் Transport & அச்சகத்திற்கு வேலையாள்கள் தேவை

* முகாமையாளர் தேவை - ஓய்வூதியம் பெற்ற Teacher, Postmaster, நடுத்தர அரச ஊழியர் விரும்பத்தக்கது.
* Press Machine Transport உதவியாளர்கள் தேவை
* சாரதி தேவை - கொழும்பு யாழ் தினசரி லொறி, வான் Transport சேவை Lorry, Van, Moto bike ஓடக்கூடிய, (A.D சாரதி அனுமதிப்பத்திரமும்) சிங்களம் பேசக் கூடிய 5 வருட அனுபவமுள்ள யாழ்.சாரதிகள் தேவை. கொழும்பில் தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்பு: **Jeya Communication, Printers & Transport - Kotahena - Col - 13**
Jeya Hardware & Transport - Nelliyady T.P - 077 7271478, 077 7671555 (103180)


# கண்ணீர் அஞ்சலி

## யதகுலசிங்கம் வைகுந்தன்

(குந்தன் அண்ணா)



வளரும் எமக்கு உரமூட்டி
ஏற்றி வைக்கும் ஏணிப்படியானாய்
இன்று இழந்து தவிக்கின்றோம்.
உங்கள் பிரிவால் துயர் மறையுமா அண்ணா
எம் வாழ்வின் இறுதிவரை

உடன் பிறவா உறவுகள்
SWEETIE TOPPS
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(103224)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வள்ளிப்பிள்ளை வன்னியசிங்கம்



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை வன்னியசிங்கம் நேற்று (11.09.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாப் பிள்ளை வன்னியசிங்கத்தின் (இளைப்பாறிய உதவி வைத்தியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - முத்தாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற வ.முத்துக்குமார சுவாமியின் (இளைப்பாறிய தபால் அதிபர்) அன்புச் சகோதரியும் ஆறுமுகவடிவேல் (இந்தியா), ஆறுமுகநாதன், ஆறுமுகசுவாமி (ஜேர்மனி), சரஸ்வதிதேவி, தவமணி, ஆறுமுகசோதி (திருகோணமலை), காலஞ்சென்ற யோகீஸ்வரி (APC இலிகிதர், கைதடி) மற்றும் சாந்தினி (பொட்ஸ்வானா), ஆறுமுகசீலன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகீஸ்வரி (இந்தியா), புவனேஸ்வரி (இளைப்பாறிய அதிபர், யா/கைதடி முத்துக்குமாரசுவாமி), சற்குணேஸ்வரி(ஜேர்மனி), காலஞ்சென்ற நடராஜா மற்றும் வாமதேவா, பராசக்தி (ஆசிரியை, திருகோணமலை மெதடிஸ்த மிஷன் பெண்கள் கல்லூரி), செல்வராசா (இளைப்பாறிய கிராம சேவையாளர்,கைதடி), பாலராஜேஸ்வரன் (பொட்ஸ் வானா) சாந்தினி (கனடா), நிர்மலலவி ஆகியோரின் பாசமிகு மாமியும் செந்தூரன் (லண்டன்), திருமதி சுதர்ஷனா (லண்டன்), நிரஞ்சனா ( HNB யாழ்ப்பாணம்), சயந்தன் ( HNB சாவகச்சேரி), கயந்தினி, கயந்தன்( ஜேர்மனி), அபிதா (கனடா), ஆகியோரின் அப்பம்மாவும் திருமதி நிறோஜினி (பிரான்ஸ்), திருமதி சுதாஜினி (கனடா), பிரதீபன்(லண்டன்), காலஞ்சென்ற பார்த்தீபன் மற்றும் திருமதி ராஜினி (நோர்வே), இராகுலன் (கொழும்பு), வைஷ்ணவி ( G.A.Q. 2011 மாணவி, புதிய உயர் கல்லூரி), கோபிகன் (பொட்ஸ்வானா) ஆகியோரின் அம்மம்மாவும் நிவேதன், சிவானுஜா, சிவானிகா (பிரான்ஸ்), கீர்த்தனன், ஹரிணி (லண்டன்), தினேஷா, கவிஷா(கனடா) ஆர்எழில் (நோர்வே), யோஸ்னா (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.09.2010) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி, ஊரியான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

(103218)

தகவல்:
குடும்பத்தினர்.

## யதகுலசிங்கம் வைகுந்தன் (குந்தன்)

(முகாமையாளர், கதிரவன் இரும்பகம், சாவகச்சேரி)



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட யதகுலசிங்கம் வைகுந்தன் கடந்த (09.09.2010) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற யதகுலசிங்கம் மற்றும் சரோஜினிதேவி தம்பதியரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் சுதர்சினியின் (ஆசிரியை, ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை) அன்புக் கணவரும் அபிஷாயினியின் ஆருயிர் தந்தையும் அருட்செல்வி (மஞ்சு), மேகலா (நோர்வே), அரவிந்தன் (அமெரிக்கா), சிவதீபன், சியாமினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற நீதிராசா மற்றும் அருள்முருகன் (நோர்வே), குகதர்சினி, லோபனா, கலையரசி, சாந்தினி சத்தியதாசன், சத்தியபாலன் ஆகியோரின் அருமை மைத்துனரும் விக்கினேஸ்வரநாதன், பரஞ்சோதி ஆகியோரின் சகலனும் கோபிகன், நிஷாந்தி, பிரசன்னா, கஜேந்திரன், ஜீவிதா, சயந்தன், நிவேதா, நிலாஷன், நிதுஷா ஆகியோரின் அருமை மாமனாரும் யதுவின் பெரிய தந்தையும் அக்ஷயா, கிஷானா,சாரங்கன், யதுஷா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி ஒழுங்கை
(வராகி அம்மன் கோயிலடி),
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
தொ.பே.: 0776589049

(103207)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உங்களுக்கும் பரிசில்கள்

## விடை தெரியுமா? 73

1. இலங்கையின் தேசிய கல்வி நிறுவனம் அமைந்துள்ள இடம் எது?
2. சார்க் அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?
3. சத்தமிடாத விலங்கு எது?
4. பென்சிலினைக் கண்டு பிடித்தவர் யார்?
5. அன்னை தெரேசாவின் தாய்நாடு எது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 17.09.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.


### விடை தெரியுமா?
### 71 இற்கான சரியான விடைகள்

1. மெக்சிக்கோ - கிம்னா நவரேடா
2. ஓகஸ்ட் 22
3. சுவான்
4. எ. ரஜீம்ராஷ்
5. 88ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா

### பரிசுபெறுவோர் விவரம்

1. சி. லதாங்கி, தரம் 1, யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
2. சி. நிறோஜன், தரம் 5, யா/ கரவெட்டி, மாணிக்கவாசகர் வித்தியாலம்.
3. ச. ஸ்ரீவாஸ்ணுகரன், தரம் 6A, யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.
4. சி. துளசிகா, தரம் 12, யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

# சிறுவர் உரிமைகள்



சிறுவர் உரிமைகள் செகத்தில் ஒழுகுக
சிறார் அவமதிப்புக்கள் செகத்தில்ஒழிக
உறுதி பூணுவோம் உரிமைகள் பெறவே
எமைஅவமதிப்போர் உடனகற்றிடவே


உறுதி வாசகம் இதை ஏற்றிடுவோம்
எமக்கெழும் இன்னலை உடனே கலைவோம்
மறதி வேண்டாம் மண்ணிலே சிறார் நாம்
மன உறுதியோடு நல்மார்க்கம் காண்போம்

ந. நந்தினி, தரம் - 9,
யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.


# நாடுகளும் அவற்றின் தலைநகரங்களும்


| | |
|---|---|
| ★ சைனா | - பீஜிங் |
| ★ வங்காள தேசம் | - டாக்கா |
| ★ நேபாளம் | - கற்மண்டு |
| ★ மலேசியா | - கோலாலம்பூர் |
| ★ பிலிப்பைன்ஸ் | - மணிலா |
| ★ ஜப்பான் | - ரோக்யோ |
| ★ எஜிப்ஸ் | - கொப்றோ |
| ★ அமெரிக்கா | - வோஷிங்ரன் |
| ★ அவுஸ்திரேலியா | - கன்பரா |
| ★ இங்கிலாண்ட் | - லண்டன் |


க. சுபாங்கி, தரம் 4, யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்.



சி. தர்சிகா, தரம் -6H,
யா/இந்து மகளிர் கல்லூரி.


இ. கோகிலன், தரம் -7D,
யா/ இந்துக் கல்லூரி.



ரி.ஆனந்தகோபன், தரம் -6A,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.


சி. பகீரதன், தரம் -9,
யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலை.


தெ. ஆதித்தியான், தரம் -2A,
யா/சங்கானை சிவப்பிரகாசம் ம.வித்தி.


லோ. டிக்ஷன், தரம் -5,
யா/ மானிப்பாய், சர்வதேசப் பாடசாலை


ஜெ. மதுரிக்கா, தரம் -6F,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் படசாலை.


இ. மனோசங்கரன், தரம்-2F,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.

# கல்வியின் சிறப்பு

உலக வாழ்வின் உயர்வுக்கு உதவுகின்ற செல்வங்களை இரண்டாக வகுக்கலாம். பொன், பொருள், பூமி மண்ணின் விளைதானியங்கள் முதலானவை பொருட்செல்வம். மற்றையது மனங்களில் அறியாமை இருளை அகற்றி அறிவொளி ஏற்றுகின்ற கல்விச்செல்வம் ஆகும்.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே



என்னும் முதுமொழிப்படி நாம் கஸ்ரப்பட்டாவது கல்வியை நிச்சயம் கற்க வேண்டும். அப்படிக் கற்பதனால் நல்லது எது கெட்டது எது என்பது பகுத்துணரக் கூடிய வல்லமையைப் பெறுகின்றோம். தீய வழியில் செல்லாது நல்வழியை நாடுவதற்கும் நற்பண்புகளை வளர்த்தெடுக்கவும் எமக்கு உதவுகின்றன. ஒருவன் கற்ற கல்வி அவனின் ஏழு பிறவிக்கும் கைகொடுக்கும் என்றும் கேடில் விழுச்செல்வம் கல்வி என்றும் கற்காதவர் முகத்தில் இருப்பது கண்கள் இல்லை, வெறும் புண்களே என்றும் வள்ளுவப் பெருந்தகை கல்வியின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுகின்றார். களங்கமற்ற இளமைக்காலம் கல்விக்கு ஏற்றது என்பது ஔவையின் கூற்று இளமையில் கல் என்றும் இளமையில் கல்வியனது எல்லோரிடத்தும் எக்காலமும் எங்கு சென்றாலும் எல்லையற்ற பெருமையை பெருக்குகின்றது. மன்னனுக்குத் தன் தேசத்தில் சிறப்பு இத்தகைய சிறப்பு மிகு கல்வியினை நாம் ஊக்கத்துடன் கற்று வீட்டிற்கும் நாட்டிற்கும் நற்பிரஜைகளாக வாழ்ந்து பெருமை சேர்ப்போமாக! ★★★★★

தர்சிகா

# நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-...............................................
தரம் :-...............................................
பாடசாலை :-...............................................
...............................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

எமது நிறுவனத்துக்கு 23 வயதிற்குட்பட்ட ஆண் விற்பனையாளர்கள் தேவை. நேர்முகப்பரீட்சைக்குத் தகுந்த ஆதாரங்களுடன் நேரில் வரவும்.

திகதி : 12.09.2010 - 17.09.2010
நேரம்: 10 மணி தொடக்கம் 4 மணிவரை
இடம்: **Annai Nagaa Food City**
175, K.K.S. Road, Jaffna.



## பெற்றோர்களின் கவனத்திற்கு!!

**Residential Course @ KANDY**

பல்கலைக்கழகங்களில் அடுத்த வருடத்திலிருந்து 99% மான பாடநெறிகள் ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் (கல்வி அமைச்சு)

## ENGLISH + IT SKILLS TRAINING

02 மாதத்திற்குள் ஆங்கில அறிவையும் கணனி அறிவையும் ஏனைய திறன்களையும் விருத்தி செய்து, உங்களை தொழிற்சந்தைக்குள் நுழைய தயார்படுத்தும்
500 மணித்தியாலய விசேட பயிற்சிப் பாசறை.

26.09.2010 க்கு முன்னர் பதிவுசெய்யும் முதல் 20 மாணவர்களுக்கு மட்டுமே வாய்ப்பு அளிக்கப்படும்.

தினமும் 03 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி

Duration: 02 Months
(Monday to Saturday)
7:00am to 8:00pm

மேலதிக விபரங்களுக்கு
0777 44 62 52

ஆங்கில பேச்சுக்கு உத்தரவாதம்
**Admission:2,000/=**
**Course Fee:19,500/=**

ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறான பாதுகாப்பான தங்குமிட வசதி.

**Diploma in Spoken English With Grammar**
• Basic • Certificate • Diploma

◉ Duration: 03 Months
◉ Fee for all 03 levels: 10,500/=

தினமும் 04 மணிநேர வகுப்பில் 02 மணிநேர பேச்சுப் பயிற்சி

## GOLDEN COLLEGE

No.23, Suduhumpola Rd, Kandy
0812 20 55 44 / 0777 912 597



**Course Details**

| | | |
|---|---|---|
| Diploma In Ms Office | - 2 Months | -2500/= |
| Diploma In DTP | - 2 Months | -3000/= |
| Diploma In Hardware | - 2 Months | -3000/= |
| Diploma In Web Design | - 3 Months | -3500/= |
| Graphic Design | - 3 Months | -3000/= |
| Internet & E-mail | - 1 Month | -2000/= |
| Computerized Accounting | -3 Months | - 3500/= |
| Kids Programe | | 1500/= |

(Net Browsing 1Hr -30/=)

162, Main Street, Jaffna.
TP: 021-222 1417
Sky Computers (Pvt) Ltd
Today You Learn Tomorrow You



**விற்பனைக்கு**

முட்டை மொத்தமாகவும் சில்லறையாகவும் உடன் விற்பனைக்கு உண்டு.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்



**விற்பனைக்கு**

மிகவும் நல்லநிலையிலுள்ள HONDA CD 200 மோட்டார் சைக்கிள் (சிவப்பு) உடன் விற்பனைக்கு
தொடர்பு: 0776374345


## புலிகளுக்கு உதவி செய்தாராம் சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கொழும்பிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகளுக்கு உதவி, ஒத்தாசை செய்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் கடந்த வியாழன் உத்தரவிட்டது.

கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன அல்விஸ் இவ்வுத் தரவைப் பிறப்பித்தார். இச்சந்தேகநபர் களனிதிஸ்ஸ மின்நிலைய இராணுவப் பிரிவினரால் கடந்த மாதம் கைது செய்யப்பட்டார். பின் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கையருக்கு இத்தாலியில் தொழில்வாய்ப்பு

இத்தாலியில் அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான இத்தாலியத் தூதுவர் ரூபென்ஸ் அனா பெடலுக்கு, மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.


## CANADA Work Permit

**பெறுவதற்கான ஆலோசனைகள்**

- வயதெல்லை – upto 40 years
- ஆங்கில அறிவு சரளமாக இருத்தல் வேண்டும்.
- அங்கிகரிக்கப்பட்ட Diploma / Degree உடையவர்களுக்கு முன்னுரிமை
- குறைந்த பட்சம் ஒரு வருட வேலை அனுபவம் தேவை.

SIC Center, 734, Hospital Road, Jaffna.
Tel : 077-900 4194





தரமான கவர்ச்சிகரமான திரைச்சீலைகளுக்கு
**Ideal Curtains**

தொடர்பு:
கற்பகப் பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
தொ.பே: 0773013239,
0779947466



JAFFNA MUSIC FESTIVAL 2011

## யாழ்ப்பாண இசை விழா

பாரம்பரிய இசைக் கலைஞர்களுக்கான விண்ணப்பபடிவம்

யாழ் இசை விழாவானது பாரம்பரிய சங்கீதத்தை கருப்பொருளாகக் கொண்டு 2011ம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விழாவில் இலங்கையைச் சேர்ந்த பாரம்பரிய இசைக் குழுக்களும் சர்வதேச இசைக் குழுக்களும் பங்குபற்றவுள்ளன.

இந்நிகழ்வில் பங்குபற்ற ஆர்வமுடைய பாரம்பரிய இசைக் குழுக்கள் தங்கள் விபரங்களை செப்டெம்பர் மாதம் 22, 2010 இற்கு முன்னதாக Jaffna Music Festival, C/O Sewalanka Foundation, No: 432A, 2nd Floor, Colombo Road, Boralesgamuwa எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விண்ணப்பங்கள், தேர்ந்த நடுவர் குழுவினரால் ஆராயப்பட்டு மிகப்பொருத்தமான குழுக்கள் தெரிந்தெடுக்கப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு: 0772.375.584 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

**பாரம்பரிய இசைக் கலைஞர்களுக்கான விண்ணப்பபடிவம்**

- குழுவின் பெயர்:........................................
- தலைவர்/ பணிப்பாளர்/ குரு:........................................
- முகவரி:........................................
- தொலைபேசி இலக்கம்:........................................
- மொத்த குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை:........................................
- உங்கள் சிறப்பு பாரம்பரிய இசை வடிவம் என்ன?:........................................
- குழு/ தனிநபரின் வரலாறு:........................................
- சிறப்பு நிகழ்ச்சிகள்/ அனுபவம்/சாதனைகள்: ........................................
- எவ்வாறு நீங்கள் உங்கள் பாரம்பரிய இசை தொடர்பான அறிவை செயல்முறை விளக்கத்தில் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள்? சுருக்கமாக விளக்கவும்?
- உங்கள் இசை வடிவத்தின் வெளிப்பாட்டிற்கான கால வரையறை எவ்வளவு?......
- 20 நிமிடங்களுக்குள் உங்கள் நிகழ்வின் ஒரு அங்கத்தை வெளிப்படுத்துவதற்கான சாத்தியம் உண்டா?........................................

உங்கள் புகைப்படங்கள், ஒலிநாடாக்கள், (audio/visual, Cassets, CDs) ஏதேனும் இருந்தால் விண்ணப்ப படிவத்துடன் இணைக்கவும்.



## BROWN & CO. PLC

**SHARP Photocopier**



தற்போது SHARP நிழற்பிரதி இயந்திரங்களை குறுகிய கால தவணை அடிப்படையில் பெற்றுக் கொள்ளுங்கள்.

- ஒரு வருடம் / 50000 பிரதிகளுக்கான உத்தரவாதம்.
- ஒருவருட இலவச சேவை.
- இலவச விநியோகம்.

**OLYMPUS**
Your Vision , Our Future

முந்திக்கொண்டு பெற்றெடுங்கள்



Rs. 14, 650/=
2GB Memory Chip Free
Rs. 19, 400/=

ஒலிம்பஸ் T 100 அல்லது FE 4030 டிஜிற்டல் கமராக்களை வாங்கி ஒலிம்பஸ் பெயர் பதித்த தொப்பிகளை **இலவசமாக** பெற்றுக்கொள்ளுங்கள் முந்துங்கள் இச் சலுகை முதல் 50 வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே காத்திருக்கின்றது.

உலகிலேயே சிறந்த தொழில்நுட்பம் திகைக்க வைக்கும் விலைகளில்
T - 100 . 12.0 Mega Pixel, 3x Optical zoom, 2.4" LCD, Face Detection
FE - 4030. 14.0 Mega Pixel, 4x Optical Zoom, 2.7" LCD, 26mm wide Lens



**SHARP Air Conditoners**

- Compressor இற்கு 05 வருட உத்தரவாதம்.
- இலவச பொருத்தல் சேவை



**Available : Sharp Multimedia Projectors.**



**Sharp Fax Machines**

எப்போதும் தரமான உதிரிப்பாகங்கள் மற்றும் உள்ளீடுகளையே (Toners & Spares) நாடுங்கள்.

**Brown & Co. Plc - IBS இன் அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்.**

## டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்

இல. 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4040, Fax : 021 222 4040
( ஸ்ரான்லி வீதி சம்பத் வங்கி முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்குத் தீங்கு செய்பவர் களை இருவகைப் படுத்தி நோக் கலாம். முதலாவது வகையினர் பிறர் இழைத்த தீங்குகளுக்குப் பழிவாங்கும் நோக்குடன் தீங்கிழைப்பவர்கள். இரண்டாம் வகையினர் எவ்வித காரணங்களும் இன்றிப் பிறருக்குத் தீங்கு செய்பவர்கள். கம்பராமாயணத்தில் இடம்பெறும் மந்தரை என்ற கூனி, இவர்களுள் எவ்வகைக்குள் அடங் கக் கூடியவள்? என்பதனை நோக்குவோம்.

மந்தரை, கேகய தேசத்தவள்.

தோற்றத்தால் கூனியவள். ஆகையால் கூனி எனப்பட்டாள். கைகேயி தசரதனைக் கரம் பற்றிய வேளை

தீங்கிழைக்க நினைப்பவளாதலால் இதையே சாட்டாக வைத்து இராமன் மீது வெறுப்புற்றாள். கைகேயியின் மனதை மாற்றி, வரம் கேட்க வைத்து, இராமனைக் காடேகச் செய்தாள்.

இராமன் தெரியாத் தனமாகச் செய்த இச் செயலுக்காகப் பின்னாள்களில் வருந்திய காட்சி ஒன்றையும் கம்பர் படைத்துக் காட்டியுள்ளார்.

கிஷ்கிந்தா காண்டத்தில் உள்ள அரசியல் படலத் தில் இச் செய்தி வருகிறது. இராமனின் கட்டளைக்கு இணங்க இலக்குவன் சுக்கிரீவனுக்கு

"அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல் அருள் துறந்தனள் தூமொழி மடமான்"

கைகேயியின் மனம் திரிந்ததற்குக் காரணம் அரக்கர் செய்த பாவமும் அரக்கரல்லாதவர்களு டைய தவமுமே என்பது கம்பன் தீர்ப்பு.

ஆனால் கூனியின் இயல்பே தீமையின் வடிவம் தான்.

# "சிறியோரை இகழ்தல் இலமே!"

"உள்ளமும் கோடிய கொடியாள்"
என்றே கூனியைக் கம்பன்

அவளது சேடிப் பெண்ணாகக் கேகயனால் அயோத்திக்கு அனுப்பப்பட்டாள்.

கோசலை, சுமித்திரை ஆகிய தேவியர் சிற்றரசர் களுடைய புதல்வியராய் அமைந்தமையால் கைகேயிக்கிருந்த 'நட்பு' அவர்களுக்கு இருக்க வில்லை. கைகேயி தசரதனுக்கு ஒப்பான கேகய அரசனுடைய மகள். கோசலை வயிற்றில் பிறந்த பட்டத்துக்குரிய மைந்தனாகிய இராமனைக் கைகே யியே வளர்த்தாள். 'தாய் கையில் வளர்ந் திலன், வளர்ந்தது தவத்தால் கேகயன் மடந்தை' என்ற பாடல் தொடரால் கம்பன் இதை அறிவிக்கிறான்.

'வளரும் பயிரை முளையிலே தெரியும், வாழும் பிள்ளையை மண் விளையாட் டிலே தெரியும்' என்பது நம்மவர் முது மொழி. சிறுவனாக இருந்த இராமனுக்கு மண் உருண்டை கோர்த்த அம்பினை இலக்குப் பார்த்து எய்வது விளையாட்டாக இருந்தது. கூனி குளத்திலே நீர் மொண்டு மகளிருடன் கூடி வரும் போது மண் உருண்டையை வில்லில் கோர்த்து கூனியின் முதுகைப் பார்த்து அடிப்பது இராமனுக்கு விளை யாட்டாக இருந்தது. கூனியின் கை நெகிழக் - குடம் வீழ - மற்றைய மகளிர் பரிகசிக்கக் - கூனி கடும் கோபமுறுவாள். ஆயினும் அவளால் என்ன செய்ய முடியும்? மாமன்னனின் நேரடி வாரிசான இராமனைத் தண்டிக்க முடியாது. எனவே இராமனைப் பழிவாங்கச் சந்தர்ப்பமொன்றைப் பார்த்திருந்தாள்.

"பண்டை நாள் இராகவன் பாணி வில் உமிழ் உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உள்ளுவாள்" எனக் கம்பன் இதனைச் சான்றுப்படுத்துகிறான்.

விளையாட்டுப் பிள்ளை இழைத்தது தீங்காகுமா? என்பது இங்குள்ள வாதம். சிறு குழந்தைகளின் விளையாட் டுக் களைக் கண்டு ஆனந்தமடைய வேண்டிய கூனி இயல்பாகவே பிறருக்குத்

**இலக்கியக் காட்சி**

**56**

முடி சூட்டினான். இச் சந்தர்ப்பத்தில் நல்லரசு புரிவதற்கு வேண்டிய அறிவுரைகளை இராமன் சுக்கிரீவனுக்கு எடுத்துரைத் தான். இதனால் இச் செய்திகளைக் கூறும் படலம் அரசியல் படலம் ஆயிற்று. பால காண்டத்திலும் ஓர் அரசியல் படலம் வருகிறது. இது தசரதனின் ஆட்சிச் சிறப்பைக் கூறுகிறது.

சுக்கிரீவனுக்கு நல்லுபதேசங்களை இராமன் வழங்கினான். "திரண்ட தோள்களை உடையவனே! உருவம், வலிமை, அறிவு போன்றவற்றில் நம்மை விடச் சிறியவர் என்று நினைத்து இகழ்ச்சி செய்து எவர்க்கும் துன்பம் செய்யும் காரியங்களைச் செய்யக் கூடாது. இந்த நல்ல நெறியினைப் போற்றாது இகழ்ந்து, நான் ஒரு தீங்கினைச் செய்த காரணத்தால் பகைமை உணர்ச்சியை எதிர் கொண்டேன். குறுகிய உடம்பினை உடைய கூனியால் தீமைகளை அடையுமாறு கொடிய துன்பக் கடலில் எளிதாக வீழ்ந்தேன்.

சிறியர் என்று இகழ்ந்து நோவு
செய்வன செய்யல்; மற்று, இந்
நெறி இகழ்ந்து யான் ஓர் தீமை
இழைத்தலால் உணர்ச்சி நீண்டு
குறியது ஆம் மேனி ஆய
கூனியால், குலவுத் தோளாய்!
வெறியன எய்தி நொய்தின் வெந்
துயர்க் கடலின் வீழ்ந்தேன்.

*(கிஷ்கிந்தா அரசியல் காண்டம் படலம்: 12)*

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட தீங்கிழைப்பவர் பற்றிய வகைப்படுத்தலை மீண் டும் சிந்திப்போம். கைகேயி இராமனுக்குத் தீங்கு செய்தாள். ஆனால் இதற்கும் ஒரு நியாயத்தைக் கம்பன் கற்பித்தான்.



காட்டுகிறான். சிறுபிள்ளை ஒன்று விளை யாட்டுத்தனமாகச் செய்த காரியம் ஒன்றைப் பெரிது படுத்தலாமா? தான் சிறுபிள்ளையாக இருந்த போது செய்த காரியத்தைக் குற்றம் என ஏற்று இரக்கப்படும் மனோ நிலை இராமனது பெருந்தன்மை யின் வெளிப்பாடாகும்.



"சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

என்ற புறநானூற்றுப் புலவர் கனியன் பூங்குன்றனாரின் பாடலடி என்றும் நம் மனதிருக்க வேண்டிய மகா வாக்கிய மாகும். ❋❋

ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 129

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | 4 | | 5 |
| | | 6 | | | | | |
| 7 | 8 | | | | 9 | 10 | |
| 11 | | | | 12 | | | |
| | | | 13 | | | 14 | 15 |
| 16 | | 17 | | | 18 | | |
| | | 19 | | 20 | | | |
| 21 | | | | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

## இடமிருந்து வலம்

1. பொருந்தாத தன்மை. அலர்ஜி என்று கூறுவர்.
4. வாளி
6. கெட்டவன்.
7. பூவுலகு.
9. பங்கு.
11. நஞ்சு.
12. திருமணமாகா இளம்பெண்.
13. விழி/ கண்திற.
14. இணங்க/ பொருந்த.
16. சிரித்தல்/ புன்னகை பூத்தல்.
18. இல்லை.
19. சரஸ்வதி.
21. வெடித்துத் தொல்லை தருவது.
22. கதையில் கதாநாயகனின் எதிரி.

## மேலிருந்து கீழ்

1. பொறுப்பாக வழங்கு/ கையளி.
2. போக்குவரத்துச் சாதனம்.
3. மத்தி/ நடுவில் உள்ளது.
4. அன்பு செலுத்துபவன்.
5. அழிவால் வருவது. இது மிக்கவனே பலவான்.
8. ஒரு திசை.
10. தலை தாழ்த்தி/ உடல் வளைதல்.
12. உப்பளம்/ கோல்.
13. காடும், காடு சார்ந்த இடமும்.
15. சேர்ந்ததால் வருவது.
16. வழங்கு/ கொடு.
17. மெல்லிய உலோகப் பட்டை.
18. தாவித் திரியும் சிறிய பிராணி.
20. நீர்த்தேக்கம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 129**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 22.09.2010 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.129இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 26.09.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப் படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படு வதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவ தால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 127 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பாதுகாப்பு. (5)சகா. (7)கட்டை. (8)தகவல். (10)வட. (11)சின்னம். (12)தர்மம். (15)கமம். (16)கல. (17) பாரம். (18)மூடம். (19)சுகம். (20) பலா. (21)மைல். (22) புலம்பல்.

**மேலிருந்து கீழ்**

(1)பாகவதர். (2)துட்டர். (3)காடை. (4)புதன். (5) சவம். (6)கால். (9)கனவு. (11)சிம்மம். (13)மகரம். (14)அலம்பல். (16)கட. (17)பாகல். (18)மூலம். (19)சுமை. (20).பல.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 127 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** இ. ஸ்ரீதரன், வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு.

**2 ஆம் பரிசு** க. செல்லையா, கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.

**3 ஆம் பரிசு** செல்வி து. சுவர்ணா, இல: 13, கொல்ல விளாங்குளம், வவுனிக்குளம்.

**4 ஆம் பரிசு** கி. செந்தூரன், ஆச்சிரம வீதி, நெல்லியடி கிழக்கு, அல்வாய்.

**5 ஆம் பரிசு** ப. அல்போன்சியா, 13 ஆம் வட்டாரம், செபநாயகபுரம், நெடுந்தீவு.

### பாராட்டுப் பெறுவோர்

(1) செல்வி க. வாசுகி, பழஞ்சந்தையடி, திருநெல்வேலி.

(2) அ. சஞ்சீவ், குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(3) வி. மதுராங்கி, புதுவளவு, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தை சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகம் தண்ணீர் குடித்தால் மரணம் நேரலாம்!

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பார்கள் அது தண்ணீர் குடிக்கும் விடயத்தில் கூட உண்மையாகியிருக்கிறது. அதிர்ச்சியை அள்ளித்தரும் இந்த உண்மைச் சம்பவம் லண்டனில் நடந்திருக்கிறது.

நல்ல ஆரோக்கியமான, திடகாத்திரமான, மருந்து மாத்திரைகளை நாடாத நாற்பத்து நான்கு வயதான ஆண்ட்ரு தன்னுடைய ஈறுகளில் இருந்த வலியை மட்டுப்படுத்த குளிர்ந்த நீரை குடித்துக் கொண்டே இருந்திருக்கிறார்.

கொஞ்சம் கொஞ்சமாக எட்டு மணி நேரத்தில் அவர் குடித்த தண்ணீரின் அளவு சுமார் பத்து லீற்றர். தொடர்ந்து மூன்றாவது நாளாக எட்டு மணி நேரத்திற்கு சுமார் பத்து லீற்றர் எனுமளவில் தண்ணீர் குடித்ததால் அவருடைய உடலிலிருந்த உப்புச் சத்துக்கள் கரைந்து, அடர்த்தியிழந்து மரணமடைந்திருக்கிறார்.

அதிகளவான தண்ணீர் உடலின் அனைத்து செல்களையும், உறுப்புகளையும் வீக்கமடையச் செய்திருக்கின்றன. அது மூளைக்கு அதிகளவான அழுத்தத்தையும், வீக்கத்தையும் கொடுத்திருக்கிறது. அதுவே அவரது உயிரையும் பறித்திருக்கிறது.

மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது உடல் வலுவிழந்து அதிக போதையில் இருந்தவரைப் போல தள்ளாடிக்கொண்டிருந்தார். முதலில் போதையில் இருக்கிறார் என மருத்துவர்கள் நினைத்திருக்கின்றனர், பின்னர் உண்மை உணர்ந்து சிகிச்சை அளிக்கத் தொடங்யிருக்கின்றனர். ஆனால் கூடவே மாரடைப்பும் வந்து அவரை மரணத்துக்குள் அமிழ்த்தியிருக்கிறது.

மனித உடலில் ஐம்பத்து ஐந்து முதல் எண்பது விழுக்காடு தண்ணீரால் ஆனது. மூளையின் எண்பத்து ஐந்து விழுக்காடும், குருதியின் எண்பது விழுக்காடும், தசைகளின் எழுபது விழுக்காடும் தண்ணீரால் ஆனதே. நாம் உண்ணும் உணவிலிருந்து உடல் சுமார் இருபது விழுக்காடு தண்ணீரைப் பெற்றுக் கொள்கிறது.

உடலுக்கு எவ்வளவு தேவையோ அதைத் தவிர அதிகமாய் தண்ணீர் உட்கொண்டால் தண்ணீர் கூட உயிருக்கு உலை வைக்கும் எனும் தகவல் மக்களிடையே அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கிறது,

சரி, எவ்வளவு தண்ணீர் குடிப்பது நல்லது? எனும் கேள்விக்கு ஆரோக்கியமான மனிதன் ஒருநாள் இரண்டரை லீற்றர் தண்ணீர் குடிப்பது உடலுக்கு மிகவும் நல்லது என்கின்றனர் மருத்துவர்கள்.

· அதிக வியர்வை சிந்தி வேலை செய்பவர்கள் அதற்கேற்ப அதிக தண்ணீரைக் குடிக்கவேண்டும் என்பதும், விளையாட்டு வீரர்கள் தண்ணீருக்குப் பதிலாக உப்பு, காபோவைதரேட் இவை கலந்த ஐசோடானிக் பானத்தை அருந்தலாம் என்பதும் மருத்துவர்களின் பரிந்துரையாகும். *






# விண்ணக வாழ்வின் இரண்டு ஆண்டுகள்



## திருமதி கோசலராணி திரிலோகஈஸ்வரா

அன்னையின் மடியில்: 12.08.1950

கயவர்களின் பிடியில்: 19.09.2008

திதி: பூர்வபக்க பஞ்சமி (12.09.2010)

ஈராண்டுகள் பறந்து ஓடியதம்மா அன்புச் செல்வமே
ஏக்கப் பெருமூச்செறிந்து புலம்பித் தவிக்கின்றோம்
பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய் திகழ்ந்தாயே
ஆற்றுவார் யாருமில்லை மீண்டெழுந்து வரமாட்டாயோ
காலனவன் கள்ளனவன் உருவில் மாயமாய் வந்ததேனோ
தீயாகக் கனத்த இதயத்தின் வலியோடு
விழிகள் குளமாய் வழிந்தோட வாடி வதங்குகின்றோம்
ஈராண்டு என்ன ஆயிரம் தான் ஆனாலும்
ஆறாத்துயர் அடங்கிடுமோ எங்கள் குலவிளக்கே
மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புள்ளத்தின்
ஆத்மா சாந்தி அடைய வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

24, பறாடி லேன்,
அரியாலை.

உன் பிரிவால் வாடும்:
கணவர், மகன் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## செப்ரெம்பர் 12 முதல் செப்ரெம்பர் 18 வரை

தருபவர் - வித்யா

### மேஷம்



இந்த வாரம் உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். [illegible]களுக்காக செலவிடலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். வேலைப்பளு கூடும். கடன் மிகுதிகள் வரலாகும். குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். சில விடயங்களை நினைத்து அதிக அளவில் பயம் கொள்வீர்கள். கணவன், மனைவி உறவில் அவ்வப்போது சிறு, சிறு உரசல்கள் உருவாகும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சகோதரிகள் வழியில், வாகனங்கள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். வண்டி வாகனங்களில் செல்லும் போது கவனமாகச் செல்ல வேண்டும்.அதே நேரத்தில், குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு அடிக்கடி ஆட்படலாம். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் அல்லது மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். மாற்று மதத்தினர், மாற்று மொழி பேசுவோரால் அனுகூலம் பெறலாம். பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவியைச் செய்வீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

### இடபம்



இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். ஆசைப்பட்ட பொருட்களை வாங்குவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். திட்டமிட்ட சில வேலைகள் நடக்காமல் மற்றவர்களால் தடை ஏற்படலாம்.இதுவரை சகோதரர்கள், பங்காளிகளுடன் ஏற்பட்ட பகை மாறி, பாசம் அதிகரிக்கும். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். திட்டமிடாத சில காரியங்களும் நடக்கலாம். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காணப்படும். தடைப்பட்ட கட்டடப் பணிகளை முடுக்கி விடுவீர்கள்.அதேநேரத்தில், பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், வாகனப் பராமரிப்புப் போன்ற வழிகளிலும், விருந்து, உபசரிப்புகளாலும் கணிசமான பணம் கரையலாம். தேக ஆரோக்கிய குறைவாலும் அவதிப்படலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும். தரகுத் தொழில் புரிவோர் ஏற்றம் காண்பர். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். மிதமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். சோர்வு, சோம்பல் கூடும். பணவரவுகளைப் பெறலாம்

### மிதுனம்



இந்த வாரம் குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட வேலைகளில் மாற்றங்கள் செய்யலாம். அடுத்து நடைபெற உள்ள காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றக் கடும் முயற்சிகள் மேற்கொள்வீர்கள். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் சிரமங்கள், கடின வேலை தொடரும். அடுக்கடுக்காக குவியும் வேலைகளால் அவதிப்படலாம். மற்றவர்களை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்க முடியாமல் அனைத்தையும் நீங்களே செய்யும் சூழ்நிலை உருவாகும். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்களுடன் சிறு மனஸ்தாபம் ஏற்படலாம். சகோதரர்கள், பங்காளிகள், கட்டடப் பணிகள், நிலம், பூமி விவகாரங்கள் போன்றவற்றில் சிரமங்கள், இடர்ப்பாடுகள் தொடரும். கடன் பிரச்சினைகளாலும் சிலர் அவதிப்படலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகளின் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். மருத்துவச் சிகிச்சைகளும் திருப்தி தரும் வகையில் அமையும். பொழுதுபோக்கு விடயங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். திடீர் செலவு நேரும்.

### கடகம்



இந்த வாரம் உற்சாகமாக செயற்படுவீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். எதிர்பாராத உதவி, பணவரவு கிடைக்கலாம். பெண்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள்.சூடான பேச்சுக்களைத் த[illegible]ண்டும். வரவுகள் வந்தாலும், அதற்கேற்ற வகையில் செலவுகளும் இருக்கும். மா[illegible]துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் மூலம் உங்களின் குடும்பத்திற்கு சிலஆதாயம் கிடைக்கலாம். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றமான நிலைமை காணப்படும். வழக்கு விவகாரங்களில் வெற்றி உண்டு. வியாபாரிகள் நல்ல வேலையாள்கள் கிடைக்கப் பெறுவர். விலகிச் சென்ற சொந்தங்கள் திரும்ப வந்து சேரும். பதவி உயர்வு வாய்ப்பு சாதகமாகும். சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள். ஏதாவது வேலை நெருக்கடிகள் தொடர்ந்து கொண்டிருக்கும். பெண்கள், நீண்ட தூரப் பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள்.பணவரவு, காரிய வெற்றி உண்டு. செலவு அதிகரிக்கும்.

### சிங்கம்



இந்த வாரம் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சிலர் தங்களின் வேலைகளை உங்களின் தலையில் சுமத்தி விடலாம். எதிர்பாராத திடீர் செலவுகளால் பணப் பற்றாக்குறைக்கு ஆளாகலாம். பரபரப்பாகச் செயற்படலாம். மலை போல் குவிந்த வேலைகளையும் செய்து முடிப்பீர்கள். பல நாள்களாகச் சந்திக்க நினைத்த சிலரை திடீரென சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். பல்வேறு நிலம், பூமி விவகாரங்களில் நினைத்தது நடக்கலாம். உடன் பிறப்புகள் உதவிகரமாக இருப்பர். கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கவலை மாறும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். தொழில் ரீதியான காரியங்களில் நல்ல திருப்பங்களைக் காணலாம். அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை, மருத்துவம் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். அதே நேரத்தில், தேக ஆரோக்கியம் உற்சாகமாக செயல்பட வைக்கும். தரகுத் தொழில் புரிவோர் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். குடும்பச் செலவுகள் கூடும். காரியத் தடை ஏற்படும். பணவரவுகளைப் பெறலாம். நல்ல செய்தி கேட்கலாம்.

### கன்னி



இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கலாம். புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும். குடும்பத்திற்கு தேவையானதை வாங்கிக் கொடுப்பீர்கள். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். சிலருடன் வாக்குவாதத்தில் ஈடுபடலாம்.தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான பயணங்கள், அலைச்சல்களுக்கு ஆட்படலாம். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வருவது தள்ளிப் போகலாம்.சூடான பேச்சு வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். சில வேலைகளை நினைத்த வேகத்திற்கு நடத்திக் கொள்ள முடியாமல் சிரமப்படலாம். அதே நேரத்தில், உறவினர்கள் வருகையால் வீட்டில், கலகலப்பு சந்தோஷம் குடி கொள்ளும். பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தேவையான பணத்தை புரட்டி[illegible] உடல் நலனில் கவனம் அவசியம். உற்சாகம் கூடும். பணவரவு[illegible] சோம்பல் [illegible] கொள்ளும்.

### துலாம்



இந்த வாரம் குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். தம்பதியர் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி பாசம் அதிகரிக்கும். கொடுத்த கடன்கள் வரலாம். விருந்து, உபசரிப்புகளால் சந்தோஷம் அடைவீர்கள். அலைச்சல் இல்லாமல் சுலபமாக சில வேலைகளை முடிப்பீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள். உங்களின் கோபம், அதிகரிக்கும். பொறுமையை இழக்கும் சம்பவங்கள், நிகழ்ச்சிகள் அடிக்கடி நடக்கலாம். அதிகப்படியான வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம். கோபதாபங்களால் அவ்வப்போது மன அமைதி பாதிக்கப்படலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதிலும், விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவதிலும், மற்றவர்கள் மத்தியில் பளிச்சென தோற்றம் அளிப்பதிலும் நாட்டம் செல்லும். அரசியல்வாதிகள், அதிகாரிகள்,தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். மாமன், மைத்துனர்கள், உறவினர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். செலவு, அலைச்சல் உண்டு. மனக்குழப்பங்கள் கூடும். உத்வேகத்துடன் செயற்படுவீர்கள்.

### விருச்சிகம்



இந்த வாரம் வெளியூர் பயணங்கள் செல்லலாம். கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். சிலரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆள்படலாம். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடக்கும். உறவினர்கள் வழியில் கேட்ட உதவிகள் கிடைக்கலாம். மனதிற்கு உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். கடன்களைச் செலுத்துவீர்கள். தொழில், விவசாயம் போன்ற விடங்களில் முன்னேற்றம் காணப்படும். பிரிந்திருந்த குடும்பத்தினர் ஒன்று சேரலாம். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். நண்பர்கள் மூலம் சில காரியங்களைச் சாதித்து அதனால், ஆதாயம் பெறலாம். சகோதரர்கள், பங்காளிகள் வழியிலும், நிலம், பூமி, வீடு பராமரிப்பு, கட்டடப் பணிகள் போன்றவற்றுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். எதிர்ப்புகள், போட்டிகள் இல்லாமல் சில காரியங்களைச் சுலபமாகச் சாதிப்பீர்கள். சகோதரிகள், உறவுப் பெண்கள், விருந்து, உபசரிப்புகள், விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவது போன்ற வழிகளில் செலவுகள் ஏற்படலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். நினைத்த சில காரியங்கள் சிக்கல்கள் இல்லாமல் சுலபமாக முடிவுக்கு வரும். மாமன், மைத்துனர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். அலைச்சல் உண்டு.

### தனுசு



இந்த வாரம் மந்தம், மறதி. கவனக்குறைவு, தண்டச் செலவு, காரியத் தடை போன்றவற்றால் அவதிப்படலாம். சிலருடன் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். வேலைப்பளு அதிகரிக்கும். சோம்பல் அதிகரிக்கும். விருந்து, விசேஷங்களில் பங்கேற்கலாம். சில பிரச்சினைகளை நினைத்து அதிக கவலைப்படுவீர்க்ள். உங்களுக்கு பொறுப்புகளையும், கடமைகளையும் அடுக்கடுக்காக சுமத்தி, அல்லல்பட வைப்பார். சிலர் உத்தியோக ரீதியாக புதிய சூழ்நிலைகளை எதிர்கொள்ளலாம். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். கடந்த காலத்தில் கைவிட்டுப் போனதாக நினைத்த விடயங்கள் இப்போது நல்ல விதமாக நடக்கலாம். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. கடன் விவகாரங்களால் ஏற்பட்ட கவலை மாறும். பொலிஸ் தொடர்பான விஷயங்களில் அனுகூலம் உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள், விருந்து, உபசரிப்புகளால் சந்தோஷம் அடைவீர்கள். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். இழுபறியான காரியங்க்ள் முடிவுக்கு வரும். பணவரவுகளைப் பெறலாம். சுகமான இனிய அனுபவங்களைச் சந்திக்கலாம்.

### மகரம்



இந்த வாரம் உற்சாகம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிரியமான உறவினர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். திட்டமிட்ட சில காரியங்கள் நடக்காமல் தடை ஏற்படலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து பிரச்சினையில் மாட்டிக் கொள்வீர்கள். மறதியால் தண்டச் செலவு ஏற்படும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். வெளிவட்டாரத் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரலாம். தரகுத் தொழில் புரிவோருக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்து செய்யலாம். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காணப்படும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர். பொலிஸ் தொடர்பான அனுகூலமும் உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விஷயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் செலவு நேரும். பணிபுரியும் பெண்கள் கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். கலைஞர்களுக்கு எதிர்பார்த்த வாய்ப்பு கிடைப்பது தள்ளிப் போகலாம். கலகலப்பான அனுபவங்களைச் சந்திக்கலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வெற்றியுண்டு.

### கும்பம்



இந்த வாரம் எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சிலரிடம் கேட்ட உதவிகள் கிடைக்கும். பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உற்சாகம் கூடும். சிரமம் இருந்தாலும், சில வேலைகளை உற்சாகமாகச் செயற்பட்டு முடிப்பீர்கள். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் வராமல் இழுத்தடிக்கலாம். குடும்பத்தில் அமைதி பாதிக்கப்படும். உறவினர்களின் விமர்சனங்களுக்கு அடிக்கடி ஆள்படலாம். வேலையாள்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்குவர். வழக்கு விவகாரங்கள் நினைத்தபடி நடக்காமல் பிரச்சினைகள் உருவாகலாம். சொத்து வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் இழுபறிக்குப் பின் கிடைக்கும். கடன் பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். உறவுப் பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கத் திட்டம் போடுவீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறுவர். பொழுது போக்கு, கேளிக்கை கொண்டாட்டங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். தந்தை தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். எதிலும் கவனமாக செயற்பட வேண்டும். மறதியால் அவதியுண்டு. பக்தி நாட்டம் கூடும்.

### மீனம்



இந்த வாரம் பிள்ளைகள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். சிறிய விடயங்களுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். சக ஊழியர்கள், நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். அரசு ஒப்பந்தம் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை வழியில் நீங்கள் எதிர்பாராத சில உதவிகள் கிடைக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வந்து சேரும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம்.தொழில், விவசாயம், உத்தியோகம் போன்ற விடயங்களில் அவ்வப்போது இடையூறுகள் ஏற்படும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். சொந்தபந்தங்களின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் தொல்லைகளைச் சந்திக்கலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களிலும் எச்சரிக்கை அவசியம். பெண்களால் அனுகூலம், சந்தோஷம் உண்டு. ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். நண்பர்களுக்காகச் செலவிடலாம். கவனம் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நடைமுறைகளுக்கு முற்றிலும் மாறுபாடானவை ஆஸ்திரேலியாவின் தேர்தல் பிரசாரங்களும் வாக்களிப்பும்

ஆஸ்திரேலியாவில் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கும், செனேற் சபைக்குமான தேர்தல்கள் கடந்த மாதம் 21ஆம் திகதி இடம்பெற்றன. இத் தேர்தல்களைக் கண்காணிக்கும் சர்வதேச பிரதிநிதிகள் குழுவில் இலங்கையின் சார்பாகக் கலந்து கொண்ட குழுவின் உறுப்பினரும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளரும், தற்போதைய யாழ். மாவட்ட பதில் உதவித் தேர்தல்கள் ஆணையாளராகக் கடமையாற்றுபவருமான ஏ.எஸ்.கருணாநிதி, இடம்பெற்ற ஆஸ்திரேலிய தேர்தல்களில் தாம் அவதானித்த அம்சங்கள் குறித்து எழுதிய கட்டுரை இது.

உலகின் பெருமைமிக்க ஜனநாயக விழுமியங்களையும், அரசியல் கலாசாரத்தினையும் கொண்ட ஆஸ்திரேலியாவில் கடந்த ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி மக்கள் பிரதிநிதிகள் சபைக்கும், செனேற் சபைக்கும் (இரண்டு சபைகளையும் உள்ளடக்கியதே நாடாளுமன்றமாகும்) தேர்தல்கள் நடைபெற்றன. இத் தேர்தல்களைக் கண்காணிப்பதற்காக ஆஸ்திரேலிய தேர்தல் ஆணையாளரது அழைப்பின் பேரில் நானும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் பி.எம். சிறிவர்த்தனாவும் (தேர்தல் ஆணையாளர் விடுமுறையில் சென்றிருப்பதால் இவரே தேர்தல்கள் ஆணையாளரது கடமைகளை மேற்கொள்கின்றார்) அங்கு சென்று திரும்பினோம். எனக்கு ஆஸ்திரேலிய தேர்தல்களில் ஏற்பட்ட அனுபவங்களில் பின்வரும் விடயங்கள் குறித்து உங்களுடன் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

* ஆஸ்திரேலியாவின் அரசியல் அமைப்பு
* வாக்காளராகப் பதிதல் (கட்டாயமானது)
* தேர்தலில் வாக்களித்தல் (கட்டாயமானது)
* தேர்தல் நடைமுறைகள்
* எல்லமே நம்பிக் கையின் அடிப்படையில்
* கரும்புள்ளி

## இம்முறை தேர்தலில் ஏற்பட்டுள்ள தொங்கு நாடாளுமன்றம் அந்நாட்டின் வரலாற்றில் கரும்புள்ளி என வருத்தம்

**ஆஸ்திரேலியாவின் அரசியல் அமைப்பு**

ஆஸ்திரேலியாவின் அரசியல் அமைப் பானது முடிக்குரிய ஆட்சியை ஏற்றுக் கொண்டிருப்பதுடன் அவருடைய பிரதிநிதியாக ஆளுநர் நாயகம் செயற்படுகின்றார். இது ஆறு சமஷ்டி அரசுகளையும் இரண்டு சிறு



ஆஸ்திரேலிய நாட்டுத் தேர்தல் ஆணையாளருடன் கட்டுரையாளர்

நிலப்பரப்பையும் கொண்ட ஆட்சி அலகையும் கொண்ட நாடாகும். முடிவுகள் எடுக்கும் அதிகாரம் கொண்டதாக சமஷ்டி நாடாளுமன்றம் விளங்குகிறது. இது மக்கள் பிரதிநிதிகள் சபையையும் செனேற் சபையையும் உள்ளடக்கியதாகும்.

## நம்பிக்கையின் அடிப்படையிலேயே தேர்தல் செயற்பாடுகள்

மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு மொத்தம் 150 பிரதிநிதிகள் மக்களால் தேர்தெடுக்கப்படுவார்கள், சனத்தொகை அடிப்படையில் பிரதி நிதித்துவம் சமஷ்டி அரசுகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது.

**செனேற் சபை**

சமஷ்டி அரசுகளிலிருந்து 6 பிரதிநிதிகள் வீதமும் சிறு நிலப்பரப்பைக்கொண்ட இரண்டு அலகுகளிலிருந்து இருவர் வீதமும் மொத்தமாக 40 செனற் சபை உறுப்பி ன்ர்கள் தேர்தெடுக்கப்படுவார்கள்.

இது தவிர சமஷ்டி அரசுகள் ஒவ்வொன்றும் சமஷ்டி அரசு நாடாளுமன்றத்தைக் கொண்டிருக்கின்றன. இவைகளும் மேற்கூறியவாறு இருசபைகளைக் கொண்டிருப்பதுடன் அதன் பிரதிநிதிகளும் மக்களால் தெரிவு செய்யப்படுவார்கள்.

**வாக்காளர் பதிவு (கட்டாயமானது)**

18 வயதினைப் பூர்த்தி செய்த ஒவ்வொருவரும் தேர்தல் இடாப்பில் தமது பெயரைப் பதிவு செய்தல் கட்டாயமாகும். 17 வயதை பூர்த்தி செய்தபின் வாக்காளர் இடாப்பில் பதிய முடியுமாயினும்,18 வயதைப் பூர்த்தி செய்த பின்பே வாக்களிக்க முடியும். பல்வேறு நிறுவனங்களிலும், இணையத் தளங்களிலும் இருந்து பதிவதற்கான விண்ணப்பப் படிவத்தை பெற்று தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பதிவை மேற்கொண்ட ஒவ்வொருவருக்கும் பதிவு விவரங் கள் தேர்தல்கள் திணைக்களத்தால் அறிவிக்கப்படும்.



வாக்குகள் எண்ணப்படும் போது கண்காணிப்புக் கடமையில் கட்டுரையாளர்

**தேர்தல் வாக்களிப்பு கட்டாயமானது**

ஆஸ்திரேலியப் பிரஜையாகத் தகுதி பெற்ற ஒவ்வொருவரும் வாக்காளர் இடாப்பில் தம்மைப் பதிவு செய்து கொள்ளவேண்டியது கட்டாயமானதுடன், பதிவு செய்யப்பட்ட ஒவ்வொருவரும் வாக்களிப்பதும் கட்டாயமானதாகும். வாக்களிக்கத் தவறும் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆஸ்திரேலிய டொலர்கள் (இலங்கைப் பணத்தில் ரூபா2000/=) தண்டப்பணம் அறவிடப்படும். மேற்கூறிய நிபந்தனைகள் சுவையானதாகும். "கட்டாயப் பதிவும் வாக்களிப்பும் ஒருவரது அடிப்படை உரிமையை மீறுவதாகும். இலங்கையில் இப்படியான நடைமுறையை விதிக்கவும் முடியாது. பல சட்டரீதியான சிக்கல்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்" என ஆஸ்திரேலிய தேர்தல்கள் ஆணையாளரிடம் கேட்டேன். "ஆஸ்திரே லிய நாடு எப்படி ஆளப்படுதல் வேண்டும் என்பது குறித்த கருத்தை வெளிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு ஆஸ்திரேலியப் பிரஜைகளினதும் கடமையாகும். கட்டாயப் பதிவும் வாக்களிப்பும் இல்லாத விடத்து தெரிவு செய்யப்படும் சபைகள் முழு ஆஸ்திரேலிய பிரஜைகளை பிரதிநிதித்துவப் படுத்துவதாக அமையாது.

போட்டியிடுபவர்கள் மக்களின் பிரச்சினைகளில் மட்டும் கவனம் செலுத்துபவர்களே அன்றி மக்களை வாக்களிக்க தூண்டுவதில் நேரத்தையும் பணத்தையும் செலவிட மாட்டார்கள். வாக்காளர்கள் எல்லோரும் தாம் விரும்பிய பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுக்கச் சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது."

எனது கேள்விக்கு ஆஸ்திரேலிய தேர்தல்கள் ஆணையாளர் வழங்கிய பதிலே மேற்குறிப்பிட்டவைகளாகும். என்னால் ஏற்கவும் முடியவில்லை; நிராகரிக்கவும் முடியவில்லை. அவர்களது ஜனநாயக அரசியல் கலாசாரம் கட்டாயத்திற்கு இடமளிக்கின் றது. ஆனால் எம்மால் இதனை நினைத் துக் கூடப் பார்க்க முடியவில்லை.

**தேர்தல் நடைமுறைகள்**

* பாதுகாப்புத் தரப்பினரின் பிரசன்னம் காணப்படவில்லை.
* பொலிஸ் தரப்பினரின் பிரசன்னம் காணப்படவில்லை
* கட்சிகளின் அலறல் பிரசாரம் காணப்படவில்லை.
* பதாகைகள், பனர்கள் காணப்படவில்லை
* சண்டைகள், சச்சரவுகள் காணப்படவில்லை
* அரசியல் அழுத்தங்கள் காணப்படவில்லை

அது ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய ஜனநாயக வெற்றியாகும். இந்த அரசியல் கலாசாரத்தை இலங்கை யின் அரசியல் கலாசாரத்துடன் என் மனதிற்குள் ஒப்பிட்டுப் பார்த்த போது நான் மிகவும் வெட்கப்பட்டேன்; வேதனைப் பட்டேன். மேலே குறிப்பிட்டது போல் தேர்தலுக்கு முன்போ, தேர்தல் அன்றோ, தேர்தலின் பின்போ எங்குமே என்னால் பாதுகாப்புத்தரப்பினரையோ, தேர்தல் கடமைக் காக பொலிஸ் தரப்பினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த தையோ காணமுடியவில்லை. தேர்தல் நடைமுறைகளைக் கண்காணிப்பதற்காக விரும்பிய வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்வதற்கோ, பெறுபேறுகள் வெளியிடும் இடத்திற்கு செல்வதற்கோ மிக முக்கிய நபருக்கான (VIP) 'பாஸ்' எமக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒரு வாக்களிப்பு நிலையத்தில் அமுல்படுத்தப்பட்ட வாக்களிப்பு நடைமுறைகளை விபரிப்பதன் மூலம் ஆஸ்திரேலியாவின் வாக்களிப்பு நடைமுறைகளை எம்மால் புரிந்துகொள்ள முடியும்.

வாக்களிப்பு நிலையத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்படுபவர் முதல் நாள் தனது சொந்த வாகனத்தில் சென்று பொலிஸ் அலுவலர் எவருமின்றி வாக்காளர் இடாப்பு, வாக்குச்சீட் டுக்கள், வாக்குப் பெட்டிகள் மற்றும் படிவங்களை தேர்தல் ஆணையாளரிடம் பெற்றுக்கொள்வார். வாக்களிப்பு நிலையத்திலும் பொலிஸ் அலுவலர் எவரும் காணப்படமாட்டார்கள்.

இச் சந்தர்ப்பதில் எமது தேர்தல் சட்ட விதியொன்றைத் தொட்டுச் செல்ல மனம் விரும்புகின்றது. "வாக்குச்சீட்டுக்களோ வாக்குப்பெட்டிகளோ இலங்கைப் பொலிஸாரின் பிரசன்னத்துடனேயே எடுத்துச் செல்லப்பட முடியும்" 2004 ஆண்டில் நடை பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது முல்லைத்தீவு மாவட்ட வாக்களிப்பு நிலயங்கள், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள ஓமந்தையில் கொத்தணி முறையில் அமைக்கப்பட்டிருந்தன. முல்லைத்தீவு கச்சேரியில் நடைபெற்ற தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பில் என்னிடம் பின்வரும் கேள்விகள் கேட்கப்பட்டன. 'க.பொ.த சாதாரண தர, உயர்தர பரீட்சைகளை முல்லைத் தீவில் நடந்த முடியுமானால் ஏன் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை இங்கு அமைக்க முடியாது?'

இது சுவையானதும் நியாயமானதுமான கேள்விதான். நான் தேர்தல் சட்ட விதிகளைச் சுட்டிகாட்டிப் பதிலளித்தேன்.

(19ஆம் பக்கம் பார்க்க)



ஏ.எஸ். கருணாநிதி
(உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கிளிநொச்சி/ முல்லைத்தீவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

பருத்தித்துறை, புலோலி முதலாம் கட்டையில் 4 அறைகள் கொண்ட அழகிய வீடு தென்னங் காணியுடன் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:-
0714447764

## குறுநாடக ஆக்கத்திறன் போட்டியில் முதலிடம்

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய தமிழ்மொழிப்பாட ஆசிரியை திருமதி கஜநந்தினி வரதலோஜன் கலாசாரத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் குறுநாடக ஆக்கம் நிகழ்வில் முதலாம் இடம் பெற்றுள்ளார்.

இப்போட்டியில் மேலும் திருமதி ஸ்ரீலேக்கா பேரின்பகுமார் (ஆசிரியை- மன்/நாணாட்டான் ம.வி) இரண்டாமிடமும் திருமதி மீரா மொஹி டீன் உம்மு நஸீலா மூன்றாம் இடமும் பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-267)

## வசீகரத் தோற்றத்திற்கு!
## சந்தனாலேப




(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பூ, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஒளடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம்

**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250. (வி/555203)

## நொதேண் ஸ்போட்ஸ் கிளப்

**HORSE + DOG RACE BETTING CENTRE**

கொமிஷனுக்கு பந்தயச் சிட்டைகள் எடுப்பதற்கு ஆள்கள் தேவை. கொமிசனை நேரில் பேசலாம். உடனே வரவும். கிறவுண் அன்ட் அங்கர் (CROWN AND ANCHOR) 11.09.2010 சனிக்கிழமை தொடங்கும்.

**தொடர்பு: 70, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 2223873**

## செல்வா திரையரங்கு - யாழ்ப்பாணம்




அர்ஜுன், மம்முட்டி, சினேகா நடித்த அக்ஷன் திரைப்படம்

**வந்தே மாதரம்**

காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.00

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

## வேலைவாய்ப்பு

**UNITED COLOUR SEPARATION** நிறுவனத்துக்கு **GRAPHIC DESIGNER** உடன்தேவை.

தொடர்பு கொள்ளவும்
ST.XAVIER Lane,
MALLAGAM
JAFFNA.
MOBILE- 0777347452

## இறைச்சிக்கோழி விற்பனை

கல்பேட், புறொயிலர்தினமும்சுத்தம்செய்துகாலை 6மணி தொடக்கம் இரவு 8 மணி வரை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19,முருகேசர் லேன்,நல்லூர்.

## நம்பமுடியாத சந்தோஷம்

உலகத்தரம் வாய்ந்த அழகுசாதனப் பொருள்களை விற்பனை செய்யும் கம்பனியில் அழகுசாதனப் பொருள்களை நம்பமுடியாத விலைக்கழிவில் பெறுவதோடு, விலை கூடிய பொருள்களைக் குறைந்த விலையில் பெறலாம்.

அத்துடன் நீங்களும் உங்கள் நண்பர்களும் சேர்ந்து இக்கம்பனியில் பொருள்களை வாங்கும்போது உங்கள் வங்கி மீதி அதிகரிக்கும்.

தொடர்புகளுக்கு:- 0776622194

## கொடிகாமத்தில் காணி விற்பனைக்கு

தவசிகுளம், மிருசுவில், கொடிகாமம் அரசினர் வைத்தியசாலைக்கு முன் வீதியில் A-9வீதியிலிருந்து 500 மீற்றர் தூரத்துள் நல்ல குடியிருப்புச் சுற்றாடலில் நீர், மின்சார வசதியுடைய 32 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கைத்தொழில் முயற்சிகளுக்கும் உகந்த இடம். பிரித்தும் கொடுக்கப்படும்.

0779757531

## கார் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள 12ஸ்ரீXXXX இலக்கமுடைய Lancer Box model கார் A\C உட்பட அனைத்தும் இயங்கும் நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0774528818

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பம், வயது 32, அரசாங்கத்தில் நிரந்தர உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. செவ்வாய் தோஷம் இல்லை. பாவம் குறைவு. நட்சத்திரம் திருவாதிரை.
தொடர்பு: விளம்பர இல: 4069
சே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொ.பே :0779419522

## வீடு விற்பனைக்குண்டு

கண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும், 3 பரப் புக்காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 16/3, விதானையார் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776146434

## கடை வாடகைக்குண்டு


ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், ஸ்ரேசன் குவாட்டஸ் முன்பாக தளபாடங்களுடன் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:ச.முத்துலிங்கம்
387, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக).

## மணமகள் தேவை

73இல் பிறந்த 5 அடி 6அங்குலம் உயரம் உடைய நல்லொழுக்கமுடைய கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த அமெரிக்க நிரந்தர குடியுரிமை உடைய மருத்துவ பட்டதாரிக்கு (MBBS) மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை.
தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்: 0777252026

## நீங்கள் ஏமாற வேண்டாம்.!!

நீங்கள் வாங்கும் நீர் குழாய்களிலும் பொருத்துக்களிலும் எஸ் லோன் இலட்சினை இல்லையெனில் அவை எஸ் லோன் அல்ல.




எஸ் லோன் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளதா என்று சரி பார்த்து வாங்குங்கள்

S-lon

என்றும் முன்னணியில்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
148, வொக்சோல் வீதி, கொழும்பு 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காலத்தின் ஆவணப்படுத்தலாக அமையும் சிறுகதைத் தொகுதி இது.

நூலின் பெயர்: நவாலியூரான் சிறுகதைகள்
ஆசிரியர்: நவாலியூர் நா.செல்லத்துரை



சினிமா, நாடகம் ஆகிய துறைகளில் பன்முகக்கலைஞராகவும், 1968ஆம் ஆண்டு சிறந்த நாவலுக்கான இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசினைப் பெற்றவருமான நவாலியூரானின் சிறுகதைத் தொகுதி நூலாக வெளிவந்திருக்கிறது. காலத்துக்குக் காலம் படைக்கப்படும் தமிழ் இலக்கியங்கள் அக்காலப் பரப்பில் நடந்த செய்திகளையும் மக்களின் சமுதாய, வாழ்வியல் இயல்புகளையும் கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் சுட்டி நிற்கின்றன. அந்த வகையில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலக்கியப் பணி ஆற்றிவரும் நவாலியூரானின் சிறுகதைத் தொகுப்பு நூல் காலத்தின் ஆவணப்படுத்தல் என்று கூறினால் மிகையாகாது.

இளம் பச்சை நிறத்திலான அட்டை முகப்பில் கலைஞரின் முகத்தோற்றத்தோடு வெளிவந்திருக்கும் இச்சிறுகதை நூலுக்கு சி.சரவணபவன் (சிற்பி) அவர்களின் நயப்புரை அணி சேர்க்கிறது. நூலின் பதிப்பாசிரியர் என்ற முறையில் வி.பி.தனேந்திரா அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இளம் வயதில் இலக்கிய உலகிற்கு அவர் அளப்பரியசேவை ஆற்றி வருகின்றார். தான் மதிப்பும், அன்பும் வைத்துள்ள நவாலியூரானின் இச்சிறுகதை நூலினை அவர் யாழ்.சாதவல்லி வெளியீட்டகத்தினர் மூலம் வெளிக் கொணர்ந்துள்ளார். நூலின் பெறுமதி மதிப்பு ரூபா 200/= ஆகும்.

இறையுள் சங்கமமான கர்நாடக இசைமேதை லயனல் திலகநாயகம்போல், நன்கொடையாளர் ஆறுமுகம் நவநீதகிருஷ்ணன் ஆகியோருக்கு சமர்ப்பணமாக்கப்பட்டிருக்கும் இந்நூலானது. பதின்நான்கு சிறுகதைகளைக் கொண்டுள்ளது. ஏற்கனவே ஈழத்துப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த சிறுகதைகளோடு வெளிவராத சில சிறுகதைகளையும் உள்வாங்கியுள்ளது. இந்நூல் ஏழைத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரச பணியாளர்கள் ஆகியோருடன் நெருங்கிப் பழகிய நூலாசிரியரின் அனுபவங்களை இந்நூலில் காணமுடிகின்றது. காணாமற் போகும் தன் மகனால் மனமுடைந்து போயிருக்கும் சின்ராசா கதாபாத்திரம், அவனைச் சுற்றி நிற்கும். நெருக்கமில்லாத உறவுகள் ஆகியவற்றின் மனித நேய வெளிப்பாடுகள் 'நன்றி மறக்கா ஒருவன்' என்ற சிறுகதையில் வியாபித்திருக்கின்றன. மேலும் அன்பு, இரக்கம், ஒற்றுமை, கோபம், வெறுப்பு, நன்றி மறத்தல் ஆகிய மனிதப் பண்புகளைத் தன் சிறுகதைகளினூடாக ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். போர்க்காலச் சூழலின் காரணமாக மனித சமூகத்தின் வாழ்வியலில் ஏற்பட்ட பாதிப்புக்களை மிகவும் சூசகமாக இச்சிறுகதைப் படைப்பில் கூறியிருப்பது சிந்தனைக்குரியதாகின்றது. மொத்தத்தில் நயப்புரையில் 'சிற்பி' அவர்கள் கூறியது போல

## நூல் வரிசை

மனிதனுடைய உணர்ச்சிகளைச் செம்மைப்படுத்தும் சிறப்பாற்றல் கலை, இலக்கியங்களுக்கு உண்டு என்ற ஆசிரியரின் நம்பிக்கையைப் பிரதிபலிப்பதுடன் எதிர்கால சந்ததியினர் நூல் ஆசிரியர் கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை அவர்களை எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கும் ஆவணமாகவும் இந்த நூல் விளங்கும் என்பது புலனாகின்றது.

அரியாலையூர் சி.சிவதாசன்

* * *

### வணிகத் துறை மாணவர்களுக்கு பயன்தரவல்ல நூல் இது

நூலின் பெயர்: இலங்கை மத்தியவங்கி.
ஆசிரியர்: வே.கருணாகரன்




கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பில் கற்கின்ற சகல மாணவர்களும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கடினமாக உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வணிகத்துறை மாணவர்கள் புதிய புதிய விடயங்களைத் தேடிக் கற்பதன் மூலமே உயர் புள்ளிகளைப் பெறமுடியும். பொருளியல் மற்றும் வணிகக்கல்வி ஆகிய பாடவிடயங்கள் மாற்றமடைந்து கொண்டே செல்கின்றன.

1997 ஆம் ஆண்டு மாற்றமடைந்த பொருளியல் பாடப்பரப்பானது 2010 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையுடன் முடிவிற்கு வருகின்றது. 2011 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய கற்க வேண்டியவர்களாக உள்ளனர்.

பொருளியற் பாடம் ஒரு கவர்ச்சிகரமான பாடம் மட்டுமன்றி, மதிப்பு மிக்க பாடமுமாகும்.

திரு.வே.கருணாகரன் ஆசிரியர் அவர்கள் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக "இலங்கை மத்திய வங்கி" (CENTRAL BANK OF SRI LANKA) எனும் தலைப்பில் கவர்ச்சிகரமான அட்டை முகப்புடன் வெளியிட்டிருக்கும் நூலானது முழுமையான அறிவுத்தேடலை மேற்கொள்ளும் மாணவர், ஆசிரியர்களுக்கு மிகுந்த பலனைக் கொடுக்கும் என்பது திண்ணம். அதுமட்டுமன்றி பொது அறிவுத் தேடலுக்கும் உகந்ததாக இந்நூல் அமைகின்றது.

2011 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தோற்ற விருக்கும் மாணவர்களுக்கு பரீட்சை வினாத்தாள் அமைப்பிலும் மாற்றம் கொண்டுவருவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. பல்தேர்வு வினாக்கள் அதிகமாகக் கொண்ட வினாத்தாள் பத்திரம் I எனவும் பல்வேறு உபபிரிவுகளைக் கொண்ட கட்டமைப்பு வினாத்தாள் பத்திரம் II எனவும் அமையும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இவ்வெதிர்பார்ப்பினை நிறைவு செய்யும் வகையில் ஆசிரியருடைய இந்நூல் அமைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியானது நாட்டின் பண நிரம்பலைக்கட்டுப்படுத்தி பொருளாதார உறுதி நிலையைப் பேணுவதற்கு கையாளக்கூடிய வழிமுறைகள் தொடர்பான வினாக்கள் உயர்தரப்பரீட்சையில் தொடர்ந்து வந்த வண்ணமுள்ளன. பண நிரம்பலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளில் கொள்கை வட்டிவீதங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இநநூலிலே கொள்கை வட்டி வீதங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. மேலும் "இயங்கு திறந்த சந்தை நடவடிக்கை" (Active Open Market Operation) போன்ற பல்வேறு புதிய விடயங்களைத் தாங்கி வெளிவந்திருக்கும் இந்நூல், பொருளியல் மற்றும் வணிகக் கல்வி மாணவர்கள் கற்றுப் பயனடையவும், பொருளியல் ஆசிரியர்கள் சிறந்த முறையில் கற்பிப்பதற்குப் பயன்படுத்தவும் வழிகாட்டியாக அமைகிறது.

பொருளியல், வணிகக்கல்வி சார்ந்து வெளியிடப்படும் புதிய விடயங்கள் சிங்கள மாணவர்களுக்கு உடனுக்குடன் கிடைக்கப் பெறுகின்றன. தமிழ் மாணவர்களுக்கு இவ்விடயங்கள் எட்டாக்கனியாகி விடுகின்றன. எனினும் திரு.வே.கருணாகரன் போன்ற ஆசிரியர்கள் சிலரின் வெளியீடுகளுக்கூடாக தமிழ் மாணவர்கள் பயனடைய முடிகின்றது.

சிறந்த கல்வியறிவினையும் நற்பெறுபேற்றினையும் விரும்புகின்ற மாணவர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும்.

திரு.இ.ஞானேஸ்வரன்
களப்பரீட்சகர்
இலங்கை மத்திய வங்கி
ஆசிரியர்: யா/ மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை.

# இலங்கை நடைமுறைகளுக்கு...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

'பரீட்சைக்கென ஒரு சட்டம் இல்லை. பரீட்சை ஆணையாளர் விதிகளைத் தீர்மானித்து பரீட்சையை நடாத்துவார். ஆனால் தேர்தலுக்கென சட்டம் உள்ளது. அதை மீறி எம்மால் செயற்பட முடியாது' என விளக்கமளித்தேன்.

ஆனால் அவர்கள் அத்துடன் விடவில்லை. மீண்டும் ஒரு பதில் கேள்வியைத் தொடுத்தார்கள். 'ஏன் தேர்தலுக்கு மட்டும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது?' அதற்கு விளக்கமளிப்பதற்கு எதுவித ஆதாரமும் என்னிடம் இல்லை. ஆனால் பதில் அளிக்க வேண்டும் என்பதற்காக எனக்கு தெரிந்த பதிலைக் கூறினேன்.

'தேர்தல் மிக உயர்ந்த அதிகாரம் கொண்டவர்களைத் தெரிவு செய்வதற்காக நடை பெறுகின்றது. இதில் பங்கெடுப்பவர்கள் அரசியல்வாதிகள் ஆவர். சரியானதையும், தமக்கு சாதகம் இல்லாத விடத்து தவறென்று கூறுபவர்கள்.

பிழையானதையும், தமக்கு சாதகமாயின் சரியென்று கூறுபவர்கள். எனவே நீங்கள் தேர்தலை எப்படி நடத்த வேண்டும் என சட்டம் இயற்றி தாருங்கள். நாங்கள் அதன்படி தேர்தலை நடத்துகிறோம். இதுவே தேர்தல் சட்டம் தோன்றியதற் கான எனது கண்டுபிடிப்பு இது. சரியா? தவறா? என்பது எனக்கு தெரியாது.

காலை 8.00 மணிக்கு வெறுமையை தேர்தல் அலுவலர்களுக்கு காட்டப்பட்ட பின் வாக்குப்பெட்டி மூடிக் கட்டப்படும்.

மரத்தால் செய்யப்பட்ட வாக்குப்பெட்டி கட்சி முகவர்களுக்கும், அலுவலர்களுக்கும் காட்டப்பட்டு சிவப்பு நாடாவினால் கட்டப்பட்டு பூட்டால் பூட்டி பூட்டித் திறப்பு, தடிப்பான, கடித உறையில் இட்டு சீல் செய்து தடிப்பான தாள் இட்டு சுற்றிவர பாதுகாப்பான 'ரேப்' ஒட்டப்பட்டு என பயங்கர கட்டுப்பாட்டு நடைமுறைகள் எம் நாட்டில் உள்ளன. அப்படி இருந்தும் பல புகார்கள், சந்தேகங்கள்.

ஆனால் அங்கு வாக்குப்பெட்டி வெறும் காட்போட் டால் செய்யப்பட்ட பெட்டியே ஆகும். மூடி மூடப் பட்டு கட்டப்படுகின்றது. வாக்குச்சீட்டு இடுவதற்கு துவாரம் உள்ளது.

இலங்கை வாக்காளர் நீண்ட வரிசையில் நிற்க வேண்டும். ஒருவர் பின் ஒருவராக வரவேண்டும். தேர்தல் அட்டையை அதிகாரிகளிடம் வழங்க வேண்டும். அடையாள அட்டையை அவர்களுக்குக் காண்பிக்க வேண்டும். பெயர் உரத்து வாசிக்கப்படும், ஆட்சேபனை இருத்தலாகாது. விரலில் வாக்களித்ததை உறுதிப்படுத்துவதற்கு விசேடமை பூசப்படும்.

இத்தகைய வழக்கங்கள் எதுவும் அங்கு நடைமுறையில் இல்லை. பெயர் கேட்கப் படுகின்றது. வேறு இடத்தில் வாக்கு அளிக்க வில்லையா? எனக் கேட்கப் படுகின்றது. வாக்குச் சீட்டு வழங்கப்படுகின்றது. வாக்குச் சீட்டு அடியிதழ் எதுவும் இல்லை. அடையாளம் எதுவும் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. கட்சி களின் முகவர்களும் அங்கு காணப்படவில்லை.

இரண்டு வாக்குச் சீட்டுக்கள். ஒன்று பச்சை நிறமானது. மற்றையது வெள்ளை. பச்சை நிறச் சீட்டு மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கானது. வெள்ளை, செனேற் சபைக்கானது. இரண்டு வாக்குச் சீட்டுக்களையும் இடுவதற்கு வெவ்வேறான வாக்குப் பெட்டிகள். ஒரு சமஷ்டி அரசிற்குரிய அதே சமஷ்டி பிரிவினுள் வேறு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியும். வேறு சமஷ்டி பிரிவில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாது, வேறு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியும் என்ற நடைமுறை இலங்கையில் சாத்தியமற்றது. அரசியல் கலாசாரம் அதற்கு இடமளிக்கமாட்டாது.

வாக்குச்சாவடிக்கு வெளியில் சகல கட்சிகளது பிரதிநிதிகளும் தமது கட்சி வெற்றியீட்டினால் என்ன செய்வோம் (மற்றக் கட்சியின்ரை வசை பாடி அல்ல) என விளக்கித் துண்டு பிரசுரங்களைப் பொது மக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கிடையே எந்த வாக்களிப்பு நிலையத்திலும் பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை.

மாலை ஆறு மணிக்கு வாக்களிப்பு நிலையம் மூடப்பட்டு வாக்களிப்புநிலையத்திலேயே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் நிலையத் துக்குப் பொறுப்பானவரால் தனது கையடக்கத் தொலைபேசி மூலம் உரிய மேலிடத்திற்கு அறிவிக்கப்பட்டது. பின்பு எழுத்திலான முடிவுகள் நேரில் சென்று ஒப்படைக்கப்படும் விதத்திலான இலகுவான நடைமுறைகள் அங்கு.பின்பற்றப்படுகின்ற.

**எல்லாம் நம்பிக்கையின் அடிப்படையில் (EVERTHING ON TRUST)**

தேர்தல் முடிவடைந்த பின் நடைபெற்ற கூட்டத்தில் "வாக்களிப்பின் போது அடையாளம் நிரூபிக்கப்படவில்லை. எதுவித இறுக்கமான நடைமுறைகளும் வாக்களிப்பின் போதும், வாக்குகள் எண்ணப்படும் போதும் பின்பற்றப் படவில்லை." என ஆஸ்ரேலியா வின் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டேன். "எல்லாம் நம்பிக்கை யின் அடிப்படையில் நடைபெறுகின்றது, நாங்கள் மக்களையும் அரசியல் கட்சிகளையும் நம்புகின் றோம், மக்களும் கட்சிகளும் எம்மை நம்புகின் றார்கள், அந்த நம்பிக்கையை சிதறடிக்கும் எவ்வித சம்பவங்களும் இதுவரை நடைபெறவில்லை" என தேர்தல் ஆணையாளர் பதிலளித்தார். 'அந்த நம்பிக்கையை நாமும் நம்புகின்றோம்,' எனப் பணிவாகப் பதிலளித்தேன். (we also trust your trust)

**கரும்புள்ளி**

ஆஸ்திரேலியாவின் தேர்தல் வரலாற்றில் கடந்த மாதம் இடம் பெற்ற தேர்தலில் முதன்முதலாக தொங்கு நாடாளுமன்றம் ஒன்றை மக்கள் தெரிவு செய்துள்ளார்கள், சுயேட்சைகளின் தயவில் அரசாங்கம் அமைவது ஆஸ்திரேலியாவின் பெருமைமிகு அரசியல் வரலாற்றில் பதிந்து விட்ட கரும்புள்ளி ஆகும். அரசியல் கலாசாரம் மிக்க கட்சிகளும் மக்களும் எப்படி அக்கரும்புள்ளியை அகற்றப்போகின்றார்கள் என்பதைப் பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்.

***

## செவ்வாயை விரட்ட வருநம்

கொடியதும் ஏற்றி மக்கள்
குதூகலித்திட வைத்தாய் வேலா!
கொடியதை இறக்கிப் பின்னே
குவலயமும் வியக்க வைத்தாய்
வடதிசைக்கப்பால் உள்ளோர் எல்லாம்
வந்தனர் மகிழ்ந்து சென்றனர்
வடபால் உள்ள மக்கள் இங்கே
வருந்துகிறார் விடிவை நோக்கி
அட! ஒரு மனைவியோடு ஆண்கள்
அவதியுறும் இந்த வேளை
மட மாதர் இருவரை மணந்து நீயும்
மனம் மகிழ்ந்து திளைக்கின்றாயே!
அட இங்கு குமர்கள் ஆயிரம் ஆயிரமாய்
அலைகிறார் மணாளனையே தேடியன்றோ
கொடியதோர் செவ்வாய் குற்ற நோயும்
கொல்லாமல் கொல்லுதிங்கே
உடலும் வருந்தி வாடிப் பின்னே மாதர்
உன்னையே இகழுகின்றார்!
திடமாக இத்துயர் போக்கி
நீயும் இன்னருள் வழங்குவாயே!

விகடகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!

2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.

Organized by pico Events

அனுமதி இலவசம்



## செப்டம்பர் 18-19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்

யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.

JEF

Jaffna Education Fair 2010


### காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல், மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்.

நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.

ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமூட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)

BRITISH COUNCIL — Main Sponsor | acbt, ECU, CSC-ASIAN COMPUTER EDUCATION — Co-Sponsors | Daily News — Print Media Sponsor | உதயன் — Official Tamil Newspaper | Official Electronic Media Sponsor | pico — Official stall contractor | Ministry of Education & Ministry of Higher Education | Northern Provincial Council | Governor's Sub Office, Northern Province

# கண்ணீர் அஞ்சலி

## யதகுலசிங்கம்

## வைகுந்தன் (குந்தன்)

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயர் கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் தவிக்கும் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.14, தாழையடி ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி.

சுதன் குடும்பத்தினர்.

(103227)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம் - நீர்வேலி தெற்கு
# ஸ்ரீ முருகையா கோவில்
## புனருத்தாரண
## மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்
**12.09.2010**

**காலை 8.10 மணிமுதல் 8.30 மணிவரை**



### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி

கந்தபுராண கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட நீர்வேலி தெற்கு ஸ்ரீ முருகையா ஆலயம் (கந்தபுராண கொட்டில் சான்றோர்கள் பக்தர்கள்) இன்றைய நாளில் கும்பாபிஷேகம் நிகழும் நன்நாளில் எல்லா நலன்களும் கிடைக்கப் பெற்று சுபீட்சம் நிறைந்ததாகவும் மங்களம் பெருகிட இந்த ஆலயத்தைப் புனரமைப்புச் செய்த திருப்பணிச் சபையினருக்கும் அடியார்களுக்கும் மற்றையோருக்கும் எல்லா நலன்களும் கிடைக்க ஸ்ரீ முருகையாவின் திருவருள் கிடைக்க ஆசி கூறி அமைகின்றேன்.

சுபம் சுபம்

சிவஸ்ரீ இராஜேந்திரசுவாமிநாத குருக்கள்,
நீர்வைக்கந்தன், தேவஸ்தானம்.

### தல வரலாறு

ஸ்ரீ முருகையா ஆலயம் கந்தபுராணத்தை கலாசாரமாகக்கொண்டு மிகவும் பழமைவாய்ந்த ஆலயம். இதை முன்னோர்கள் கந்தபுராணக்கொட்டில் என்று அழைப்பார்கள். வருடம் தோறும் வைகாசி மாதம் கந்தபுராணப் படலம் நடைபெறும் ஆலயமாகத் திகழ்கிறது. முன்னைய காலங்களில் இவ் ஆலயத்தை வேல் வைத்து வணங்கி வந்தார்கள். தற்பொழுது இந்த ஆலயம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு மூலமூர்த்தியாக முருகவேல் சிறப்புப்பெற்று விளங்குகின்றது. கந்தபுராணப்படலம் நடைபெறும் காலத்தில் ஸ்ரீ முருகையா பக்தர்கள் தினமும் விரதம் அனுஷ்டித்து பத்தியோடும், சிரத்தையோடும் செவிமடுத்து இன்புறுவார்கள். வள்ளியம்மை, தெய்வயானை திருக்கல்யாணம் பூர்த்திசெய்து மறுநாள் அன்னம் பாலிப்பு இடம்பெறும். பூரணபடலம் பூர்த்திக்கு முன்பு சிவபூவை நடைபெறுவது ஒரு சிறந்த அம்சமாகும். இதற்கு முன்னர் இவ்வாலயத்தில் வைகாசி மாதம் 28 நாள் (11.06.1986) புதன்கிழமை ஸ்ரீ முருகையாவிற்கும் புதிதாக அமைக்கப்பட்ட விநாயகர்,வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பின்னர் தொடர்ச்சியாகத் தலைவர் குகமூர்த்தி, இணைச் செயலாளர்கள் சிவபாதசுந்தரம், பத்திநாதன், தனாதிகாரி வேலாயுதபிள்ளை மற்றும் அங்கத்தவர்களால் இவ்வாலயம் பராமரிக்கப்பட்டு வந்தது. பின்பு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இவ்வாலயம் சேதத்திற்குள்ளாகி தனிப்பட்ட இடையூறுகளாலும் பராமரிப்பின்றி நிர்வகிக்கப்படாமல் பல வருடங்களாகக் காணப்பட்டது. இவ்வாலயத்தைச் சூழவுள்ள மக்களுக்குப் பல பாதிப்புக்கள், நோய்துன்பங்கள், இழப்புக்கள் ஏற்பட்டன. இவற்றை கருத்தில் கொண்ட அவ்வாலயத்தின் மீது அக்கறை கொண்ட அன்பர்கள் சிலரின் முயற்சியால் எதிர்ப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து திருப்பணிசபை ஒன்று 04.07.2010 அன்று ஸ்தாபிக்கப்பட்டது. பின் குறுகிய காலத்தில் கும்பாபிஷேகம் நடத்துவதற்காகத் திருப்பணி வேலைகள் முடுக்கிவிடப்பட்டன. பல அன்பர்களின் நிதி, பொருள் உதவிகளால் இவ்வாலயம் தற்போது புத்துயிர் பெற்று புதுப் பொலிவுடன் அப்பகுதி மக்களின் கண்குளிரக் காட்சி தருகின்றது.

### திருப்பணிச் சபையின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணத்தில் நீர்வளம் நிறைந்த அழகிய நீர்வை மண்ணில் வேல்கொண்டு காட்சியளிக்கும் முருகையாவிற்கும் விநாயகர், வைரவர், சண்டேஸ்வரருக்கும் நடைபெறவிருக்கும் மாபெரும் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) விழாவைக் காண புண்ணியம் செய்த நீர்வை சைவப் பெருமக்களுக்கு இன்று ஒரு பொன்னாள்.

சைவத்தையும் தமிழையும் வாழவைத்த பெரியோர்கள் வாழ்ந்த நீர்வையம் பதியில் வேல் வைத்து கந்தபுராணக் கொட்டிலாக வழிபட்டு கந்தபுராணப் பாடல்களை பக்தியுடன் பாடி அனுஷ்டித்து வந்தனர். பின்பு 1986 இல் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மீண்டும் 2010 ஆம் ஆண்டு ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதகுருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இதன் பொருட்டு எமது மக்களும் சமயமும் கல்விச் செல்வம் அனைத்தும் கூடிய சுகமான பேரின்பப் பெருவாழ்வு பெறவும் நாட்டில் சாந்தி, சமாதானம் நிலைத்து சுபீட்சமாக வாழவும் எல்லாம் வல்ல நீர்வை முருகையாப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், திருப்பணிச் சபையினர்
நீர்வை முருகையா ஆலயம்.

**சூரசம்காரா வேல் முருகா...! சுப்ரமணியனே வேல் முருகா...!!**

## கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்


**ஷாம்பவி பதிப்பகம்**
*Shampavi Printers*
276, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4134, 0776184425.

**றியோ ஐஸ்கிறீம்**
உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து வைபவங்களையும் இனிமையாக்கிட சிறந்த ஸ்தாபனம்
நீர்வேலி தெற்கு
0777703766

**வரதன் களஞ்சியம்**
வைரவர் கோயிலடி,
நீர்வேலி தெற்கு.

**ARP**
**ஹாட்வெயர்ஸ்**
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
0779074204

**ஷாம்பவி பதிப்பகம்**
*Shampavi Printers*
கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
0776184425


**சுரேஸ் ஸ்ரோர்ஸ்**
நீர்வேலி தெற்கு


**கஜான்**
பல்பொருள் வாணிபம்
கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

**அபிராமி**
பாமசி அன் போட்டோ கொப்பி லெமினேற்றிங்
பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. 0213210173

**சிற்பாச்சாரியார்**
திரு.தமிழ்ச்செல்வன்
VH லேன், கோப்பாய் தெற்கு,
இருபாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1) UKBA Highly Trusted College
2) IELTS தேவையில்லை
3) 4 வருட visa உத்தரவாதம்
4) 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி (per week)
5) அனைத்து கட்டணங்களும் After Visa
6) மறைமுக கட்டணங்கள் எதுவும் இல்லை
7) 1 மாதத்தில் பயணம்

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

**பதிவுகளுக்கு**

**Colombo - 0117 555514 Jaffna - 021 7538395 Hotline - 0714150995**

பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.
**October/January/February** மாதங்களுக்கான அனுமதிகள் தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
2000 க்கு மேற்பட்ட மாணவர்களை UK யில் உள்ள பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளுக்கு அனுப்பி சாதனை புரிந்த எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.

**EXPONET**
Overseas Consultants

**Head office -**
**379-1/2, Galle Road,**
**Colombo 6, Sri Lanka.**

**Jaffna Branch -**
**102 2/2, Navalar Road,**
**Jaffna.**

**London Branch -**
**No:56,The Gradens**
**Harrow Middlessex**
**Ha1 4EY,UK**

www.expogroup.lk Email:nimal@expogroup.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாதகால அவலம் நேற்று முடிவுக்கு வந்தது

# சாந்தபுரம் கிராமத்தில் 281 குடும்பங்கள் சொந்த வாழ்விடங்களில் மீள் குடியமர அனுமதி

தருமபுரம்,செப்.12

வவுனியா மெனிக்முகாமில் இருந்து அழைத்துவரப்பட்டு சாந்தபுரத்தில் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப் பட்டிருந்த கிளிநொச்சி சாந்தபுரம் கிரா மத்தைச் சேர்ந்த மக்கள் நேற்று சனிக் கிழமை தமது சொந்த வாழ்விடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத் தில் கடந்த மூன்று மாதங்களாக தங்க வைக் கப்பட்டிருந்த இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 281 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயி ரத்துக்கும் மேற்பட்டவர்களே நேற்று மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

இவ்வாறு மீளக்குடியமர்ந்த குடும்பங் களுக்கு தற்காலிக குடியிருப்புக்களை அமைப்பதற்கு தறப்பாள், பலகைத் துண்டுகளும் வழங்கப்பட்டன.

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட சாந்த புரம் கிராமத்துக்கு நேற்றுக் காலை விஜ யம் செய்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவண பவன், அங்கு மீளக்குடியேறிய மக்களு டன் கலந்துரையாடி அவர்களின் தேவை கள் குறித்துக் கேட்டறிந்தார்.

அத்துடன் அங்கு குடியேறியுள்ள குடும்பங்களின் தேவைக்கென தண்ணீர் வாளிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கினார்.

அது மட்டுமன்றி தமிழ்த்தேசியக் கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனால் மக்களுக்கு வழங்குவதற்கு என தயாராக இருந்த நீர் இறைக்கும் இயந் திரம் ஒன்றையும் சரவணபவன் எம்.பி. அந்த மக்களுக்கு வழங்கினார்.

மக்களின் மீளக்குடியமர்வு நடவடிக் கையின் போது கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன், கரைச்சி பதில் உதவி அரசாங்க அதிபர் எ.ஸ். சத்தியசீலன், சாந்தபுரம் பகுதி கிராம அலுவலர் திருமதி ஞானேஸ்வரி சுப்பிர மணியம், ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்க ளின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சாந்தபுரம் கிராமத்தில் இதுவரையும் வெடிபொருள்கள், மிதி வெடிகள் அகற்றப் படாததன் காரணமாகவே அந்தப் பகுதி யில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப் படாமலிருந்ததாகக் கூறப்பட்டது.

எனினும் அப்பகுதி மக்களின் தொடர்ச் சியான கோரிக்கைகளின் பயனாகவே வெடி பொருள்கள் அகற்றப்பட்டு மீளக் குடியமர் வுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் மொத்தம் 925 குடும்பங்கள் நிரந்தரமாக வசித்து வந்தன. அவர்களில் 281 குடும்பங்களே நேற்று மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ-440- 14)

இடம்பெயர்ந்த வன்னி மக்களுக்கு

# சர்வதேச உதவிகளை அள்ளி விநியோகித்து விட்டு அறிக்கைகள் மூலம் பெயரெடுக்கும் அரசியல்வாதிகள்

## சாந்தபுரத்தில் நேற்று சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

தருமபுரம்,செப்.12

உலகநாடுகள் வழங்கும் உதவிகளை தமது கட்சியின் பேரில் மக்களுக்கு அரசி யல் வாதிகள் சிலர் வழங்கி விட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவுவதாக பகி ரங்க அறிக்கைகளை விடுகிறார்கள்.

ஆனால் நாம் மக்களுடன் கலந்துரை யாடி அவர்களின் தேவையை உணர்ந்து அதற்கேற்ப உதவுபவர்களின் உதவிக ளைப் பெற்று அவர்களுக்கு வழங்குகின் றோம். அந்த உதவி மூலம் அந்த மக்களின் தேவைகள் ஓரளவு பூர்த்தியாகின்றன.

இப்படிக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர் ஈ.சரவணபவன்.

சாந்தபுரம் மக்களை மீளக்குடியமர்த் தும் நிகழ்வு நேற்று இடம்பெற்ற போது செய்தியாளர்களிடம் கருத்துக் கூறுகை யில் அவர் இப்படிக் கூறினார்.

இதுவரை மீள்குடியமர்வுக்கு விடுவிக் கப்படாத குடும்பங்களையும் சந்தேகத் தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டவர்க ளையும் விரைவில் விடுவிப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் சிறி தரனும் தானும் தமது கட்சியும் தொடர்ந் தும் முயற்சி எடுத்து வருகின்றோம். கூடிய விரைவில் இவர்கள் விடுவிக்கப் படுவார்கள் என நம்புகின்றோம்.

ஏனைய கட்சியினர் செயற்படுவது போல் சர்வதேச நாடுகளின் அன்பளிப்புப் பொருள்களை மட்டும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கிவிட்டு உதவி புரிவதாக நாங்கள் தெரிவிப்பதில்லை.

உதவிபுரிபவர்களை இனங்கண்டு எம் முடன் இணைந்து செயற்படுமாறு கேட் டுக் கொண்டுள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் சேவைகள் இங்கு விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் சொன்னார். அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:-

இப்பகுதியில் சாந்தன் முன்பள்ளி கடந்த ஒரு மாத காலமாக மீண்டும் தொடக் கப்பட்டு 85 மாணவர்கள் அங்கு கல்வி கற்று வருவது வரவேற்கத்தக்கது. இந்தச் சிறார் களின் கல்வி வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் - என்றார் சரவணபவன் எம்.பி.(ஒ- ஐ- 440)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் சிறுவர் விருதிக் கட்டடம் திறப்பு

தென்மராட்சி, செப்.11

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் ஜப்பானிய நிறுவனத்தின ரால் பல மில்லியன் ரூபா செலவில் நிர் மாணிக்கப்பட்ட இரு மாடிக் கட்டடம் நேற்று வெள்ளிக்கிழமை இந்து சமய முறைப்படி பால் காய்ச்சி சம்பிரதாயபூர்வமாக ஆரம் பித்து வைக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்துகொண்டார்.

கட்டடம் நிர்மாணிப்பதற்கு நிதி வழங் கிய நிறுவனப் பிரதிநிதிகள் வந்து விடுதி யினை வைபவரீதியாகத் திறந்து வைத்த பின்னரே விடுதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# மரண அறிவித்தல்

## இராசலிங்கம் சிவமணிதேவி



681, பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த இராச லிங்கம் சிவமணிதேவி 08.09.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசலிங்கத்தின் (பரஸ்கோ லுப்றிகேசன் சேர்விஸ்) அன்பு மனைவி ஆவார்.

இன்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை நடை பெற இருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்ட அன்னாரது இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் மாற்றஞ்செய்யப்பட்டு நாளை (13.09.2010) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தக னக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

681,பருத்தித்துறை வீதி, நல்லூர். (த-570850)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Are you smart enough to choose your Career?

*IDM Diploma* கல்விநெறியானது இலங்கையின் மூன்றாம் நிலை தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பாடநெறி ஆகும். *IDM Diploma* வினை கற்பதன் ஊடாக ஒரு தொழில் வாய்ப்பினை பெற்றிடலாம் என்பதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை ஒரு தக்க ஆதாரமாக கொள்ளலாம்.

*Smart people choose IDM since 1981*

The Real Sri Lankan Brand for Higher Education

**SPECIALIZED DEGREE FOUNDATION PROGRAMMES IN ICT & MANAGEMENT**

edexcel — advancing learning, changing lives — ACCREDITED
**IDM Diploma In ICT**

edexcel — advancing learning, changing lives — ACCREDITED
**IDM Diploma In Business Management**

DIPLOMA PROGRAMMES — SRI LANKA'S NO. 1

**EQUIVALENT TO THE 1ST SEMESTER OF A BRITISH DEGREE PROGRAMME**

*Enrollments open for August /September Intake :*

Batch-I
13-09-2010
Monday
9.00 am / 3.00 pm

Batch-II
18-09-2010
Saturday
9.00 am / 3.00 pm

Batch-III
20-09-2010
Monday
9.00 am / 3.00 pm

Batch-IV
25-09-2010
Saturday
9.00 am / 3.00 pm

IDM City Campus # 3

*IDM Affiliated Campus-Jaffna*
*# 216,Navalar Road,*
*Jaffna*

*T.P: 021 222 9901*
*www.idmcc3.lk*


## கண்ணீர் அஞ்சலி



**அமரர் யதகுலசிங்கம் வைகுந்தன்**
(முகாமையாளர், கதிரவன் இரும்பகம், சாவகச்சேரி)

எமது நண்பரும் தென்மராட்சி வாழ். மக்களின் நன்மதிப்பைப் பெற்ற வருமாகிய அமரர் யதகுலசிங்கம் வைகுந்தன் அவர்கள் அகால மரண மான செய்தியறிந்து மிகவும் துயரடை வதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்திய டையப் பிரார்த்திக்கிறோம்.

அன்னை றெக்ஸ்
சாவகச்சேரி. (சி/570839)

உரிமையாளரும்,
ஊழியர்களும்.


## திருத்தல யாத்திரை

7நாள்கள் 10 பேர் மட்டும். திருப்பதி, திருக்காளாஸ்தி, காஞ்சிபுரம், திருத்தணி, திருவண்ணாமலை, மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம், சமயபுரம், மேல் மருவத்தூர், இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி அம்மன், திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை, சென்னையில் உள்ள கோயில்கள், எல்லாமாக 35 கோயில்களைத் தரிசிக்கலாம். போக்குவரத்து, உணவு, தங்குமிடம் அனைத்துக்கும் ரூபா 60,000/= மட்டுமே. பதிவுக்கு முந்துங்கள். இச்சலுகை 25.09.2010 வரை மட்டுமே.

தொடர்புகள்:-
Subba: 0711250365
0752784369


## கண்ணீர் அஞ்சலி



**அமரர் யதகுலசிங்கம் வைகுந்தன்**
(முகாமையாளர், கதிரவன் இரும்பகம், சாவகச்சேரி)

எமது நண்பரும் தென்மராட்சி வாழ். மக்களின் நன்மதிப்பைப் பெற்றவருமாகிய அமரர் யதகுல சிங்கம் வைகுந்தன் அவர்கள் அகால மரணமான செய்தியறிந்து மிகவும் துயரடைவதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

யாழ்.றெக்ஸ்,
யாழ்ப்பாணம்:
சாவகச்சேரி.

உரிமையாளரும்,
ஊழியர்களும்.

# கண்ணீர் அஞ்சலி



உற்ற துணையானாய்! உறு நட்புடையாய்!
அற்ற குளத்து ஆம்பலும் நீயானாய்!
இற்று விழுந்ததேன் இதுவும் விதிதானோ?
சுற்றம் நீதானே! சுகமும் நீதானே!
முற்றம் நிறைந்த முழுநிலவு போல் நின்றாய்!
பற்றி எரியுதே! நெஞ்சம் பதைக்குதே!
மீண்டும் உனைக் காண நெஞ்சம் துடிக்குதே!

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு,
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர்
**யதகுலசிங்கம் வைகுந்தன்** (குந்தன்)
(முகாமையாளர்-கதிரவன் இரும்பகம், சாவகச்சேரி)

பிரிவால் துயருறும்:

யாழ்ப்பாண வணிக நிலையம்,
யாழ்ப்பாண இரும்பகம், கதிரவன் இரும்பகம்,
J.T. ரான்ஸ்போட், கிருஷ்ணா தொலைத் தொடர்பக
உரிமையாளர்களும், ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மக்கள் பணத்தில் கைவைக்க திறைசேரியை அனுமதித்தது யார்?

ஊழியர் சேமலாபநிதியை, தனியார் ஹோட்டல் ஒன்றின் சார்பில் பங்குகளை வாங்குவதற்கு, திறைசேரி முதலீடு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. மத்திய வங்கியின் விதி முறைகளை மீறி, திறைசேரி சட்டவிரோதமான இந்தச் செயற்பாட்டில் இறங்கியதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, திறைசேரியின் இந்தச் சட்ட விரோதச் செயற்பாட்டை ஒரு முறைப்பாடாக நாடாளுமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இத்தனைக்கும், வங்குரோத்து அடைந்து, மூடும் தறுவாய்க்கு வந்துள்ள ஹோட்டலை நிமிர்த்துவதற்காகவே, திறைசேரிப் பணம் அந்தக் ஹோட்டல் சார்பில் பங்குப் பரிவர்த்தனைச் சந்தையில் இடப்பட்டுள்ளதாகவும் லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டினார்.

இலட்சக்கணக்கான தனியார்துறைப் பணியாளர்களின் ஓய்வுக்குப் பிந்தியகால வருவாயாக விளங்கும் அவர்களின் முப்பது, நாற்பது வருடக காலச் சேமிப்பை, திரட்டிய பணத்தை, திறைசேரி தான்தோன்றித்தனமாக வங்குரோத்துக் கண்ட தனியார் ஹோட்டலுக்கு முதலீடாக வழங்கி இருப்பது அத்தனை இலட்சம் தனியார்துறைப் பணியாளர்களுக்குச் செய்யும் துரோகம் ஆகும்.

சேமலாபநிதியை, பங்குப் பரிவர்த்தனையில் இடுவதன் மூலம் முறிந்துபோகும் நிலையில் உள்ள தனியார் ஹோட்டலை, அதன் மூலம் நட்டமடையும் அல்லது மூடும் நிலைக்கு வந்த முதலாளிகளைக் காப்பாற்றி, அவர்கள் பண முதலைகளாக மாற வாய்ப்பு வழங்குவது இந்தச் சட்ட விரோதச் செயலின் நோக்கம் எனலாம்.

திறைசேரி நிதியை தனியார்துறைக்குக் கடனாக வழங்குவதோ, அரசாங்கச் செலவீனங்கள் தவிர்ந்த வேறு திட்டங்களுக்கு வழங்குவதோ சட்ட விரோதம். அவ்வாறிருக்க, ஊழியர் சேமலாப நிதிப் பணத்தை - மக்கள் பணத்தை - பங்குப் பரிவர்த்தனைச் சந்தையில் இட்டு, ஹோட்டல் பங்குதாரருக்கு உதவுவது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம். மக்கள் பணத்தைச் சுயலாபங்களுக்கு அதிகாரிகள் பயன்படுத்தி இருப்பது பெரும் மோசடியாகும்.

ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களுக்கு அநியாயம் செய்து அவர்களது பணத்துக்குச் சேர வேண்டிய வட்டியை இல்லாமல் போக்கி பாதிப்புறச் செய்வது அரசாங்கம் (திறைசேரி) இழைத்த மாபெரும் துரோகம் இது.

திறைசேரி மேற்கொண்ட இந்த மாபெரும் மக்கள் துரோகம், அரசாங்கத்தின் உயர்பீட வட்டாரங்களுக்குத் தெரியாமல், அத்தகையோரின் செல்வாக்கு இல்லாமல் நடத்திருக்க முடியாது. நாட்டின் சட்டத்தை மீறிய இந்த மோசடி - குற்றம் - அரசாங்கத்தின் செல்வாக்குப் பெற்றவர்களின் பங்களிப்புடனும் ஆசீர்வாதத்துடனும் மட்டுமே நடந்திருக்க முடியும். எந்த வழியூடாக இருப்பினும், சம்பந்தப்பட்ட திறைசேரி அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிலாளர்களின், தனியார்துறைப் பணியாளர்களின் பணத்தை தவறாகக் கையாண்டதன் மூலம் அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்குத் திறைசேரி தவறிவிட்டது. இதனால் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அபகீர்த்தி உண்டாகும் என்பதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்.

நட்டம் அடைந்து வங்குரோத்து நிலையை எட்டவிருந்த தனியார் உல்லாச ஹோட்டல் முதலாளிகளைக் காப்பாற்றுவதற்காக, அவர்களுக்கு முண்டு கொடுப்பதற்காக, பொது மக்கள் பணத்தை - அவர்கள் வியர்வை சிந்திப் பாடுபட்டு உழைத்துத் தேடிய பணத்தை - பயன்படுத்தியமை மக்களுக்குச் செய்த நம்பிக்கைத் துரோகமாகும்.

இதில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்க அரசு முன்வருமா? அதற்குத் துணைபோன அரசியல்வாதிகள் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படுவார்களா? மக்கள் ஆட்சி நடத்துவதாகத் தம்பட்டம் அடிக்கும் அரசு, அவர்களுக்கு துரோகம் செய்வது, துரோகம் செய்வோருக்குத் துணைபோவது என்று யாவற்றுக்கும் பக்கத்துணையாகச் செயற்படுகிறதா?

அவ்வாறில்லை என்றால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு உடன் செயலில் இறங்கியாக வேண்டும். இதுகுறித்து விசாரணைகளை ஆரம்பித்து தவறு இழைத்தோரைத் தண்டித்தாக வேண்டும். நடைபெறுமா?

# மரண தண்டனை, நீண்டகாலச் சிறை அனுபவித்துவரும் 60 வயதைக் கடந்த கைதிகளுக்கு விரைவில் விடுதலை

## அமைச்சர் டியூ குணசேகர ஜனாதிபதிக்குப் பரிந்துரை

கொழும்பு, செப்.12

மரண தண்டனை, ஆயுள் காலச் சிறைத் தண்டனை உள்ளடங்கும் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகால சிறைத் தண்டனைகளை அனுபவித்துவரும் 60 வயதைக் கடந்த நன்நடத்தையுள்ள சிறைக்கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக ஜனாதிபதியிடம் பரிந்துரைக்கவுள்ளதாகச் சிறைச்சாலைகள், புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ குணசேகரவின் அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சிறைக் கைதிகளுள் பெரும்பாலானோர் உடல் உபாதைகளினாலும் மன உளைச்சல்களாலும் துன்புறுவதோடு பலர் தொடர்ச்சியாகவே சிறைச்சாலைகளிலுள்ள வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வருவதைக் காண முடிகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

இத்தகைய கைதிகள் தொடர்பான விவரங்கள் அடங்கிய அறிக்கையை சிறைச்சாலைகள் ஆணையாளரிடம் தாம் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கைக்கு அமைய 60 வயதைக் கடந்துள்ள சிறைக்கைதிகளின் குற்றங்கள் மற்றும் அவர்களின் நடத்தைகளுக்கு அமைவாகத் தரப்படுத்தி அவர்களை விடுதலை செய்வது தொடர்பாக ஜனாதிபதியின் அனுமதியைப் பெறுவதற்கு தாம் ஆவன செய்யவுள்ளதாவும் அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டின் சிறைச்சாலைகளின் வருடாந்த அறிக்கைக்கு அமைய, சிறைச்சாலைகளில் 60 வயதைக் கடந்த ஆண் கைதிகள் 638 பேரும் பெண் கைதிகள் 25 பேரும் இருப்பதாகத் தகவல் தெரிவிக்கின்றன. (த-22)

# யாழ்.சிறையில் இருந்து 24 கைதிகள் இன்று விடுதலை

யாழ்ப்பாணம், செப்.12

கைதிகள் தினத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 20 ஆண்களும், 4 பெண்களுமாக 24 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர் என யாழ்ப்பணம் சிறை அத்தியட்சகர் சந்தன எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

20 ஆண் கைதிகளில் 16 கைதிகள் யாழ். சிறையில் இருந்தும் நான்கு சிங்களக் கைதிகள் பலாலி வேலைத் தளத்தில் இருந்தும் விடுதலையாவார்கள் எனவும் சந்தன எக்கநாயக்க கூறினார். (த-7)

### யாழ்ப்பாணத்திலும் நல்லிணக்க ஆணைக்குழு கூடுகிறது

# சாட்சியம் அளிக்க விரும்புவோர் எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், செப்.12

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு அடுத்த மாதம் 9ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது.

இந்த ஆணைக்குழுவின் முன்பாக எவரேனும் சாட்சியம் அளிக்க விரும்பினால் "கொழும்பு 7, இல.24, ஹோட்டன் பிளேஸில்" அமைந்துள்ள லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் அமைந்துள்ள ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

கிழக்குக்கும் ஆணைக்குழு சென்று பொது அமர்வுகள் நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-ஐ)

# கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் புல்லாங்குழல் கச்சேரி

யாழ்ப்பாணம், செப்.12

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் 'புல்லாங்குழல் கச்சேரி' இடம்பெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் புல்லாங்குழல் ஆசிரியர் எ.புவனேந்திரராஜாவின் நெறியாள்கையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் எ.புவனேந்திரராஜா (புல்லாங்குழல்), திருமதி மங்கை லக்ஷ்மி வர்ணகுலசிங்கம் (வயலின்), கலாவித்தகர் கிருபா அனந்தகோபன் (மிருதங்கம்), ஸ்ரீதரன் டிலுக்ஷன் (கடம்) ஆகியோர் வழங்குவார்கள்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை அமெரிக்க மிசன் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட்பணி பி.தேவமித்திரன் கலந்து சிறப்பிப்பார். (த-26)

# சாரணிய கருத்தரங்கு நாளை கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், செப்.12

வடமாகாண சாரணர், சாரணிய நிர்வாகிளுக்கான அபிவிருத்திக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 8 மணி முதல் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்தக் கருத்தரங்கு கிளிநொச்சி கல்வி வலயத்தில் குருளைச் சாரணர், சாரணிய, சாரணர் ஆசிரியர்களுக்கு குறிப்பாக ஆரம்பப்பயிற்சி பெற்றவர்களை அனுப்பி வைக்குமாறு அதிபர்களைக் கிளிநொச்சி உதவி மாவட்ட (நிர்வாக) ஆணையாளர் பொ.சிறிஸ்கந்தராசா கேட்டுள்ளார். (ஒ-ஐ)

# வடமராட்சி கிழக்கு மக்களுக்கு இயல்பு வாழ்க்கை ஏற்படுத்த முயற்சி

## அடிப்படை வசதிகள் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.12

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் ஒரு பகுதியாக வடமராட்சி ப.நோ.கூ.சங்கத்தின் கிளைகள் உடுத்துறை, செம்பியன்பற்று தெற்கு ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வாரத்தில் 3 பாடசாலைகளை அங்கு மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை, மருதங்கேணி இ.த.க.பாடசாலை உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இவ்வாறு ஆரம்பிக்கப்படவுள்ளன.

பிரதேச சபையை மீளவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் மருதங்கேணியில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக புதுக்காட்டுச் சந்தியில் இருந்து ஆழியவளை வரை பஸ் சேவையும் நாளை மறுதினம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதேவேளை-

சேரன்பற்று பாலத்திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கு ஒரு மாதகாலம் தேவை. அந்தக் காலப் பகுதிகளில் மாற்றுப் பாதை ஏற்பாடுகளை இராணுவம் மேற்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மருதங்கேணி வைத்தியசாலையை மீள இயக்குமுகமாக புனரமைப்பு வேலைகளுக்கு இராணுவம் பூரண ஒத்துழைப்புகளை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு குடியேறிய மக்களுக்கு குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-15)

# யுத்தத்தால் பாதிப்புற்ற மாணவர்களின் பல்கலை. அனுமதியில் சலுகை வழங்குக

## மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை

கொழும்பு, செப்.12

வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்கள் மற்றும் இடைத்தங்கல் முகாம்களில் இருந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள இளைஞர்கள், யுவதிகள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் போது அவர்களுக்கு விசேட கவனம் செலுத்தி சலுகைகளை வழங்குமாறு வன்னிப்பிரதேசப் பெற்றோர் மானிய ஆணைக்குழுவிக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

'யுத்தத்தினால் கல்வி இழந்தோர் சங்கம்' மூலமாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், யுத்தத்தின் காரணமாக கல்வி வாய்ப்புகள் இழக்கப்பட்டமை மற்றும் தடைகளை கவனத்தில் கொண்டு இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி அமைப்பின் அமைப்பாளரான பொன்னையா முத்தையா தெரிவித்துள்ளார். (த-22)

# நாளை

ஆவணி 28 13.09.2010
திங்கட்கிழமை
திதி: : பஞ்சமி
காலை 06.37 வரை
நட்சத்திரம் : சஷ்டி
மு.இ.08.10 வரை
சுபநேரம் : 12.03-01.33 வரை
ராகுகாலம் : 07.33-09.03 வரை

# வடபகுதியில் 60 வீதமான விவசாயிகள் மிளகாய்ச் செய்கையைக் கைவிட்டுள்ளனர்

## விவசாயத் திணைக்களம் தகவல்

கொழும்பு, செப்.12

வடபகுதி விவசாயிகளில் நூற்றுக்கு அறுபது வீதமானோர் மிளகாய்ப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதை முற்றாக நிறுத்திக் கொண்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவு தெரிவித்துள்ளது.

மிளகாய்ப் பயிர்ச் செய்கையின் போது தேவைப்படும் விவசாய இரசாயன மருந்து வகைகளின் விலை மட்டங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளமை மற்றும் விவசாய நிலங்களுக்கு நீரைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள பல்வேறு விதமான கஷ்டங்களே அவர்கள் மிளகாய்ச் செய்கையைக் கைவிட்டுள்ளமைக்குக் காரணமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ள ஆய்வுகளின்படி கடந்த 2006 ஆம் ஆண்டில் வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் விவசாயிகள் ஆயிரத்து 69 ஹெக்ரயர் நிலத்தில் மிளகாய்ப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருந்தனர் எனவும், ஆனால் 2009ஆம் ஆண்டில் அது 207 ஹெக்ரயர்களாக வேகமாகக் குறைவடைந்துள்ளதாகவும் விவசாயத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி தேவை

பிரபல தனியார் பாடசாலைக்கு G.C.E. O/L சித்திய டைந்த ஆங்கில அறிவுடைய, வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் வேலைபார்க்கக் கூடிய ஆசிரியைகள் தேவை.

★ கணக்கியல், அலுவலக நிர்வாக கடமை புரிவதற்கு இளைப்பாறிய ஆண், பெண் உத்தியோகத்தர் தேவை.

★ கணனி அறிவுடைய தமிழ், ஆங்கில தட்டச்சு தெரிந்த அலுவலக பெண் உத்தியோகத்தர் தேவை.

**நேர்முகத் தேர்வுக்கு: 0773627055, 0774083656**

## 45 ஆவது பிறந்த தினமும் ஒரு வருடப் பூர்த்தி சிரார்த்த தினமும்



சிவகடாட்சம்பிள்ளை

சத்தியகுமாரன் (மாவை வரோதயன்)

(சுகாதாரப் பரிசோதகர், பொறளை அரச வைத்தியசாலை, கொழும்பு)

திதி: 16.09.2010

மலர்வு: 12.09.1965

உதிர்வு: 28.08.2009

ஆண்டுகள் அனைத்தாலும்
அழியாது நினைவு என்றும்
அன்பிற்குச் சிற்பியாய் நின்று - எம்
அகத்திடைச் சிற்பமானாய்
அறிவுடை மனத்தின் நின்று அதை
ஆற்றத்தான் ஏது மார்க்கம்.

என்றும் நின் நினைவில் தவிக்கும்:
தந்தை, தாய், சகோதரங்கள்,
குடும்பத்தினர்.

இந்துக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு. (103181)

## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்வன் சிறீஸ்கந்தராசா
ரமேஸ்குமார்

(யா/யூனியன் கல்லூரி ஆண்டு 11 மாணவன்)

மண்ணில் மழலையாய் 12.06.1979

விண்ணில் தெய்வமாய் 12.09.1995

சிட்டுக் குருவியொன்று
பட்டுச் சிறகு விரித்து
எமையெல்லாம் தவிக்கவிட்டுப்
பதினைந்து யுகம் கடந்ததுவோ!
என்னைய்யா வாழ்க்கையிது

கூடப் பிறந்த உறவொன்று
கூடு விட்டுப் போனதை
பாவி நாம் எங்கு தான்
முறையிடுவோமோ?

ஏழாலை கிழக்கு,
ஏழாலை. (103244) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ஒளவை சிவநேயன் (லீலா)




வராம்பற்றை, கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஒளவை சிவநேயன் (லீலா) நேற்று (11.09.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை சிவநேயனின் அன்பு மனைவியும் கார்த்திகாவின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான அரசகேசரி (ஆயுர்வேத வைத்தியர்) - மங்கையர்க்கரசி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செ.செல்வராசாவின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை (அதிபர்) - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவேந்திரன் மற்றும் Dr.சிவபாலன், சிவராணி, சிவதாசன், சிவானந்தன் சிவசுப்பிரமணியம், சிவகுமாரி சிவயோகன், காலஞ்சென்ற சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு, கோப்பாய். (103257) தகவல்: மகள், குடும்பத்தினர்.

### திருமதி கந்தையா இளையாச்சி



V.C.C., மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில் முருகமூர்த்தி கோவிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இளையாச்சி நேற்று (11.09.2010) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரன் - கதிராசி தம்பதிகளின் அன்பு மகளும் கந்தையாவின் (ஓய்வுபெற்ற அம்பியூலன்ஸ் சாரதி) அன்பு மனைவியும் நடேசின் அன்புச் சகோதரியும் பத்மாவதி, நாகேஷ்வரன், ரஞ்சினிதேவி, ஸ்ரீகாந்தரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வ.திருநாவுக்கரசு, சி.யோகராசா, நா.மங்கையர்க்கரசி, சி.கிருசாந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி கோவிலடி,
உடுவில், சுன்னாகம். (103264) தகவல்: குடும்பத்தினர்.


Baraka®

உங்கள் நலத்தின் பங்காளி



JointSafe

மூட்டுவலிகளினால் ஏற்படும் உபாதைகளுக்கான நிவாரணி.



Memo-Plus

கற்றல், ஞாபகசக்தி மற்றும் மனம் சம்பந்தமான தொழிற்பாடுகளை அதிகரிக்கும்.



FOOT-KIO

பித்த வெடிப்பு மற்றும் வரண்ட சருமத்தினை மென்மையாக்கும்.



HAIRMENN

இளநரை மற்றும் முடி உதிர்தலை தடுக்கும்.

Manufactured by:
BIO EXTRACTS (PVT) LTD.
No: 11, S.De. S. Jayasinghe Mawatha, Kalubowila, Dehiwela.
Marketed by:
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.

HOT LINE: 0777 800668

யாழ். விநியோக முகவர்:
SIVA NARUMANAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna.
TEL: 0212222567


## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் செந்தில்பிரகாஷ்

(சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற அலுவலர்)



தைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் செந்தில்பிரகாஷ் 10.09.2010 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் இராசரத்தினம் - சிவஞானபூபதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் செல்வப்பிரகாஷ் (கனடா), செந்தூர்பிரகாஷ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (சி/570848) தகவல்: குடும்பத்தினர்.

## சர்வதேச லயன் கழகங்கள் - 306 B - 1 பிராந்தியம் 08 - செயற்திட்டம்

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி அவர்களின் வழிநடத்தலில் சர்வதேச லயன்ஸ் கழகம் 306 B - 1 - பிராந்தியம் 08 இன் கழகங்களும் கிளிநொச்சி இராணுவ தலைமைச் செயலகமும் இணைந்து நடத்தும் செயற்திட்டம்

காலம்: இன்று (12.09.2010) ஞாயிறு
நேரம்: காலை 8.30 மணி தொடக்கம்
இடம்: கிளிநொச்சி சாந்தபுரம் மகா வித்தியாலயம்

**செயற்திட்டங்கள்**

1. மருத்துவ முகாமும், மருந்து வழங்கலும்
2. நீரிழிவு பரிசோதனையும், விழிப்புணர்வும்
3. கண்பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்கலும்
4. 15 வயதிற்குட்பட்டவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளும் பரிசில் வழங்கலும்
5. சிறுவர்களை மகிழ்வூட்டும் நிகழ்வுகள்
6. பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்
7. முதல் உதவி பயிற்சியும், முதல் உதவிப்பெட்டி வழங்கலும்

இந்நிகழ்வுகளில் லயன்ஸ் கழகங்களில் 306 B - 1 இன் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ஜெயவத்சலன் அவரது பாரியார் லயன் சிமாட்டி சயந்தினி ஜெயவத்சலன் அவர்களும் பிரதம அதிதிகளாகக் கலந்து சிறப்பிப்பார்கள்.

ஆதரவற்றோர்களுக்கு இன்னருள் அளிப்போமாக.
ஒருசோகக் கண்ணீரைத் துடைப்போம்.
சமாதானத்தையும் அன்பையும்
லயனிசத்தின் ஊடாக அடைதல்.

S.L.ஜெபராஜா
(103239) (தலைவர் - பிராந்தியம் 08).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 ★ 08 ★ 1916



மறைவு 13 ★ 08 ★ 2010

### திருமதி தங்கரத்தினம் கந்தசாமி

அன்பு மழை பொழிந்து ஆறுதலைச் சொரிந்து
துன்பமேமை அணுகாமல் துணையாய்த் துணிவுதந்து
இன்றுவரை எம் வாழ்வில் தீபமாய் ஒளிகொடுத்தீர்
என்றுமெம் உள்ளத்தில் அணையாத சுடரானீர்

கடந்த 13.08.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி, தொலைநகல், கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலிபுரிந்தோருக்கும், பத்திரிகை, துண்டுப்பிரசுரம் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் பல்வேறு வகைகளில் உதவிகள் புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'சிவை',
உடுவில் மேற்கு,
சுன்னாகம். (103229)

திரு.திருமதி சிவாஜி,
திரு.திருமதி சிவராஜசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் சேதமடைந்த பாடசாலைகளை புனரமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பம்

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.12

யுத்தத்தால் சேதமடைந்த வன்னி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் விரைவில் புனரமைக்கப்படும்.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வன்னி மாவட்டத்தில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பகுதிகளில் அனேகமான பாடசாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 54 பாடசாலைகளில் 53 பாடசாலைகளும் கிளிநொச்சியில் உள்ள 121 பாடசாலைகளில் 81 பாடசாலைகளும் இயங்கத் தொடங்கியுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 54 பாடசாலைகளில் 17 பாடசாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

புதுக்குடியிருப்புப் பகுதியில் மக்கள் மீள் குடியேற்றப்பட்டதும் அங்குள்ள பாடசாலைகளை இயங்கவைப்பது தொடர்பாக ஏற்பாடுகள் செய்யப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 24ஆயிரத்து 794 மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் இணைந்துள்ளனர். ஆயிரத்து 357 ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது வன்னியில் இயங்கும் 28 பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு 'யுனிசெவ்' நிறுவனம் உதவ முன்வந்துள்ளது.

அத்துடன் வடக்கின் மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் ஏனைய பாடசாலைகளும் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தப் புனரமைப்புப் பணிகள் யாவும் இன்னும் ஓரிரு தினங்களில் ஆரம்பிக்கப் படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-9)

### அமைச்சுக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்களின் செயற்பாடுகளை இரகசியமாகக் கண்காணிப்பதன் மூலம் அவற்றின் செயல்திறனை மட்டுமன்றி, மக்கள் நலன் நாடிய திட்டங்களை வகுப்பதில் அமைச்சர்களின் நாட்டம், திறமை, பெறுபேறு என்பவற்றையும் ஜனாதிபதியின் புலனாய்வு இரகசியக்குழு மதிப்பீடு செய்து அவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும் தெரியவருகிறது.

இந்த அறிக்கைக்கு அமைய சில அமைச்சர்களின் அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றம் செய்யப்படலாம் என்றும் சிலர் அமைச்சர் பதவிகளில் இருந்து பதவி இறக்கப் படலாம் என்றும் அறியப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதியின் விசேட புலனாய்வு இரகசியக் குழு அந்தந்த அமைச்சுக்களின் கீழ்வரும் திணைக்களங்களில் இடம்பெறுவதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகள் குறித்து கவனம் செலுத்தும் என்றும் கூறப்பட்டது.

இதற்கிடையில் -

தற்போது அரசுடன் இணைந்து கொண்டுள்ள ஐ.தே.கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலருக்கும் மற்றும் அரசுக்கு ஒத்துழைப்பு நல்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் பெரும்பாலும் அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என்றும் தகவல்கள் தெரி விக்கின்றன.

மேலும், அமைச்சரவை மறுசீரமைப்பின் போது மத்திய, ஊவா, தெற்கு, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதியமைச்சர்கள் சிலர் அமைச்சர்களாகப் பதவி உயர்த்தப்படுவர் என்றும் பேசப்படுகிறது. (அ-ஐ-22)

### பல்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றைச் சேர்ந்த 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இது தொடர்பாக அரச உயர் மட்டத்தை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள தகவல்கள் வருமாறு:-

லக்ஷ்மன் செனவிரத்ன, ரவூப் ஹக்கீம் மற்றும் அப்துல் காதர் ஆகிய பிரமுகர்களுக்கே அமைச்சர் பதவிகள் கிடைக்கவுள்ளன. அவற்றுக்கு மேலதிகமாக இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரால் பரிந்துரைக்கப்படும் அவரது கட்சியைச் சேர்ந்த மேலும் இரு உறுப்பினர்களுக்கும் ஏர்ள் குணசேகரவுக்கும் பிரதி அமைச்சர் பதவிகள் கிட்டவுள்ளன.

இவர்களுக்குக் கையளிக்கப்படவுள்ள அமைச்சுத் துறைகள் தொடர்பாக இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்கால பதவிப் பிரமாணம் இடம்பெறும் நவம்பர் மாதத்தில் அது தொடர்பாகத் தீர்மானிக்கப்படும்.

மேலும், அரசமைப்புத் திருத்தத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய எஞ்சியுள்ள எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சில அமைச்சுக்களைக் கண்காணிக்கும் பொறுப்புக்கள் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. அவற்றை விட அவர்கள் முன்வைக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான நிதி ஒதுக்கீடுகளை தாமதமின்றி வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. (ஒ-ஐ-22)

### தேசியமட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது.

ஆண்கள்பிரிவில் வடமாகாணத்திலிருந்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆனைக்கோட்டை பால சுப்பிரமணியம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அணிகள் கலந்துகொண்டன.

நேற்று நீர்கொழும்பில் பலத்த எதிர் பார்ப்புக்கு மத்தியில் இடம் பெற்ற ஆண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி தேசிய ரீதியில் முதலிடம் வென்று சாதனை படைத்ததுடன் வடமாகாணத்துக்கும், யாழ்.மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்தது. அத்துடன் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொரு அணியான ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இரண்டாம் இடத்தைத் தட்டிச்சென்றது. மூன்றாம் இடத்தை உனுமுல்ல மத்திய கல்லூரி பெற்றுக் கொண்டது.

பெண்கள் பிரிவில் வடமாகாணத்தின் சார்பில் வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (த-86)



ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அணியினர்.

### யாழ்.வரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் உள்ளிட்ட சுமார் 10 பேரை உள்ளடக்கிய குழுவினர் பங்கேற்கின்றனர். கலந்துரையாடல் யாழ்.அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறும்.

இதில் மாவட்ட செயலக அதிகாரிகள், முகாமைத்துவ அலகின் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், துறைசார் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி பேரலை அனர்த்தத்தைத் தொடர்ந்து அந்தத் தினம் ஒவ்வொரு வருடமும் தேசிய பாதுகாப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு இலங்கையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அது தொடர்பான நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இந்த வருடம் தேசிய பாதுகாப்பு தினத்தை யாழ்.மாவட்டத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த விடயம் தொடர்பாக ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு முன் ஏற்பாடாகவே அமைச்சரின் யாழ்.விஜயம் அமைந்துள்ளது என்று அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இதேவேளை, மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முகைதீன் ஜும்ஆ பள்ளி வாசலுக்கு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு விஜயம் மேற்கொள்ளும் அமைச்சர் பௌஸி, அங்கு யாழ்.மாவட்டத்தில் மீள்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், யாழ்.நகரில் இன்று காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கும் விமான பயணச்சீட்டு பதிவு அலுவலகத்தின் திறப்பு விழா வைபவத்திலும் அமைச்சர் பௌஸி கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

### அதிருப்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக கட்சியின் சிரேஷ்ட தலைவர் கரு ஜெயசூரியாவிடம் கேட்ட போது -

கட்சிக் கூட்டத்தை உடன் கூட்ட வேண்டிய தேவை ஏற்படவில்லை. தேவை ஏற்படும் போது கூட்டத்தைக் கூட்டி மறுசீரமைப்புக் குறித்து அறிவிக்கப்படும். இதுவே கட்சித் தலைவரின் நிலைப்பாடு - என்று கூறினார்.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சித் தலைமையின் நிலைப்பாட்டை வரவேற்றுள்ளார்.

இதேவேளை -

தமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து அதிருப்திக்குழு கூடி ஆராயவிருக்கிறது. (ஒ-ஐ)

### சாந்தபுரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் கடந்த மூன்று மாதங்களாக தங்க வைக் கப்பட்டிருந்த இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 281 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களே நேற்று மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

(விரிவான செய்தி, படங்கள் 3ஆம், 23ஆம் பக்கங்களில்)

### யாழ்.குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தில் தாமும் பங்குபற்ற விருப்பதாக கூட்டமைப் பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்தி மற்றும் மீள் குடியமர்வு மீளாய்வுக் கூட்டத்தில் பங்குபற்றுவீர்களா என சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டபோது -

கொழும்பில் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற சந்திப்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ செப்ரெம்பர் 3ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து எமது உறுப்பினர்களுடன் மீள்குடியமர்வு குறித்து ஆராய்வதெனவும்-

அதன் பின்னர் வலி.வடக்கில் மீளக் குடியமர்த்தப்படும் இடங்களை நேரில் பார்வையிடுவது என்றும் தெரிவித்தார்.

ஆனால் அந்தக் கூட்டம் ஒத்திவைக் கப்பட்டதாக திடீரென அறிவிக்கப்பட்டது.

அதே கூட்டம் மீண்டும் யாழ்ப்பாணத் தில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் இது தொடர்பாக உத்தியோகபூர்வ அழைப்பு இதுவரை கிடைக்கவில்லை.

அழைப்புக் கிடைத்தால் கூட்டத்தில் பங்குபற்றுவோம் - என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். (ஒ-ஐ)


**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள 36 சிறி டிரைக்ரர் பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு : 0774366700, 0774216598

**வேலையாள் தேவை**

விடுதி ஒன்றிற்கு தங்கிநின்று வேலை செய்ய சிங்களம் தெரிந்தவர் தேவை.

தொடர்புகளுக்கு : யாழ். போன் சொப், இல.10, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 0773611282

**காணி விற்பனைக்கு**

அச்செழு, நீர்வேலி, பூலசிட்டியில் அமைந்துள்ள 2¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : T.P. 0770731050

**வாடகைக்கு வீடு தேவை**

சாவகச்சேரிக்கும் புத்தூர் சந்திக்கும் இடையில் நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்கு தேவை.

T.P. No - 0775002381, 0213209409

**The Royal College of Jaffna**

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில

By விக்னேஸ்வரன் ஆச்சாரி.

426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

பிளாக் வீதி, சங்கானை.

Tel. - 077-6751649

**வேலையாள் தேவை**

யாழ்.நகரில் இயங்கிவரும் பான்சி கடைக்கு வேலையாள் (பெண்) தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குள், அல்லது நகருக்கு அண்மையில் வசிப்பவரும், முன் அனுபவம் உடையவரும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 9793300, 021 222 7638

**சிறப்பு சலுகையுடன் புதிய பிரிவுகள்**

Tally — Power of Simplicity

Real Offer 75% for All — உண்மைக் கட்டணக்கழிவு

அனைத்து மாணவர்களுக்கும் 4200 ரூபா மட்டும் செலுத்தி கற்கும் அரியவாய்ப்பு.

Get Certificates from Tally Solutions

Diploma in Computerized Accounting

#Quick Books # Accpack # MYOB # Tally

DMI COMPUTER EDUCATION

NO. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel. 021-222 4403

M. M. V. வீதி, நெல்லியடி. Tel.: 021-320 7700

**தவறிவிட்டது**

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தனியார் பஸ்ஸில் பயணம் செய்யும்போது உடுப்புக்கள் அடங்கிய பெரிய ஒன்று கடந்த 09.09.2010 வியாழக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : T.P. - 0776067012

**COMPUTER REPAIRING**

சகலவிதமான கணனிகளும் (LAPTOP/DESKTOP) உங்கள் வீடுகளுக்கோ, அல்லது நிறுவனங்களுக்கோ வந்து உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். கணனியில் ஏற்படும் வைரஸ் பிரச்சனைகளுக்கு அதிநவீன Antivirus Software மூலம் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

புதிய, பாவித்த கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தும் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள முடியும்

STR COMPUTER SYSTEM

384, NAVALAR ROAD, NALLUR, JAFFNA.

T.P- 0212224459, 0774192275

**கேள்வி கோரல்**

அல்வாய் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய தீர்த்தக்கேணி புனரமைப்பு

மேற்படி புனரமைப்பு வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க ஆலய நிர்வாகசபை தீர்மானித்துள்ளது. தீர்த்தக்கேணி வேலைகளில் அனுபவமுள்ள கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை தர விரும்பும் ஒப்பந்தகாரர்கள் ஆலய நிர்வாகத்திடம் தொடர்புகொண்டு இடத்தைப் பார்வையிட்டு 30.09.2010 ஆம் திகதிக்கு முன் கூறுவிலை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: சதாபொன்ஸ் தொ.பே.: 021 226 3206

கு.சிறிசண்முகநேசன் தலைவர்.

**STR COMPUTER SYSTEM**

384, NAVALAR ROAD, NALLUR, JAFFNA.

TEL: 021-222 4459, 021-4590775, 0774192275, FAX : 021-222 4460.

COMPUTER CLASSES

CERTIFICATE IN INTERNET & E-MAIL

CHATTING, DOWNLODING, WEB & E-MAIL ADDRESS CREATING, FACE BOOK, VIDEO CALL, NET CALL. என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

8 STUDENTS IN A BATCH

(கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இயக்கச்சி, முகாவில் பகுதி மக்கள் செவ்வாயன்று மீள்குடியமர அனுமதி

கிளிநொச்சி, செப். 12

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள இயக்கச்சி, கோயில் வயல், முகாவில் ஆகிய பகுதிகளுக்கு மக்கள் மீளக் குடியமர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுகளுள் அடங்கும் இயக்கச்சி, கோயில் வயல், முகாவில் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மெனிக் பாம் இடைத் தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 150 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே தமது சொந்த இடங்களான மேற்படி பகுதிகளில் குடியமர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு தறப்பாள் மற்றும் பலகைத் துண்டுகள் வழங்கப்படும். அவற்றைக் கொண்டு தற்காலிக குடியிருப்புகளை அவர்கள் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

படிப்படியாக அந்த மக்களுக்கு நிவாரண உதவிகளும் வாழ்வாதார ஊக்குவிப்புகளும் வழங்கப்படும். இது பொதுவாகவே மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிகளாகும்.

மீளக்குடியமரவுள்ள மக்களுக்கு மிதிவெடி அபாயக் கல்வி விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மீளக்குடியமரவுள்ள பகுதிகளில் வெடிபொருள் மற்றும் மிதிவெடி அபாயமுள்ள பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவை தவிர ஏனைய பகுதிகளிலேயே மக்கள் குடியமர்த்தப்படவுள்ளனர் - என்றார். (ஐ-14)

## மெகா மஜிக் இன்று மட்டுமே

யாழ்ப்பாணம், செப். 12

நல்லூர் கந்தசுவாமி ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வரும் உலகப்புகழ்பெற்ற இந்தியாவில் இருந்து வருகைதந்த பேராசிரியர் பிரதிப் குடினே குழுவினரின் மாஜாஜாலம் நிறைந்த மெகா மஜிக் நிகழ்ச்சி கடைசி நாளாக இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


**காணி தேவை**

யாழ்ப்பாண நகரத்தில் இருந்து 5 Km சுற்று வட்டத்திற்குள் 30 - 70 பரப்புக்காணி தேவைப் படுகிறது. விற்கவோ அல்லது நீண்ட கால குத்தகைக்கு கொடுக்கவோ விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு இலக்கம் - 0771352469

**மொழிபெயர்ப்பாளர் தேவை**

தமிழில் இருந்து சிங்கள மொழிக்கு சைவ சமயத் தோத்திரத் தொகுப்பான பன்னிரு திருமுறையின் 18246 பாடல்களை மொழிபெயர்க்க.

தொடர்புகொள்ள: மறவன்புலவு க.சச்சிதானந்தன் 0772754864, 0729569823

**காணி தேவை**

நாவலர் மடத்துக்கும் மாலு சந்திக்கும் இடையில் யாழ். பருத்தித்துறை வீதியில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்கு உடன் தேவை.

தொடர்பு : 0776627944

**தேசிய ரீதியில் யாழ்.மண்ணின் பெருமையை பறைசாற்றிய கல்லூரிகளை வாழ்த்துகின்றோம்**

உடற்பயிற்சிப் போட்டி (தேசிய நிலை)
- ★ முதலாம் இடம்: யா/இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி
- ★ 2 ஆம் இடம் : யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி
- ★ 4 ஆம் இடம் : யா/இளவாலை கன்னியர் மட மகாவித்தியாலயம்

வாழ்த்துவோர்: யாழ்.நகரில் விளையாட்டு உபகரணங்கள் உடற்பயிற்சி சாதனங்களின் விற்பனை முன்னணி நிறுவனம்

**ஒலிம்பியா ஸ்போட்ஸ்**

இல.06, ஜம்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**CHEMISTRY COURT**
80, ARASADY ROAD, JAFFNA
CHEMISTRY
2011 - A/L DAY CLASS
பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கானது
ஆரம்பம் : 18.09.2010 சனி
பிரிவு I - Sat., Sun. - (7.30 - 9.30 A.M.)
பிரிவு II - Tue., Thr. - (3.30 - 5.00 P.M.)
- அலகு ரீதியான மீட்டல்
- மாதிரி வினாவிடை
- கடந்தகால வினாத்தாள் மீட்டல்
- மாதிரிப் பரீட்சைகள்

BY RAJAH

**ESOFT**
The Leader in Professional IT Education
ESoft Computer Studies
114, 267, Navalar Road, Jaffna.
T.P: 0212224142, 0217501120



**DIPLOMA COURSES**
- Dip. in Information Technology (DiTEC)
- Dip. in Web Engineering (DiWE)
- Dip. in Bussiness Management (DiBM)
- Dip. in Software Engineering (DiSE)

NEW BATCHES START ON
13 - 09 - 2010 8.30 A.M
- 13 th Batch - full
- 14 th Batch - full
- 15 th batch - ______
- 16 th batch - ______

Jaffna - 021222 0345 Chavakachcheri - 021227 0333
Nelliyady - 021226 4940 Killinochchi - 021228 5444

**SM Consultant Services**



இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

இலண்டனில் உயர்கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

G.C.E O/L English: B அல்லது IELTS உடன் இலகுவாக உடனடியாக விசாக்கள் பெற்றுத்தரப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்புகொண்டு தேவையான விவரங்களைச் சமர்ப்பித்து விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**STUDY IN UKRAINE**

வேறு எங்கும் இல்லாதவாறு மிகக்குறைந்த கட்டணத்தில் Lugansk & Crimea State Medical University - (Ukaraine) இல் இணைந்து சிறீலங்கா Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக வர விரும்பினால் உடன் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

**STUDY IN INDIA**

இந்தியாவில் பிரபலமான SRM University, Bangalore University, Madras University என்னும் இது போன்ற பிரபலமான கல்லூரிகளில் கற்பதற்கு உடன் அனுமதிகள் பெற்றுத்தரப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

பாடநெறிகள்: B.E., B.Sc., B.Ed., BBM, B.Com, B.PT, BA, LL.B., M.Sc., MBBS, MBA

அனைத்து விவரங்களுக்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம். அனைத்துச் சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

SM Consultant services
148, கோவில் வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.
Mobile: 0774528818, Tel: 0215673818, Fax: 0212223818.
E-mail: mg1404_2009@yahoo.com

**தேவை**

புங்கங்குளம் (யாழ்.கச்சேரிக்கு அருகில்) ஏ-9 வீதியில் அமைந்துள்ள ஐஸ்கிறீம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை (பெண்கள்).
T.P.: 0777215005

**வீடு வாடகைக்கு**

இல. 113, செம்மணி வீதி, நல்லூரில் சகல வசதிகளுடன் கூடிய நவீன முறையிலான 5 அறைகள் கொண்ட விசாலமான வாகன தரிப்பிட வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

★ அலுவலக பாவனைக்கு முன் உரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0775581490

தற்போது தரம் 4 கற்கும் மாணவர்களுக்கான

**புலமைப் பரிசில் வகுப்பும் மாதிரிப் பரீட்சையும்**

ஆரம்பம்: 15.09.2010 புதன் பி.ப. 3.30 மணி
- யாழ்.நகரின் பிரபல பயிற்றப்பட்ட ஆசான்களின் கற்பித்தலில்...
- ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனி கவனத்துடன் கற்பித்தல்.
- ஞாயிறு தோறும் மாதிரிப் பரீட்சை.
- ஒவ்வொரு பிரிவிலும் 40 மாணவர்கள் மட்டும் அனுமதி.
- நேர சூசி அலுவலகத்தில் பெறவும்.

**நாவலர்**
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில்

**மிஹின் லங்கா**



**மிஹின் லங்கா**
தனது புதிய கிளையை
இன்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை
யாழ்ப்பாணம், இல 289, ஸ்ரான்லி வீதியில் ஆரம்பிக்கிறது.
இப்புதிய கிளை
அனர்த்த முகாமைத்துவ
**அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி**
மற்றும்
பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி
**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**
ஆகியோரால் திறந்து வைக்கப்படும்.



தங்கள் வெளிநாட்டு விமானசேவைக்கு யாழ் மக்கள் இனி நாடவேண்டிய இடம்

MIHIN LANKA Yours to fly

மிஹின் லங்கா வானம் உங்கள் வசம்

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வீடு கட்டுதல், திருத்துதல், மாபிள் பதித்தல், சுற்றுமதில் கட்டுதல் போன்ற வேலைகள் குறித்த காலத்தில் தரமாகவும் நியாயவிலையிலும் செய்து கொடுக்கப்படும்.

AXSHAYA CONSTRUCTIONS, JAFFNA.
T.P: 0776679564, 021 320 7202

**ESOFT**
The Leader in Professional IT Education



ESoft Computer Studies
114, 267, Navalar Road, Jaffna.
T.P: 0212224142, 0217501120

கொழும்பின் பிரபல விரிவுரையாளர்களின் கற்பித்தலில், குறுகிய காலப்பகுதியில்.
NEW BATCHES START ON
15 - 09 - 2010

**Auto CAD 2D 3D**
**C / C++, Java**

Jaffna - 021222 0345 Chavakachcheri - 0212270333
Nelliyady - 021226 4940 Killinochchi - 021228 5444


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கண்ணைப் பார்த்தே நீரிழிவு நோயைக் கண்டறியலாம்!

நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகிறது. வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்பது போல குடும்பங்கள் தற்போது வீட்டுக்கு ஓரிரு நீரிழிவு நோயாளிகளை வளர்த்து வருகிறது என்பது உலகையே கவலைக்குள்ளாக்கி யிருக்கிறது.

வெகு சாதாரணமாக எனக்கு நீரிழிவு நோய் இருக்கு என்று சொல்லித் திரியும் மக்களுக்கு அந்த நோய் குறித்த முழுமையான புரிதல் இருப்பதில்லை. உடலிலுள்ள எல்லா உறுப்புகளையும் சென்று தாக்கி பலமிழக்கச் செய்து, செயலிழக்க வைத்து ஒட்டு மொத்த உடலையே அழிக்கும் கொடிய நோய் தான் நீரிழிவு நோய் என்றால் பலர் பயப்படக் கூடும்.

உடலிலுள்ள இன்சுலின் அளவு தான் இந்த நோய்க்கான காரணம் என மேலோட்டமாகச் சொல்லிவிடலாம். அதாவது கணையத்திலிருந்து சுரக்கும் இந்த இன்சுலின் அளவுக்கு அதிகமாகச் சுரந்தாலும், சாதாரண அளவை விடக் குறைவாகச் சுரந்தாலும் பிரச்சினை தான்.

இந்த இன்சுலின் என்ன தான் செய்கிறது? என்று கேட்பவர்களுக்கு சுருக்கமாகச் சொல்லவேண்டுமெனில், இது தான் நாம் உண்ணும் உணவிலுள்ள குளுகோஸை கிரகித்து உடலின் உறுப்புகளுக்குத் தேவையான ஆற்றலாக மாற்றுகிறது. இந்த இன்சுலில் குறைவாக இருந்தால் குளுகோஸ் சத்து முழுவதும் உறிஞ்சப்படாமல் போய்விடுகிறது. அதிகமாகச் சுரந்தால் அளவுக்கு அதிகமாக குளுகோஸ் சத்து உறிஞ்சப்பட்டு சட்டென உடலில் குளுகோஸ் அளவு குறைந்துவிடும்.

இதனால்தான் சிலர் நீரிழிவு நோய்க்காக பையில் எப்போதும் மாத்திரைகள் அல்லது ஊசி வைத்திருப்பார்கள். சிலர் நீரிழிவு நோய்க்கு மருந்தாக இனிப்பை வைத்திருப்பார்கள். அதன் காரணம் இது தான்.

இந்த நோயாளிகளுக்கு இருக்கும் மிகப்பெரிய பிரச்சினை மருத்துவப் பரிசோதனைகள் தான். அடிக்கடி கையில் ஊசி குத்தி இரத்தம் எடுத்து எடுத்தே அவர்கள் கைகள் புண்ணாகிப் போய்விடுவதுண்டு. இந்த அவஸ்தையை காலம் முழுவதும் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தாக வேண்டுமே எனும் கவலைதான் அவர்களை ஆட்டிப் படைக்கும்.

அப்படிப்பட்டவர்களுக்கு சற்று ஆறுதலளிக்கும் தகவலாக பின்வரும் விடயம் அமைகின்றது. அதாவது, தற்போது ஒரு புதிய கருவி ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கருவியை கண்ணின் ஓரத்தில் வைத்துவிட வேண்டும். இந்த கருவி புற ஊதாக் கதிர்களை வெளியிடக் கூடிய கருவி. அதாவது உடலில் குளுக்கோசின் அளவு அதிகரித்தால் இந்த கருவியிலிருந்து வெளிவரும் கதிர்கள் அதிகமாக இருக்கும். இந்த வெளிச்சத்தை சாதாரண கண்களால் பார்க்க முடியாது. அதன் அளவை அறிய ஒரு சிறு தீப்பெட்டி அளவே உள்ள ஒரு சிறு கருவியை (புளூரோ போட்டோ மீட்டர்) கண்ணின் முன்னால் ஒரு இருபது வினாடிகள் காட்ட வேண்டும்.

அவ்வளவு தான் சோதனை முடிந்தது. அந்த சிறு கருவி சொல்லிவிடும் உங்கள் உடலிலுள்ள குளுக்கோசின் அளவை. அதாவது கண்ணில் ஒரு சிறு கருவி, அதிலிருந்து வெளிவரும் கதிர்களை ஆராய ஒரு சிறு கருவி அவ்வளவு தான். எத்தனை முறை வேண்டுமானாலும் உடலிலுள்ள குளுக்கோசின் அளவைச் சோதித்துக் கொள்ளலாம். வரிசையில் காத்திருக்க வேண்டியதும் இல்லை ஊசி குத்தும் அவஸ்தையும் இல்லை.

உடலிலுள்ள இண்டர்ஸ்டிஷியல் எனும் திரவத்தைக் கொண்டே இந்த கருவி இயங்குகிறது. இந்த கருவியின் வரவு பல்வேறு நாடுகளிலுமுள்ள மருத்துவர்களை பெரிதும் கவர்ந்திருக்கிறது. ஐசென்ஸ் எனும் ஜேர்மன் நிறுவனத்தின் கண்டுபிடிப்பான இந்தக் கருவி மருத்துவ உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.

சரி இந்தக் கருவியைக் கண்ணில் பொருத்துவது எப்படி என வினவினால், கண்ணின் ஓரமான ஒரு துளி மருந்தை விடுவோம். கண்ணின் அந்தப் பகுதி மரத்துப் போய்விடும் மெல்லிய ஒரு ஊசியால் இந்தக் கருவியை அங்கே வைத்து விட வேண்டியதுதான். அதிகபட்சம் மூன்று நிமிட வேலை என புன்னகைக்கின்றனர்.

ஒரு வருடத்துக்கு ஒருமுறை இந்தக் கருவியை மாற்றி புதிதாய் வைத்து விடவேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

இந்த கண்டுபிடிப்பு இன்னும் பல சோதனை ஆய்வுகளைக் கடந்து விரைவில் சந்தைக்கு வரவேண்டும் என்பதே நோயாளிகளின் விருப்பமாக இருக்கக் கூடும்.


**B.Sc. Engineering** (B.Sc. பொறியியல்) மற்றும்
**B.Sc. Computer Science** (B.Sc. கணனி விஞ்ஞானம்)
உலகின் தலைசிறந்த பொறியியல் பல்கலைக்கழகம்

ASIAN INSTITUTE OF TECHNOLOGY 1959
**AIT**
**Asian Institute of Technology**
வழங்கும் பட்டப்படிப்பு

- BSc Eng Civil & Infrastructure Engineering
- BSc Eng Mechatronics Engineering
- BSc Eng Telecommunication Engineering
- BSc Eng Electronics Engineering
- BSc Eng ICT Engineering
- BSc Computer Science & IT



- சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற பொறியியல் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நான்கு வருட முழுநேர உயர் தரமிக்க கற்கைநெறி.
- உயர் பெறுபேறுகளை பெறுகின்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில்.
- இறுதி இரண்டு ஆண்டிற்கான பாடநெறி மற்றும் செயல்முறைப் பாடநெறி அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு.
- பட்டதாரிகளுக்கு சர்வதேச முன்னோடி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு.
- பாடநெறிகள் மற்றும் கருத்தரங்குகள் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களினால் அதிநவீன ஆய்வுகூடங்கள் மற்றும் மண்டபங்களில் நடத்தப்படும்.
- பாடநெறிக்கான கட்டணம் தவணை முறையில் கட்டுவதற்கான சலுகை மற்றும் இலங்கை வங்கியில் மாணவர்களுக்கான கடன் வசதிகள்.
- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தகமைகள்:
உயர்தர கணிதத்தில் மூன்று சித்திகள்.
2010 உயர்தர முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம் (பாடநெறிக்கான மாணவர் தெரிவுகள் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும்) மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படும்.
விண்ணப்பங்கள் மற்றும் மேலதிகவிபரங்களுக்கு :

**0112 413331, 0777 269973, 0716 212121**
**0773 837373, 0774 747081**

**Education Fair**
யாழ்ப்பாண மத்திய கல்லூரியில்
2010 செப்டம்பர் 18ம் 19ம் திகதிகளில்
மு.ப. 10.00 மணிமுதல் பி.ப. 5.00 மணிவரை

**SAITM**
தபால் பெட்டி :11, IT பார்க், மாலபே.

Gnanaloka
Education with Character
SAITM
South Asian Institute of Technology and Management
**www.saitm.edu.lk**

South Asian Institute of Technology and Management, Millennium Drive, IT Park, Malabe Fax : +(94) 112 413332 info@saitm.edu.lk



சித்தாலேபப்
சித்தாலேப நம் நாட்டின் பொக்கிஷம்



LOTUS BRAND
Plastic Bucket
Hotline: 038 2232962

எந்தவொரு வாளியையும் வெற்றிகொள்ளும் சக்தி




குறைந்த விலையில் நீடித்த பாவனை, இரும்பு போன்று தகராது துருப்பிடிக்காது, பாவனைக்கு இலகுவானது
லோட்டஸ் பிளாஸ்டிக் வாளிகள் உறுதியான வாளிகள்

லோட்டஸ் பிளாஸ்டிக் வாளிகள் பின்வரும் வேலைகளுக்கு மட்டுமன்றி ஏனைய சகலவித தேவைகளுக்கும் பயன்படுத்த முடியும் என்பதே அதன் விசேட தன்மையாகும்.
• கட்டட வேலைக்காக • விவசாயத் தேவைகளுக்காக • தொழிற்சாலைகளின் உபயோகத்திற்கு

விற்பனை மற்றும் விநியோகத்தர்கள்
Keselwatta Agencies (Pvt) Ltd.
224, Diggala Road, Keselwatta, Panadura, Sri Lanka.
E-mail: sales@keselwattagroup.com / www.keselwattagroup.com
KAL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் அந்த நாளைய பண்பாட்டை ஆவணமாக்கிப் பேணிய கடேற் வூல்வ்

யாழ்ப்பாணத்தவர்கள் தமிழர்கள். இந்துக்கள். சிங்களவர்களை விடக் கறுப்பானவர்கள். இருண்ட தோற்றமுடையவர்கள். கண்டியிலோ கொழும்பிலோ உள்ள, சிங்களர்களை விட நிறம் குறைந்தவர்கள். நான் படித்த முதலாவது கீழைத்தேச மொழி தமிழ். தமிழர்கள் கடின உழைப்பாளிகள். ஏனையவர்களை விடக் கடுமையாக உழைக்கிறார்கள். முட்கள் நிரம்பிய மண், விவசாயத்திற்கு உகந்ததாகக் காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் சனத்தொகை அடர்த்தியாகக் காணப்படுகிறது. இந்துக்கள் ஒவ்வொரு குடும்பத் தவரும் தமக்கெனத் தனித்தனி வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர். வீட்டைச் சுற்றி வளவும் உயர்ந்த கிடுகு வேலியும் காணப்படுகிறது. வீடுகள் எதிரும் புதிருமாகக் காணப்படுகின்றன. கிடுகு வேலிகளுக்கிடையே இரு நீளமான பாதைகள் காணப்படுகின்றன. வேலிகளின் பின்னால் உயரமான மரங்கள் வேலிகளைத் தாங்கிக் கொண்டு நிற்கின்றன. கிராமங்களில் உஷ்ணம் அதிகமாகக் காணப்படுகின்றது. நிலம் சம தரையாக எங்கும் காணப்படவில்லை. கூடுதலான இடங்களில் இடைக்கிடை பனை மரங்கள் காணப்படுகின்றன. பகல் முழுவதும் சூரிய ஒளி நிலத்திலடிக்கிறது. மாலையில் சிவப்பும் நீலமும் கலந்த ஒரு புதுவிதமான நிறத்தில் வானம் காணப்படுகிறது.

நான் யாழ்ப்பாணத்தை அடைந்த போது பின்னாளில் கம்பியா (Gambia) ஆளுநராகப் பதவி வகித்தவரும் எனது சகோதரி பெல்லாவை (Bella) மணந்து கொண்டவருமான வில்பிரட் தோமஸ் சௌதேர்ண் -(Wilfred Thomad Southern) அலுவலக உதவியாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இந்த இடத்தில், நான் 1905ஆம் ஆண்டின் இலங்கை நிர்வாக சேவையைப் பற்றியும் சொல்ல வேண்டும். இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சில மாகாணங்கள் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. வடமாகாண அரசாங்க அதிபர் எப்போதும் ஏனைய அரசாங்க அதிபர்களை விட சேவையில் மூத்தவராக (Senior) காணப்பட்டார். இலங்கை நிர்வா சேவையில் குறைந்தது 20 வருடங்கள் சேவையாற்றிய வர்களே யாழ்ப்பாண அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டனர்.

வடமாகாணத்தின் முக்கிய நகரமான யாழ்ப்பாணத்தில் கச்சேரி அமைந்திருந்தது. கச்சேரி அரசாங்க அதிபரின் வாசஸ்தலமாகவும் விளங் கியது. யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் உதவி அரசாங்க அதிபரின் பொறுப்பில் விடப்பட்டன. உதவி அரசாங்க அதிபராக வருவதற்கு இலங்கை நிர்வாக சேவையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு வருடங்கள் கடமையாற்றியிருக்க வேண்டும். உதவி அரசாங்க அதிபர்கள் அரசாங்க அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டிலிருந்தனர். ஆனால் போக்குவரத்துப் பிரச்சினையுள்ள (தூர) இடங்களில் கடமையாற்றிய உதவி அரசாங்க அதிபர்களுக்கு சுயாதீனமாக முடிவுகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

**ஆவணப் பெட்டகம் 10**

1905ஆம் ஆண்டு 50 வயதான ஜோன் பெரிலூயிஸ் யாழ்ப்பாண அரசாங்க அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபராக 28 வயதான ஜோன் ஸ்கொட்டும், முல்லைத் தீவு மாவட்ட உதவி அரச அதிபராக 30 வயதான ஆர். ஏ.ஜி. பெஸ்ரிங்கும் (R.A.G. Festing) கடமையாற்றிக் கொண்டிருந்தனர்.

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

கடிதத் தொடர்புகள், அனுமதிப்பத்திரங்கள் விநியோகம், கணக்கு வழக்குகள் போன்றவற்றைக் கையாள்வதற்கு துடியாட்டமுள்ள இளம் சிவில் நிர்வாக உத்தியோகத்தர்கள் (Civill servants) அரசாங்க அதிபரின் கீழ் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். இவர்கள் சில சமயங்களில் தாமாகவே முடிவுகளை எடுத்தனர். சில சமயங்களில் அரசாங்க அதிபரின் முடிவுக்கு சில விடயங்களைச் சமர்ப்பித்தனர்.

அரசாங்க அதிபரின் கீழ் இரு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். முதலாவது சிரேஷ்ட அதிகாரி அலுவலக உதவியாளர் (O.A) இவர் ஒன்று தொடக்கம் ஆறு வருடங்கள் குடியியல் சேவை (Civill service) அனுபவமுடையவராயிருந்தார். அடுத்தது கனிஷ்ட உத்தியோகத்தர் மற்றும் கடேற் உத்தி யோகத்தர். புதிதாக சிவில் சேவையில் இணைந்து கொள்ளும் உத்தியோகத்தர்கள் கடேற் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். கடேற் அதிகாரி குடியியல் சேவையைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் அவரது எதிர்கால நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவும் நோக்குடனுமே கடேற் பதவி புதிதாக குடியியல் சேவையில் இணைந்து கொள்பவர்களுக்கு வழங்கப்பட்டது. கடேற் அதிகாரியாகக் கடமையாற்றுபவரின் பதவி மீது அலுவலக உதவியாளர், அரசாங்க அதிபர் போன்ற வர்களின் செயற்பாடுகள் செல்வாக்குச் செலுத்தும். அதாவது கடேற் உத்தியோகத்தாரைப் பற்றி குடியேற்ற நாடுகளின் செயலாளருக்கோ, உதவி குடியேற்ற நாடுகளின் செயலாளருக்கோ சிபார்சுகள் அரசாங்க அதிபராலும், அலுவலக உதவியாளராலுமே மேற்கொள்ளப்படும். குடியேற்ற நாடுகளின் செயலாளரோ உதவியா ளரோ நேரடியாக வந்து ஒன்றையும் பார்க்கமாட்டார் கள். கடேற் உத்தியோகத்தரின் பதவியுயர்வு போன்ற விடயங்கள் அரசாங்க அதிபரினதும், அலுவலக உதவியாளரினதும் கைகளிலேயே தங்கியிருந்தன. பொலிஸ் நீதிவான், மாவட்ட நீதிபதி பதவிகளுடன் ஒப் பிடும் போது அலுவலக உதவியாளர் பதவி பரவாயில்லை. அலுவலக உதவியாளருக்கு அடுத்த பதவி, உதவி அரசாங்க அதிபர் பதவி தான். திறமையாகச் செயற் பட முடியாத சிவில் அதிகாரிகளே பொலிஸ் நீதிவான்களாக நியமிக்கப்பட்டனர். மாவட்ட நீதிபதிகள் சிறந்த ஆளுமையுள்ளவர்களாக விளங்கினர். 01.05.1905 அன்று நான் யாழ்ப்பாணக் கச்சேரியில் கடேற் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டேன்.

**தாண்டவன்**

(வளரும்)

# பல்லுக்கு வலிமை தரும் சக்தி பாக்குக்கு மருத்துவக் குணம் பல கொண்ட நெல்லி வற்றல்

**பாக்குமரம்**

**வேறுபெயர்கள் :** கமுகு மரம், அடைக்காய்.
**தாவரவியற்பெயர்:** Areca catechu (அரிக்கா கற்றச்சு)
**குடும்பம் :** Palmaceae பாமேசியே
**சிங்களப்பெயர் :** புவக்
**சமஸ்கிருதப்பெயர் :** பூகிபலம், கிரமுக
**ஆங்கிலப் பெயர் :** Betel nut, Arecanut

வெற்றிலையும் பாக்கும் இணைபிரியாத கூட்டுப் பொருள்கள். பாக்கு மரம் (கமுகுமரம்) தென்னை மரம் போன்று உயர்ந்து வளரும் ஒரு மரமாகும். இதன் இளங்குருத்தை எண்ணெயிலிட்டு வதக்கி வாத வீக்கம் மூட்டு நோவுகளுக்கு வைத்துக் கட்டலாம்.

பாக்கை வெற்றிலையுடன் சேர்த்து உண்பதால்



செரியாமை, வயிற்றுப் பொருமல், மந்தம் முதலியன நீங்கும். பச்சைப் பாக்கை வாயிலிட்டுச் சப்புவதால் சளி வெளியாகும். இருமல் நீங்கும். பாக்கைச் சுட்டுச் சாம்பலாக்கி அதற்குச் சம அளவு காசுக்கட்டியும், இலவங்கமும் சேர்த்துப் பொடி செய்து அதனால் பல் துலக்கி வந்தால் பல்வலி, பல்லீறு களில் இரத்தம் வடிதல் நீங்கும். பற்களும் வலிமை பெறும்.

**நெல்லி**

**தாவரவியற்பெயர்:** Emblica officianalis (எம்பிளிக்கா ஒபிசியனாலிஸ்)
**குடும்பம்:** Euphobiaceae யூபோபியேசியே
**சிங்களப் பெயர்:** நெல்லி
**சமஸ்கிருதப் பெயர்:** ஆம்லகீ
**ஆங்கிலப் பெயர்:** Indian Goosberry

நெல்லிக்காயானது புளிப்புச் சுவையுள்ளதால் ஆம்லகம் என்றும், தாயைப் போன்று ஒருவரைக் காப்பதால் தாத்திரி என்றும் அமிர்தத்துக்கு ஒப்பானதால் அமிர்தபலம் என்றும் அழைக்கப்படுகிறது. ஒளவையாருக்கு அதிகமான் நீடித்த ஆயுளைக் கொடுக்கும் ஓர் அபூர்வ நெல்லிக் கனியை வழங்கினான் என்பது சங்ககாலச் சம்பவம். சாதாரண நெல்லிக் கனியைக் கூட முறைப்படி உண்டு வந்தால் நீடித்த ஆயுளுடன் வாழமுடியும்.

நெல்லிக்காயில் அறுஞ்சுவைகளில் உப்புச் சுவை தவிர ஏனைய ஐந்து சுவைகளும் உண்டு. நெல்லிக்கனி யானது நாக்குச்சுவையின்மை(அருசி) யைப் போக்குவ துடன் பசியையும் உண்டாக்கும். பித்தத்தைச் சாந்தப்ப டுத்தும். காய்ச்சல் காரணமாக வாய்க்கசப்பும், நாச்சுவையின் மையும் ஏற்படும் போது நெல்லிக்காயைச் சுவைப்பதன் காரணம் இதுவே. மேலும் உபவாசம் இருப்பவர்களிலும் நாக்குச் சுவையுணர்வு குன்றியிருப்பதுடன் பசியுணர்வும் குன்றியிருக்கும். எனவேதான் உபவாசம் முடிந்து பாரணை செய்யும் போது அவர்களின் உணவில் நெல்லிக்காய் சேர்ந்த துவையல், பச்சடி அல்லது ஊறுகாய் அவசியம் இடம்பெற வேண்டும் என்று விதித்துள்ளனர்.

கர்ப்பிணிகளுக்குண்டாகும் காலைவாந்தி, மசக்கை என்பவற்றக்கும் நெல்லிக்கனி இலகு மருந்தாகிறது.

நெல்லிக்கனிச்சாற்றுடன் சமவளவு தேன் கலந்து தினமும் காலைவேளையில் ஒரு மேசைக்கரண்டியளவில் பருகிவந்தால் சுவாசப்பை சம்பந்தமான நோய்கள், பார்வைக் கோளாறு, தலைமயிர் உதிர்தல் என்ற குறைபாடுகள் நீங்கும்.

நெல்லிக்காயை உலர்த்தி, விதையை நீக்கி எடுக்கப் படும் கருநிறமுடைய வற்றலுக்கு நெல்லி வற்றல் அல்லது நெல்லிமுள்ளி என்றும் பெயர். நெல்லிக் காய் கிடைக்காத வேளையில் அதற்குப் பதிலாக இதை உபயோகிக்கலாம். நெல்லிக்காயிலும், நெல்லிமுள்ளி யிலும் உயிர்ச்சத்து C அதிகளவில் உள்ளது. எனவே இது பலவிதமான தோல்வியாதிகளையும் போக்கவல்லதாயுள்ளது.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

நெல்லிமுள்ளி, கடுக்காய்த்தோல், தான்றிக் காய்த் தோல் ஆகிய மூன்றையும் சமவளவில் எடுத்து பொடி செய்து வைத்துக் கொண்டு தினமும் காலை, மாலை பாதி முதல் ஒரு கிராம் அளவில் சுடுநீரில் சாப்பிட்டு வந்தால் உடற்பருமன் ஆச்சரியப்படத்தக்க முறையில் குறையும். ஆனால் இதைச் சாப்பிடும் போது கொழுப்பு [illegible] விலக்குதல் வேண்டும்.

மேற்படி பொடியைப் பனங்கட்டி அல்லது சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டுவந்தால் மலச்சிக்கல், பித்தக் கோளாறுகள், குருதியழல், வயிற்றுப் பொருமல் என்பவை நீங்கும்.



நெல்லி முள்ளியைக் குடிநீர் செய்து குடித்தால் தாகம், ஓங்காளம், வாந்தி, பித்தக்கிறுகிறுப்பு என்பன மாறும்.

நெல்லி முள்ளியை அரைத்து விழுதாக எடுத்து தலைக்குத் தேய்த்து முழுகி வந்தால் உடற்சூடு, கண்ணெரிச்சல் என்பன நீங்குவது டன் தலைமயிரும் நன்கு வளரும்.

நெல்லி இலைக் கொழுந்தை அரைத்து மோரில் கலந்து காலை, மாலை கொடுத்துவந்தால் சீதபேசி மாறும். மூலரோகத்தில் இரத்தம் வெளியாகும் நிலைக்கும் இது நிவாரணம் தரக்கூடியது.****



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org